
www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

நவம்பர் 2006
ரூ. 5.00



## அமெரிக்க விசுவாசமே அடிமையின் சுவாசம்!

# “ஆலையை மூடி வயிற்றிலடிக்காதே!”
## – ஏசியன் பேரிங் ஆலைத் தொழிலாளர்களின் போராட்டம்

ஓசூர் அருகே பாகலூர் ஊராட்சியைச் சேர்ந்த பௌத்தூரிலுள்ள ஏசியன் பேரிங் லிமிடெட் (ABL) என்ற ஆலை கடந்த 10 மாதங்களாகச் சட்டவிரோதமாகக் கதவடைப்பு செய்யப்பட்டு, அங்கு வேலை செய்து வந்த 700-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் குடும்பத்தோடு பட்டினியால் பரிதவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இச்சட்டவிரோதக் கதவடைப்பை ரத்து செய்து, ஆலையை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்ற கோரிக்கையுடன், உள்ளூர் மக்களின் ஆதரவோடு ஒருநாள் கடையடைப்புப் போராட்டத்தை, ஏற்கெனவே 24.2.06-இல் தொழிலாளர்கள் நடத்தினர். ஆனாலும் ஆட்சியாளர்களோ, தொழிலாளர் நலத் துறையோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தேர்தல் வந்தது; புதிய ஆட்சி வந்தது. அதன் பிறகும் எந்த நடவடிக்கையும் இல்லை. தொழிலாளர்கள், தமது சங்கத்துக்கு வெளியிலுள்ள கே.ஜி. பிரகாஷ் என்ற வழக்குரைஞரைத் தலைவராக்கித் தீர்வு காண முயன்றனர். அவரோ பேச்சுவார்த்தை நாடகமாடிப் பிரச்சினையை இழுத்தடித்தார். இதைக் கண்டு வெகுண்டெழுந்த தொழிலாளர்கள், கடந்த 24.9.06 அன்று பொதுக் குழுவைக் கூட்டி, துரோகத் தலைவர் கே.ஜி. பிரகாஷை விரட்டியடித்துவிட்டு, தமக்குள் ஒரு போராட்டக் குழுவை அமைத்து, அதன் தலைமையில் 5.10.06 அன்று சாலை மறியல் போராட்டம் நடத்துவதென முடிவு செய்தனர்.

அதன்படி, 5.10.06 அன்று காலை பாகலூர் சர்க்கிள் அருகே தொழிலாளர்கள் தங்களின் குடும்பத்தோடு திரண்டதோடு, அவர்களுக்கு ஆதரவாக உள்ளூர் மக்களும் பல்வேறு சங்கங்களும் திரண்டு ஏறத்தாழ ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் எழுச்சிமிகு சாலை மறியல் போராட்டத்தை நடத்தினர். இப்போராட்டத்தில், ஓசூர் வட்டத்தில் செயல்பட்டு வரும் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியைச் சேர்ந்த தோழர்களும் பங்கேற்றனர். இப்போராட்டத்தின் நியாயத்தை விளக்கி, பு.ஜ.தொ.மு. தோழர் பரசுராமன், போராடும் மக்களிடம் ஆற்றிய உரையும் தோழர்களின் உணர்ச்சிமிகு முழக்கங்களும் போராட்ட உணர்வைத் தட்டியெழுப்புவதாக அமைந்தது. இதைக் கண்டு பீதியடைந்த போலீசு, தோழர் பரசுராமன் உள்ளிட்ட பு.ஜ.தொ.மு. தோழர்களைக் குறிவைத்து கைது செய்யப் பலவந்தமாக இழுத்தபோது, போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பெண்கள் ஆவேசமடைந்து போலீசின் அராஜகத்துக்கு எதிராக முழக்கமிட்டு, போலீசாரைத் தடுத்து நிறுத்திப் போராடினர். ஆத்திரமடைந்த போலீசு, மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட அனைவரையும் கைது செய்து பேருந்துகளில் ஏற்ற முற்பட்டது.

இதைக் கண்ட தொழிலாளர் குடும்பங்களைச் சேர்ந்த, அரசு மேனிலைப்பள்ளியில் படிக்கும் மாணவர்கள் 200-க்கும் மேற்பட்டோர் முழக்கமிட்டபடியே அப்பேருந்துகளை மறித்துப் போராட்டத்தில் இறங்கினர். திக்குமுக்காடிப் போன போலீசு, அவர்களையும் கைது செய்து அனைவரையும் உள்ளூரிலுள்ள ஒரு திருமண மண்டபத்தில் சிறைவைத்தது. அதன்பிறகு ஓசூர் வட்டாட்சியர் முன்னிலையில் தொழிற்சங்க நிர்வாகிகளையும் அரசியல் கட்சிப் பிரமுகர்களையும் வைத்து சமரசப் பேச்சுவார்த்தை என்ற பெயரில் மிரட்டிப் பார்த்தது. இதற்கெல்லாம் போராடும் தொழிலாளர்கள் மசிவதாக இல்லை என்று அறிந்ததும், இத்தொகுதி காங்கிரசு எம்.எல்.ஏ.வான கோபிநாத்தை அழைத்து, தொழிலாளர்களிடம் நைச்சியமாகப் பேசி இப்போராட்டத்தைக் கைவிடக் கோரியது.

சட்டமன்றத் தேர்தலின்போது, ‘‘நான் வெற்றி பெற்றால் ஏசியன் பேரிங் கம்பெனி பிரச்சினையைத் தீர்ப்பதுதான் முதல் வேலை’’ என்று வாக்குறுதியளித்துவிட்டு, வெற்றி பெற்ற பின்னர் இதுவரை எட்டிப் பார்க்காத எம்.எல்.ஏ. கோபிநாத், இப்போது சமரம் பேசவந்ததும் தொழிலாளர் குடும்பப் பெண்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு கேள்வி மேல் கேள்வி கேட்டு முற்றுகையிட்டதும், விழிபிதுங்கிய அவர் நழுவி ஓடிவிட்டார். பின்னர், கைது செய்யப்பட்ட அனைவரையும் விடுவிப்பதாக போலீசு அறிவித்தது.

தொழிலாளர்கள் குடும்பத்தோடு திரண்டு ஒற்றுமையாகவும் வர்க்க உணர்வோடும் தன்னெழுச்சியாக நடத்திய இப்போராட்டம், ஓசூர் வட்டார மக்களிடம் பெருத்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள போதிலும், போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கான வழிமுறை பற்றி தெளிவும் தொலைநோக்குப் பார்வையுமின்றி போராட்டக்குழு உள்ளது. குறுகிய தொழிற்சங்கவாத வட்டத்தை விட்டு வெளியே வருவதும், மறுகாலனிய சூழலுக்கேற்ற புதிய போராட்ட முறைகளை வகுத்து முன்னேறுவதும் இன்றைய தேவையாக உள்ளது.

**– புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, ஓசூர்.**

**பள்ளி மாணவர்களும் கலந்து கொண்ட சாலை மறியல் (இடது); கைது செய்யப்படும் தொழிலாளர் குடும்பத்தினர்.**



www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

**தொகுதி: 22**

**இதழ் 1**

நவ. 2006

*உள்நாடு*
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

*வெளிநாடுகள்*
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**

*படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்*



புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி: 94446 32561


# அமெரிக்க விசுவாசமே அடிமையின் சுவாசம்!

அக்டோபர் 9-ஆம் நாள், ஹவதேரி என்ற இடத்தில் வடகொரியா வெற்றிகரமாக அணுசக்தி சோதனையை நடத்தியது. அச்செயல் கிழக்கு ஆசியாவின் அமைதிக்கும் உறுதிப்பாட்டுக்கும் பேராபத்தானது என்றும் கடும் கண்டனத்துக்குரிய இரகசியமான அணு ஆயுதப் பரவல் என்றும் முதன்முதலாகக் குரலெழுப்பிய நாடு இந்தியாதான். அதைத் தொடர்ந்து வடகொரியாவின் அண்டை நாடுகளும், உலகின் அணு ஆயுத வல்லரசுகளும் அதை அப்பட்டமான, மிக மோசமான ஆத்திரமூட்டும் செயல் என்று வன்மையாகச் சாடின. உடனடியாக ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழு வடகொரியாவுக்கு எதிராக பல தடைகளை விதித்து, உலக வல்லரசுகளின் முன்பு மண்டியிடும்படி உத்திரவு போட்டது. வடகொரியா அதை ஏற்கவில்லை என்பது வேறு விசயம்.

ஆனால், இப்போது அணுசக்தி சோதனை நடத்தியதற்காக வடகொரியாவிற்கு எதிராக முதலில் தனது கடும் எதிர்ப்பைக் காட்டியது இந்தியாதான்; 1974-இல் முதன்முறையாகவும் 1998-இல் மீண்டும் அணுசக்தி சோதனை நடத்தியதன் மூலம் நீண்ட காலத்துக்குப் பிறகு அணு ஆயுதப் பரவலுக்குக் காரணமாக இருந்தது இந்தியாதான்; ஆனால், ''இந்தியாவோடு வடகொரியாவை ஒப்பிடவே கூடாது. இரண்டும் வேறு வேறு வகையான செய்கைகள்'' என்று மூர்க்கமாக வாதிடும் இந்தியா, ''இரகசியமான அணு ஆயுதப்பரவல்'' என்று சாடுகிறது. அதாவது, வடகொரியா தனது அணுசக்தி சோதனை முழுக்க முழுக்க தனது சொந்தத் தொழில்நுட்ப அடிப்படையிலானது என்று கூறியபோதிலும், அது பாகிஸ்தானுடன் கூட்டுச் சேர்ந்து நடத்தியது என்று சாதிக்கிறது, இந்தியா.

பாகிஸ்தானைவிட எல்லா இராணுவத் துறைகளிலும் வலிமையான நாடு இந்தியா என்று மூன்று போர்களில் இந்தியாவின் மேலாண்மை நிரூபிக்கப்பட்டு விட்டது. இருந்தபோதும் பாகிஸ்தானை உருட்டி மிரட்டிப் பணிய வைக்கவும், தெற்காசியாவில் தனது பிராந்தியத் துணை வல்லரசு மேலாதிக்க - விரிவாக்க நலன்களுக்காகவும் இந்தியா மீண்டும் மீண்டும் அணுசக்தி சோதனைகளை நடத்தியது. ஆனால், இந்தியாவின் இந்தச் செயல், உடனடியாகவே பாகிஸ்தானையும் அணுசக்திச் சோதனையிலும் இரண்டு நாடுகளும் மேலும் மேலும் ஆயுதக் குவிப்பு போட்டியிலும் ஈடுபடவே வழிவகுத்தன.

இப்போது இந்தியா - பாகிஸ்தான் ஆகிய இரண்டு நாடுகளுமே அணு ஆயுத முனைகளைக் கொண்ட ஏவுகணை சோதனைகளும் உற்பத்திகளும் செய்வதில் ஒருவரை ஒருவர் விஞ்சுவதற்கான போட்டியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன. தெற்கு ஆசிய அமைதிக்குப் பெரும் அச்சுறுத்தலாக விளங்கும் இந்தியா - பாகிஸ்தான் ஆகிய இரண்டு நாடுகளின் அணு ஆயுத-ஏவுகணை சோதனைகளுக்கும் உற்பத்திக்கும் எவ்வித நியாயமான காரணங்களும் இல்லாத அதேசமயம், இவ்விரு நாடுகளின் எஜமானனாகவும் அணு ஆயுத மேல்நிலை வல்லரசாகவும் உள்ள அமெரிக்காவின் மேலாதிக்கப் போர்வெறிதான், வடகொரியாவின் அணு ஆயுத - ஏவுகணை சோதனை மற்றும் உற்பத்தி முயற்சிகளுக்கு மூலகாரணமாகவும் தூண்டுதலாகவும் இருக்கிறது.

கம்யூனிச சீனா மற்றும் ரசிய சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் அணு ஆயுதக் கவசத்தின் கீழ் இருந்தவரை வடகொரியா அணு ஆயுதத் தயாரிப்பு முயற்சிகளில் இறங்கவில்லை. சீனாவில் முதலாளியம் நிலைநாட்டப்பட்ட பிறகு, அமெரிக்காவுடனான பனிப்போரில் சோவியத் ஒன்றியம் தோற்றுப்போன பிறகு, அமெரிக்காவுடன் சமரசம் செய்து கொண்ட வடகொரியா, 1985-இல் அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டது. 1992-இல் சர்வதேச அணுசக்தி முகமையோடு ஒரு பாதுகாப்பு ஒப்பந்தம் போட்டது. இதற்குக் காரணம் ஜப்பானிலும், கொரிய வளைகுடாவிலும் அமெரிக்கா குவித்து வைத்திருக்கும் அணு ஆயுதங்களை விலக்கிக் கொள்வதாக வாக்களித்தது. ஆனால் அமெரிக்கா அவ்வாறு செய்யாததோடு, வடகொரியாவில் உள்ள அணு ஆயுதம் அல்லாத வசதிகளையும் மேற்பார்வையிட வேண்டும் என்று நிர்பந்தித்து. ஆப்ஃகான், ஈராக்கோடு வடகொரியாவையும் சேர்த்து ''சாத்தான்களின் அச்சு நாடுகள்'' என்று அறிவித்தது. அமெரிக்காவின் ஆட்சி மாற்றத் திட்டத்துக்கான இலக்குகளில் ஒன்றாக வடகொரியாவை வைத்தது.

கொசாவோ, ஆப்ஃகான், ஈராக் என்று அடுத்தடுத்து பாசிச ஆக்கிரமிப்புப் போர்களை அமெரிக்கா தொடுத்ததோடு, வடகொரியாவும் அதன் தாக்குதலுக்கு இலக்காகும் என்று அச்சுறுத்தப்பட்டது. இந்த நிலையில் 2003-ஆம் ஆண்டே அணு ஆயுதப்

படிப்பகம்

www.padippakam.com

பரவல் தடை ஒப்பந்தத்தில் இருந்து விலகிய வடகொரியா, அணு ஆயுத் சோதனைகளைத் தொடர்ந்து நடத்தி வெற்றியும் கண்டுள்ளது.

''அணு ஆயுதப் போரில் வெல்லும் ஆற்றல் பெற்றிராத எந்தவொரு நாட்டு மக்களும் ஒரு சோகமான சாவையே எதிர்கொள்ள வேண்டி வரும்; அந்த நாட்டின் இறையாண்மை வெட்டிச் சிதைக்கப்படும். இது உலகின் பல்வேறு நாடுகளுக்கும், அமெரிக்காவின் காட்டாட்சி இரத்தம் சிந்தி புகட்டியுள்ள கசப்பான அனுபவம்'' என்று தமது அணு ஆயுதச் சோதனையை ஆறு நாட்களுக்கு முன்பே அறிவித்த வடகொரிய அயலுறவுத்துறை அமைச்சர் கூறினார். இது அமெரிக்க விசுவாசிகளான மன்மோகன் சிங்குகள் மறுக்க முடியாத அப்பட்டமான உண்மை நிலையாகும்.

அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தின்படியே கூட, ஒரு நாட்டின் பாதுகாப்புக்கு மிகவும் மோசமான அச்சுறுத்தல் வரும்போது, அந்த நாடு அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபடுவதற்குத் தடையில்லை. அதன் 10-வது பிரிவின்படி, ''தனது நாட்டின் அதீத நலன்களுக்குக் குந்தகம் ஏற்படும் எனில், இந்த ஒப்பந்தத்தின் உள்ளடக்கத்தோடு தொடர்புடைய மிக மிக முக்கியமான நிகழ்வுகள் நடந்துவிட்டதாக கருதினால், எந்தவொரு நாடும் தனது தேசிய இறையாண்மையைப் பயன்படுத்தி இந்த ஒப்பந்தத்தில் இருந்து விலகிக் கொள்ளலாம். ஒப்பந்த நாடுகளுக்கும் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புக் கவுன்சிலுக்கும் மூன்று மாதங்கள் முன்னதாக அந்த நாடு தனது விலகலைக் குறித்துத் தெரிவிக்க வேண்டும்.'' இங்கே குறிப்பிடப்படும் வகையிலான பேராபத்தை எதிர் கொண்டுள்ள வடகொரியா, மூன்றாண்டுகளுக்கு முன்னதாகவே அறிவித்து, அந்த தடை ஒப்பந்தத்தில் இருந்து விலகி விட்டது.

ஆனால், வடகொரியாவைப் போன்றதொரு ஆபத்து எதுவும் இல்லாத இந்தியா, அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தையே ஏற்காத இந்தியா, 30 ஆண்டுகளுக்கு முன்பே அணு ஆயுதப் பரவலுக்குக் காரணமாக இருந்த இந்தியா, வடகொரியாவின் மிகவும் அவசியமான தற்காப்பு முயற்சியை கடுமையாகக் கண்டிக்கிறது. வடகொரியாவைப் போலவே, அமெரிக்க பாசிச ஆக்கிரமிப்புப் போர் அச்சுறுத்தலுக்கு இலக்காகியுள்ள ஈரானுக்கு எதிராக சர்வதேச அணுசக்தி முகாமையில் இந்தியா ஓட்டளித்திருக்கிறது. அதன்மூலம் அமெரிக்கா, ஈரானை உருட்டி மிரட்டவும் ஆக்கிரமிப்புப் போர்தொடுக்க சாக்குப் போக்குச் சொல்வதற்கும் துணை புரிந்திருக்கிறது. இதன் விளைவாக, ஈரானுடனான இந்தியாவுக்கான தரைவழி எண்ணெய்க் குழாய் திட்டம் முறிந்து போனபோதும், அமெரிக்க விசுவாசமே முக்கியமானது என்று கருதி அதன் நிர்பந்தத்துக்குப் பணிந்து போயுள்ளது.

அமெரிக்காவின் தொங்கு சதை நாடான தென்கொரியாவிலேயே அமெரிக்க அயலுறவுத்துறை அமைச்சர் கண்டலிசா ரைஸை எதிர்த்த போராட்டம்.




அக்.9 அணு ஆயுதச் சோதனையின் மூலம், உலகின் அணு ஆயுத 'வல்லரசு' நாடாகியிருக்கும் வடகொரியா, அந்த வரிசையில் எட்டாவது நாடுதான். ஏற்கெனவே, ஏழு நாடுகள் அணு ஆயுதங்களையும் ஏவுகணைகளையும் செய்து குவித்து வைத்திருக்கின்றன. இவை தவிர இருபது நாடுகளில் அணு ஆயுதங்களையும் ஏவுகணைகளையும் அமெரிக்கா நிறுத்தி வைத்திருக்கிறது. உலகின் பெருங்கடல்வழித் தடங்களில் கூட அமெரிக்கப் போர்க் கப்பல்கள் அணு ஆயுதங்களையும் ஏவுகணைகளையும் ஏராளமாகச் சுமந்து திரிகின்றன. அணு ஆயுதங்களையும் ஏவுகணைகளையும் முற்றாக ஒழிப்பதற்கான வழிவகையின்றி, அணு ஆயுதப் பரவலுக்கு எதிராக வெறுங் கூச்சல் போடுவது, சாத்தான் வேதம் ஓதுவதைப் போன்றது; பாசிசப் போர் வெறிபிடித்த அமெரிக்காவுக்குத் துணை போவதுதான்.

எண்பதற்கும் மேலான அமெரிக்க சி.ஐ.ஏ.வின் படுகொலை முயற்சிகளைக் கண்டும் அஞ்சாத, எண்பது வயதுக்கும் மேலான கிழவன் ஃபிடல் கேஸ்ட்ரோவும், அமெரிக்காவின் வாசலில் நின்று கொண்டு அதன் அதிபர் ஜார்ஜ் புஷ்ஷுக்கு சவால் விடும் வெனிசுலா அதிபர் சாவேசிடம் தெரியும் நெஞ்சுரம் கண்டு உலகமே வியக்கிறது.

ஆனால், இந்தியப் பிரதமர் மன்மோகனின் கோழைத்தனமும் துரோகத்தனமும் கண்டு உலகமே கைகொட்டிச் சிரிக்கிறது. ஈரானுக்கு எதிராக வாக்களிக்கும்படி அமெரிக்க அயலுறவுச் செயலர் கண்டலிசா ரைஸ் உத்தரவு போடுகிறார். ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழு உறுப்பினர் தேர்தலில் வெனிசுலாவுக்கு எதிராக வாக்களிக்கும்படி அதிபர் புஷ் தொலைபேசியில் கூப்பிட்டு மிரட்டுகிறார். மன்மோகன் சிங்கோ தண்டனிட்டு தலைமேற்கொண்டு செய்து முடிக்கிறார். மும்பை குண்டு வெடிப்பில் பாகிஸ்தான் உளவு நிறுவனத்தின் பங்கு குறித்த ஆதாரங்களை அமெரிக்க அதிகாரிகளின் காலடியில் சமர்ப்பிக்கிறது, இந்தியா - ஏதோ அமெரிக்க சி.ஐ.ஏ.வுக்குத் தெரியாத இரகசியம் போல!

எல்லாம் அமெரிக்காவுடனான இந்தியாவின் இராணுவ - ஆயுத ஒப்பந்தங்களை குறிப்பாக, அணுசக்தி ஒப்பந்தத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத்தான் என்று மன்மோகன் சிங்கும் அவரது கோயபல்சுகளும் பிரச்சாரம் செய்கின்றனர். இந்தியாவின் இந்த ஒப்பந்தமே எவ்வளவு துரோகத்தனமானதென்று இந்திய அணுசக்தி அறிஞர்களே கடும் எதிர்ப்பைக் காட்டியுள்ளனர்; அமெரிக்க செனட் மற்றும் பிரதிநிதிகள் சபையின் திருத்தங்களே அதை பறைசாற்றுகின்றன (பார்க்க ஆக. 2006 புதிய ஜனநாயகம் தலையங்கம்). சரியாகச் சொல்வதானால், செத்துப் பிறந்த குழந்தையான இந்திய இறையாண்மைக்கு ''திவசம்'' கொடுக்கும் புரோகிதர் வேலையைத்தான் மன்மோகன் சிங் செய்து கொண்டிருக்கிறார். •

www.padippakam.com

# கிரிமினல்மயமானது உள்ளாட்சித் தேர்தல்

நடந்து முடிந்த சென்னை மாநகராட்சிக்கான தேர்தல்களில் தி.மு.க.வும் அதன் முக்கியக் கூட்டணிக் கட்சிகளான காங்கிரசும் பா.ம.க.வும் வரலாறு காணாத வன்முறை வெறியாட்டம் நடத்தியதாக, ஜனநாயகப் பாதுகாவலர்களாக வேடம் போடும் பார்ப்பன-பாசிச ஜெயலலிதா ஆதரவு சக்திகள் ஓலமிடுகின்றன. இத்தகைய வன்முறை தி.மு.க. அணிக்கு ஒரு கருப்புப் புள்ளிதான்; இந்த வன்முறை அதற்குத் தேவையற்றது; அது இல்லாமலேயே தி.மு.க. அணி உள்ளாட்சித் தேர்தல்களில் வெற்றி பெற்றிருக்க முடியும் என்று சில பத்தாம்பசலிகள் வாதிடுகின்றனர்.

ஆனால், ஜெயலலிதா - சசிகலா கும்பலின் முழுக்கவும் பிழைப்புவாத, பாசிச, கிரிமினல் குற்றக்கும்பல் அரசியலுக்கு இது தகுந்த, அவசியமான பதிலடிதான் என்பதே உண்மை. 2001 சென்னை மாநகராட்சி உட்பட உள்ளாட்சித் தேர்தல்களிலும், சாத்தான்குளம் - சைதை சட்டப்பேரவை இடைத்தேர்தல்களிலும் ஜெயா-சசி கும்பல் நடத்திய கிரிமினல்-வன்முறை வெறியாட்டங்களைத் தொடர்ந்து, இனி ஜெயலலிதா ஆட்சியின் கீழ் நடக்கும் இடைத்தேர்தல்களில் போட்டியிடுவதில்லை என்று கருணாநிதி முடிவு செய்தார். அதாவது தேர்தல்களைப் புறக்கணிப்பது என்று முடிவெடுக்காவிட்டாலும், ஜெயலலிதா கட்சிக்கெதிராக இடைத்தேர்தல்களில் போட்டியிடுவதைத் தவிர்த்தார்.



சென்னை தெருக்களில் ஜனநாயகத்துக்கு செருப்படி.

அதேசமயம், தமிழ்நாட்டின் அனைத்துப் பிரிவு மக்களுக்கும் எதிராக ஜெயா-சசி கும்பல் அரசு வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டு வெறியாட்டம் போட்டபோது, கருணாநிதியின் தி.மு.க. உட்பட அனைத்து ஓட்டுக் கட்சிகளும் தமது கையறு நிலையைத்தான் வெளிப்படுத்தின. மேலும் ஜெயா-சசி கும்பலின் இலஞ்ச-ஊழல், அதிகார முறைகேடுகளுக்கு எதிரான எல்லா வழக்குகளையும் அது சட்டத்தின் ஓட்டைகளையும் குறுக்கு வழிகளையும் பயன்படுத்தித் தப்பித்து வந்தது. இதையெல்லாம் கணக்கில் கொண்டு, ஜெயா-சசி கும்பலின் அடாவடி, அராஜக, கிரிமினல் அரசியலை சட்டபூர்வ-ஜனநாயக வழிமுறைகளில் முறியடிக்க முடியாது; அவற்றுக்கு வெளியிலான வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்று ''புதிய ஜனநாயகம்'' ஏடு எழுதியது. இப்போது கருணாநிதி மக்களைச் சார்ந்த போராட்ட வழிமுறைகளினால் ஜெயா-சசி கும்பலின் அரசியல் ஆதிக்கத்தை வீழ்த்தவில்லை. ஆளும் வர்க்க அரசியலுக்கே உரிய முறையில், ஜெயா-சசி கும்பலுக்குப் புரியும் மொழியில் தானும் அடாவடி, அராஜக, வன்முறை அரசியலால் பதிலடி கொடுத்திருக்கிறார்.

நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தல்களில் கூட்டணி அரசியலைக் கொண்டு அமைதியான முறையில் வீழ்த்தப்பட்டதை ஒரு உண்மையான தோல்வியாக ஜெயா-சசி கும்பல் ஏற்றுக்கொள்ளவே இல்லை. அதேசமயம் அதிகாரத்தில் இல்லாத ஒரு கணத்தைக் கூட அக்கும்பலால் சகித்துக் கொள்ள முடியவில்லை. முன்பாவது, ஆட்சியில் இருந்துகொண்டு, அதிகார பலத்தை வைத்துக் கொண்டு தேர்தல்களில் அராஜக வெறியாட்டம் போட்டது. இப்போது ''மிக விரைவிலேயே கருணாநிதியின் மைனாரிட்டி அரசு கவிழ்ந்து விடும், மீண்டும் ஆட்சிக்கு வந்து விடுவோம்'' என்ற மாயையை உருவாக்கி தனது ஆதரவுக் கும்பலையும் வாக்கு வங்கியையும் தக்க வைத்துக் கொள்வதற்கு கணிசமான தேர்தல் வெற்றியைக் காட்டியாக வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. இதனால் ஆட்சியில் இல்லாதபோதும் பணபலத்தையும் சாதி-அடியாள் பலத்தையும் வைத்து இந்தத் தேர்தல்களில் அராஜகம் நடத்தி தான் இன்னும் மக்கள் செல்வாக்கை இழந்து விடவில்லை என்று நிரூபிப்பதற்குத் திட்டமிட்டது.

இதற்காக ஆளும் தரப்பினர் ஆத்திரத்தைத் தூண்டும் வகையிலான அறிக்கைகளை ஜெயா-சசி கும்பல் வெளியிட்டு வந்தது. ''கருணாநிதியின் வாரிசுகள் துரியோதனர் கூட்டத்தைவிட மோசமானவர்களாக இருக்கிறார்கள். கடைசி நேர தேர்தல் அராஜகங்களைப் பார்த்துக் கொதித்தெழுந்து, அவர்களை மக்கள் காலால் மிதித்து நசுக்கி மண்ணோடு மண்ணாக துவம்சம் செய்யக் காத்திருக்கிறார்கள். அந்த நரகாசுர வதம் நிச்சயம் நடக்கத்தான் போகிறது'' என்றார் ஜெயலலிதா. ஜெயலலிதாவின் இந்த முயற்சிக்கு வழக்கமான கோழைத்தனத்தைக் கருணாநிதி வெளிப்படுத்தவில்லை. மாறாக ''ஜெயலலிதாவின் சவாலுக்குப் பின்னால் சதி ஒளிந்திருக்கிறது. தேன் அடை போலிருக்கும் கூட்டத்தைக் கலைக்க யாராவது முயற்சி செய்தால் என்ன ஆகும் என்பது எல்லோருக்கும் தெரியும். நீங்கள் கலைக்கப்பட்டால், கலவரத்துக்கு ஆளானால் அந்த நேரத்தில் எப்படி இருப்பீர்கள் என்பதும் எனக்குத் தெரியும். ஆட்சி பொறுப்புக்கு வந்துவிட்டோம் என்பதற்காகக் கோழைகளாக வாழ முடியாது. துறவிகளாக இருக்க முடியாது'' என்று தனது உடன்பிறப்புகளைப் பார்த்து உசுப்பேற்றி பதிலடிக் கொடுத்தார் கருணாநிதி. இந்த பதிலடி, தி.மு.க. அரசியல் இனிமேலும் கருணாநிதியின் அறிக்கை அரசியலாக மட்டும் இருக்காது. ஸ்டாலின் - தயாநிதிமாறன் இணையின் புதிய பாணியிலானதாக இருக்கும் என்பதையே சென்னை மாநகராட்சித் தேர்தல்கள் காட்டின.

ஜெயா-சசி கும்பல் தனது மக்கள் விரோத-ஜனநாயக விரோத பாசிசப் போக்குகளால்தான் பிற ஓட்டுக் கட்சிகளிடமிருந்தும், மக்களிடமிருந்து முற்றாகத் தனிமைப்பட்டுப் போயிருக்கிறது. ஆனால், அது தனது கோயாபல்சுத்தனமான பிரச்சாரத்தாலும், அரசியலற்ற மக்கள்-பிழைப்புவாத, கிரிமினல் அணிகளின் ஆதரவோடும் பார்ப்பன-அதிகார வர்க்கம், மற்றும் போலீசு - உளவாளிகள் ஆதரவாலும், ஓட்டுக்கட்சிகள் கருணாநிதி மீதான அதிருப்தியினால் அணி மாறுவதாலும் மீண்டும் ஆட்சிக்கு வந்துவிட முடியும் என்று நம்புகிறது. 2001 தேர்தல்களில் இப்படித்தான் நடந்து ஜெயா-சசி கும்பல் ஆட்சிக்கு வந்தது.

கட்சித் தலைமையினாலும் கட்டுப்படுத்த முடியாதவாறு கிரிமினல் கும்பல்கள் ஓட்டுக்கட்சி அரசியலில் செல்வாக்குப் பெற்றுள்ளனர் என்பதை உள்ளாட்சித் தேர்தல்கள் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளன. இதனால் ''கூட்டணி தர்மத்தை'' எந்தக் கட்சியும் கடைப்பிடிக்க முடியாமல் போய், கூட்டணி சிதைவதும் தவிர்க்க முடியவில்லை. இதன் விளைவாக, 2001 தேர்தல்களுக்கு அமைந்ததைப் போன்ற அணி மாற்றங்களை (இதில் இரு போலி கம்யூனிஸ்டுகளும், பா.ம.க.வும் முன்னணியில் நிற்கின்றன). இந்த உள்ளாட்சித் தேர்தல்களும், அவற்றின் தலைமைக்கான போட்டிகளும் விரைவுபடுத்தியிருக்கின்றன. •


படிப்பகம்

www.padippakam.com

# சந்தி சிரிக்கும் ஆயுத பேர ஊழல்கள்

**தீவிரவாதம், தேசப் பாதுகாப்பு என்ற தேசபக்தி பஜனை, இராணுவத்தில் நடந்துவரும் ஊழல்களை மூடி மறைக்கும் திரையாகப் பயன்படுகிறது.**

"**கா**ர்கில் போரையொட்டி இஸ்ரேல் நாட்டிடமிருந்து பாரக் ஏவுகணை வாங்கியதில் முறைகேடுகளும், ஊழலும் நடந்திருப்பதாக''க் குற்றஞ் சுமத்தியுள்ள மையப் புலனாய்வுத் துறை, இந்த ஏவுகணை ஊழல் தொடர்பாக, முன்னாள் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ்; (முன்னாள்) சமதா கட்சியின் தலைவர் ஜெயா ஜெட்லி; அக்கட்சியின் பொருளாளர் ஆர்.கே.ஜெயின்; மற்றும் முன்னாள் கப்பற்படை தளபதி சுசில்குமார் ஆகியோர் மீது வழக்குப் பதிவு செய்திருக்கிறது.

ஜார்ஜ் பெர்னாண்டஸ் மீது சுமத்தப்படும் இக்குற்றச்சாட்டு புதியதல்ல. தெகல்கா.காம் என்ற இணையதளப் பத்திரிக்கை, (இப்பொழுது தெகல்கா வாராந்திர பத்திரிகையாக வெளிவருகிறது) பா.ஜ.கூட்டணி ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது இராணுவத்துக்குத் தேவையான ஆயுதத் தளவாடங்கள் வாங்குவதில் முறைகேடுகளும், இலஞ்ச-ஊழலும் புழுத்து நாறுவதை ஒளிப்பேழை படமாகவே எடுத்து அம்பலப்படுத்தியது.

ஜெயா ஜெட்லி, இராணுவ அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டசின் அதிகாரப் பூர்வ பங்களாவிலேயே பேரம் பேசி, தெகல்கா நிருபர்களிடமிருந்து இரண்டு இலட்ச ரூபாய் வாங்கிக் கொண்டு, ஜார்ஜ் பெர்னாண்டசிடம் தான் சொல்வதாகக் கூறி, நிருபர்களை வழி அனுப்பி வைத்து, பொறியில் மாட்டிக் கொண்டார். தெகல்கா ஊழல் என அறியப்பட்ட இந்த இராணுவ பேர ஊழல் பா.ஜ.க. கூட்டணி ஆட்சியை மட்டுமல்ல, பா.ஜ. கட்சியையும் சந்தி சிரிக்க வைத்தது.

ஊழல் அம்பலமான பிறகு, ஜார்ஜ் பெர்னாண்டஸ் வேறு வழியின்றிப் பதவி விலகினார். எனினும், வழக்கம் போலவே விசாரணைக் கமிசன் நாடகம் நடத்தப்பட்டு, ஜார்ஜ் பெர்னாண்டஸ் நிரபராதி என அறிவிக்கப்பட்ட பின், அவர் மீண்டும் அமைச்சர் பதவியில் ஒட்டிக் கொண்டார்.

தெகல்கா.காம் அம்பலப்படுத்தியிருந்த 14 பேரங்களில், தற்பொழுது, ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் மூன்று பேரங்கள் தொடர்பாக மையப் புலனாய்வுத் துறையின் விசாரணை நடத்தப்பட்டு, வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதிலொன்று தான், பாரக் ஏவுகணை வாங்கியதில் நடந்துள்ள ஊழல்.

தெகல்கா.காம் அம்பலப்படுத்தியிருந்த இராணுவ பேர ஊழல்களை விசாரிக்க, பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில், வெங்கடசாமி கமிசன் நியமிக்கப்பட்டது. ஆனால், அந்த நீதிபதி மைய அரசு தனக்குச் சரியாக ஒத்துழைப்பு தரவில்லை எனக் கூறி பதவி விலகினார். அதன் பின்னர் புக்கன் என்ற நீதிபதி விசாரணையைத் தொடர்ந்து நடத்தினார். இவர் அளித்த அறிக்கையை காங்கிரசு கூட்டணி ஆட்சி வெளியிடவில்லை.

எனினும், புக்கன் கமிசன் தன்னை நிரபராதியாக அறிவித்துவிட்டதென்றும்; எனவே இந்த வழக்கே மோசடியானது என்றும் பெர்னாண்டஸ் கூறி வருகிறார். மேலும், ''இந்திரா - ராஜீவ் குடும்பத்து ஊழலை அம்பலப்படுத்துவதில் தான் முன்னணியில் நின்றதால், தன்னைப் பழிவாங்குவதற்காகப் போடப்பட்டுள்ள வழக்கு இது; இராணுவத் தளபதிகளின் நிர்பந்தத்தினால் தான் பாரக் ஏவுகணையை வாங்கச் சம்மதித்தேன்; பிரதம மந்திரியின் அறிவியல் ஆலோசகராக இருந்த அப்துல் கலாம் கூட, இந்த ஏவுகணையை வாங்கலாம் என சிபாரிசு செய்திருந்தார்'' எனத் தன்னை நியாயவானாகக் காட்டிக் கொள்ள பல சாட்சியங்களைச் சந்திக்கு இழுத்து வந்துவிட்டார்.

ஆனால், மையப் புலனாய்வுத் துறை தனது விசாரணை அறிக்கையில், ''அப்பொழுது இந்திய அரசுக்கு அறிவியல் ஆலோசகராக இருந்த அப்துல் கலாம், கடற்படைத் தளபதியாக இருந்த சுசில்குமாருக்கு எழுதிய கடிதத்தில் (23.6.99) இசுரேலிடமிருந்து இரண்டு பாரக் ஏவுகணைகளை இறக்குமதி செய்யும் கடற்படையின் திட்டத்தை எதிர்த்திருக்கிறார். ஆனால், இந்த எதிர்ப்பை மீறித்தான் பெர்னாண்டஸ், தளபதி சுசில்குமாரின் திட்டத்துக்கு 28.6.99 அன்று ஒப்புதல் கொடுத்திருக்கிறார்.''

''அப்பொழுது இராணுவ அமைச்சகத்தின் செயலாளராக இருந்த டி.ஆர். பிரசாத் என்ற அதிகாரியும், இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்த அமைச்சரவை கமிட்டியின் முடிவை மறுத்துள்ளதோடு, அடுத்துவரும் அரசாங்கம் இம்முடிவை எடுத்துக் கொள்ளட்டும் என 30.8.99 அன்று அறிவுறுத்தியிருக்கிறார். அப்பொழுது காபந்து அரசாங்கத்தின் இராணுவ அமைச்சராக இருந்த பெர்னாண்டஸ் இதையும் மீறித்தான்

**இராணுவ பேர ஊழல் குற்றச்சாட்டில் சிக்கிக் கொண்டுள்ள ஜார்ஜ் பெர்னாண்டஸ் மற்றும் ஜெயா ஜெட்லி.**



www.padippakam.com

பாரக் ஏவுகணைகளை இறக்குமதி செய் வதற்கு 2.3.2000 அன்று ஒப்புதல் கொடுத்துள்ளார்'' எனக் குறிப்பிட் டுள்ளது.

மேலும், சமதா கட்சியின் பொருளாளர் ஆர்.கே. ஜெயின் தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் ''பாரக் இரா ணுவ பேரத்தை முடிப்பதில் ஜெயா ஜெட்லியும், ஜார்ஜ் பெர்ணாண்டசும் 3% கமிசன் பெற்றதாகவும்; தனக்கு அரை சதவீதமே கமிசன் கிடைத்ததாக வும்'' கூறியுள்ளதை சி.பி.ஐ., பெர் னாண்டசுக்கு எதிரான சாட்சியமாகக் குறிப்பிடுகிறது.

சி.பி.ஐ, ஆர்.கே.ஜெயினை மிரட்டி ஒப்புதல் வாங்கியிருப்ப தாக ஜார்ஜ் பெர்னாண்டஸ் வாதிடலாம். ஆனால், தெகல்கா.காம் விரித்த இரக சியப் பொறியில் மாட்டிக் கொண்ட ஆர்.கே.ஜெயின், சிரித்தபடியே, பாரக் ஏவு கணை பேரத்தில் ஆயுதத் தரகன் சுரேஷ் நந்தாவிடமி ருந்து எத்தனை கோடி ரூபாய் கமிசனாகப் பெற்றுக் கொண்டு, அப்துல் கலாமை மீறி, எப்படி காரியத்தைச் சாதித்துக் கொடுத்தோம் என்பதை விலாவாரியாக விவரிப்பதைத் திரைப்பட மாகவே பார்க்கலாம்.

பா.ஜ.க. கூட்டணி ஆட் சியின் பொழுது, கார்கில் போரைக் காட்டி அவரே அவசரமாக 35 இராணுவத் தளவாடப் பேரங்களுக்கு அனுமதி கொடுத்ததாகவும், அவற்றுள் தற்பொழுது 20 பேரங்கள் சி.பி.ஐ.யின் விசாரணையின் கீழ் இருப்ப தாகவும் கூறப்படுகிறது. இந்தியாவின் தலைமைக் கணக்கு அதிகாரியும் இப் பேரங்கள் சிலவற்றில் நடந்துள்ள முறை கேடுகளைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆக.99 - டிச.99-க்கு இடைபட்ட காலத்தில் 402.76 கோடி ரூபாய் பெறு மான வெடிமருந்துப் பொருட்கள் ரசி யாவில் இருந்து இறக்குமதி செய்யப் பட்டுள்ளன. ''சரக்கைப் பெறுவதற்கு முன்பே சோதித்துப் பார்க்க வேண் டும்'' என்ற விதி இந்த இறக்குமதிக்கா கவே தளர்த்தப்பட்டு, பரிசோதனை யின்றி வெடி பொருட்கள் இறக்குமதி யாகியுள்ளன. ''கார்கில் போர் மற்றும் விஜய் நடவடிக்கையையொட்டி இறக் குமதி செய்யப்பட்டுள்ள இந்த வெடி குண்டுகளுள் பெரும்பாலானவை இந்தியாவிற்கு வருவதற்கு முன்பே காலாவதியாகிப் போனவை'' எனக் குறிப்பிட்டுள்ள தலைமை கணக்கு அதி காரி, இந்த முறைகேட்டை மையப் புல னாய்வுத் துறை விசாரிக்க வேண்டும் எனப் பரிந்துரைத்துள்ளார்.

''டி-72'' இரக பீரங்கிகளுக்குத் தேவைப்படும் குண்டுகளை வாங்குவ தற்கான ஒப்பந்தம் ஜூன்'99 அன்று இராணுவ அமைச்சரால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. 116.83 கோடி ரூபாய் பெறுமான இந்த ஒப்பந்தத்தைப் பரி சீலித்த தலைமை கணக்கு அதிகாரி, ''இந்த வெடிகுண்டுகள் உள்நாட்டில் உள்ள இராணுவத் தொழிற்சாலைகளி லேயே தயாரிக்கப்படும் பொழுது, இக் குண்டுகளை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய அவசி யம் என்ன? டி-72 இரக பீரங்கிகளை மலைப்பகுதிகளில் பயன்படுத்த முடி யாது. உண்மை இவ்வாறிருக்க, மலைப் பகுதியில் நடந்த கார்கில் போரைக் காட்டி டி-72 இரக பீரங்கிகளுக்குக் குண்டுகள் வாங்க வேண்டியதன் மர்மம் என்ன?'' என்ற இரு கேள்வி களை எழுப்பியிருக்கிறார்.

41.95 கோடி ரூபாய் பெறுமான 208 தொலைநோக்கிகள் வாங்கிய பேரத்திலும், ''இத்தொலைநோக்கி களை உள்நாட்டிலேயே தயாரிக்கக் கூடிய தொழில்நுட்பம் பாரத் எலெக்ட் ரானிக்ஸ் என்ற பொதுத்துறை நிறுவனத் திடம் இருக்கும் பொழுது, தொலை நோக்கிகளை இசுரேலிடமிருந்து இறக்குமதி செய்திருப்பதைப் பற்றியும், கார்கில் போர் முடிவடைந்த பிறகு, தொலை நோக்கிகளை இறக்குமதி செய்ய வேண்டிய அவசரம் பற்றியும்'' தலைமை கணக்கு அதிகாரி ஆட்சேப ணைகளை எழுப்பியிருக்கிறார்.

ஜார்ஜ் பெர்னாண்டஸ் நாடறிந்த ஓட்டுக்கட்சி தலைவர் என்பதால், அவர் சம்மந்தப்பட்டுள்ள பாரக் ஏவுகணை ஊழல் பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாக இடம் பிடித்திருக்கிறது. ஆனால், தலைமை கணக்கு அதிகாரியால் சுட்டிக் காட் டப்படும் ஆயிரக்கணக் கான முறைகேடுகள் - ஊழல்கள் கோப்புகளுக் குள்ளேயே சமாதியாகி விடுகின்றன.

●●●

1,125 கோடி ரூபாய் பெறுமான பாரக் ஏவுகணை ஊழல் வழக்காகப் பதிவு செய்யப்படுவதற்கு முன்பே, இதைவிடப் பெரிய இரண்டு மோசடி கள், முறைகேடுகள் இராணு வத்தில் நடந்திருப்பதும் தற் பொழுது கசியத் தொடங்கி யிருக்கிறது.

''அடுத்த 20 ஆண்டு களில் கப்பற்படைக்கு என் னென்ன ஆயுதத் தளவாடங் கள் தேவைப்படும்? இரா ணுவ ரீதியாகப் பலவீன மான இருக்கும் பகுதிகள் எவை? அப்பகுதிகளை எப் படி பலப்படுத்துவது?'' என் பது போன்ற அதிஉயர் இராணுவ இரக சியங்களாகக் கருதப்படும் தகவல்கள், இராணுவ உயர் அதிகாரிகளாலேயே கடத்தப்பட்டு, ஆயுதத் தளவாடங்கள் தயாரிக்கும் நிறுவனங்களுக்கும்; ஆயுத விற்பனை தரகர்களுக்கும் விற் கப்பட்டு வரும் ஒற்று வேலை, இராணு வத்தின் மேல்மட்டத்தில் பல ஆண்டு களாக நடந்து வருவது தற்பொழுது அம் பலமாகியுள்ளது. ''போர் அறை கசிவு வழக்கு'' எனக் கூறப்படும் இந்த உளவு வேலை பற்றிய விசாரணை மிகவும் கமுக்கமாக நடத்தப்பட்டு, கப்பற்படை யைச் சேர்ந்த மூன்று அதிகாரிகள் இரா ணுவ நீதிமன்றத்தில் கூட விசாரிக்கப்



**ஆயுதத் தரகர்கள் அபிஷேக் வர்மா (இடது), ரவிசங்கரன் (நடுவில்) மற்றும் குல்புஷன் பாராஷர்**


படிப்பகம்

படாமல் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

மே 2005-இல் நடந்து முடிந்த இந்த விசாரணை - வேலைநீக்கம் பற்றிய தகவல், அடுத்த இரண்டு மாதங்கள் கழித்துதான் முதலாளித்துவ பத்திரிகைகளில் வெளிவந்தது. ''இந்த உளவு வேலை யாருக்காக நடந்து வந்தது? கடத்தப்பட்ட அதி உயர் இராணுவ இரகசியங்கள் யார் யாருக்கு விற்கப்பட்டன? - போன்ற கேள்விகள் எழுப்பப்படாமலேயே, இராணுவ விசாரணை நடத்தி முடிக்கப்பட்டிருப்பதாகப் பத்திரிகைகள் குற்றம் சுமத்தின.



ஆயுதத் தரகர்களோடு நெருக்கமாக இருப்பதாகக் குற்றஞ்சாட்டப்படும் கப்பற்படைத் தளபதி அருண்பிரகாஷ் மற்றும் முன்னாள் இராணுவ அமைச்சர் பிரணாப் முகர்ஜி.

ரவி சங்கரன், குல்புஷன் பாராஷர், அபிஷேக் வர்மா என்ற மூன்று ஆயுதத் தரகர்கள் இந்த உளவு வேலையில் நேரடியாகத் தொடர்புடையவர்கள் என ''அவுட்லுக்'' ஆங்கில வார இதழ் கடந்த ஆண்டே அம்பலப்படுத்தி எழுதியது.

ரவி சங்கரனும், குல்புஷன் பாராஷரும் தங்களின் கப்பற்படை பதவிகளை ராஜினாமா செய்துவிட்டு, ஆயுதத் தரகர்களாக மாறியவர்கள். இதைவிட ஆர்வமூட்டும் அம்சம் என்னவென்றால், ஆயுதத் தரகன் ரவிசங்கரன், தற்பொழுது கப்பற்படைத் தளபதியாக இருக்கும் அருண் பிரகாஷின் மனைவியின் சகோதரி மகன். காங்கிரசு கட்சியின் ராஜ்ய சபை உறுப்பினரான வீணா வர்மாவின் மகன்தான் அபிஷேக் வர்மா. அருண் பிரகாஷ் கப்பற்படைத் தளபதியாகப் பதவியேற்றவுடன், அவரின் வீட்டில் நடத்தப்பட்ட விருந்துக்கு, குல்புஷன் பாராஷருக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது. ரவிசங்கரனும், குல்புஷன் பாராஷரும் இணைந்து பல நிறுவனங்களை நடத்தி வந்துள்ளனர். இது போல, அபிஷேக் வர்மா வேலை செய்துவரும் ''அட்லஸ்'' குழுமத்தில், குல்பூஷன் பாராஷர் இயக்குநராகப் பதவி வகித்து வருகிறான்.

முதலாளித்துவப் பத்திரிகைகள் அம்பலப்படுத்திய இந்தத் தொடர்புகள் பற்றி இராணுவம் வாய் திறக்க மறுத்து ஒதுக்கித் தள்ளியது. அதேசமயம், வேலை நீக்கம் செய்யப்பட்ட காஷ்யாப் குமார் என்ற கப்பற்படை அதிகாரி, தனது வேலை நீக்கத்தை எதிர்த்து நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கில், ''இந்த உளவுவேலையில் இந்தியர்களுக்கு மட்டுமல்ல, வெளிநாட்டினருக்கும் தொடர்புண்டு'' என இராணுவம் ஒத்துக் கொண்டது. ஆனாலும், இராணுவ அமைச்சர் பிரணாப் முகர்ஜி, ''கடத்தப்பட்ட தகவல்கள் வெறும் வர்த்தக ரீதியானவைதான்; இந்தக் கடத்தலை அரசுக்கு எதிரான சதியாகப் பார்க்க முடியாது'' எனக் கூறிப் பூசி மெழுகினார்.

மே 2005-இல் அம்பலமான இந்த உளவு வேலை பற்றிய விசாரணை, ஒன்பது மாதங்கள் கழித்து, பிப்.2006-இல் தான் சி.பி.ஐ. வசம் ஒப்படைக்கப்பட்டது. இவ்விசாரணையை மந்தமாகவே நடத்தி வரும் சி.பி.ஐ., ஆயுதத் தரகர்கள் ரவிசங்கரன், குல்புஷன் பாராஷர், அபிஷேக் வர்மா மற்றும் விமானப் படையைச்சேர்ந்த கமாண்டர் எஸ்.எல். சுர்வே, கமாண்டர் விஜிந்தர் ரானா, வி.கே.ஜா ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்துள்ளது. மேலும் லெப்டினென்ட் கர்னல் எஸ்.எஸ்.சௌத்ரி; மேஜர் தேவேந்தர் வர்மா, மற்றும் இராணுவ உயர் அதிகாரிகளான ஆர்.எஸ்.துதானி, பி.எஸ்.மெஹ்ரா, ஹெச்.எல்.பாட்டியா ஆகியோர் வீடுகளில் சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

குற்றவாளிகளைத் தப்பவிடவும், ஆதாரங்களை அழித்துவிடும் நோக்கத்திற்காகவும்தான் வழக்கு விசாரணை தாமதப்படுத்தப்பட்டதாக முதலாளித்துவப் பத்திரிகைகளே இராணுவத்தின் மீது குற்றஞ் சுமத்தியுள்ளன. குறிப்பாக, கப்பற்படையின் தளபதி அருண் பிரகாஷின் உறவினரான ரவிசங்கரன், சி.பி.ஐ. கைக்கு வழக்கு போகும் முன்பே ஐரோப்பிய நாடுகளுக்குத் தப்பி ஓடிவிட்டான். ''இண்டர்போல்'' போலீசுக்குத் தெரிவித்தப் பிறகும் ரவிசங்கரனைப் பிடிக்க முடியவில்லையாம்! குல்புஷன் பாராஷர் மீது சந்தேகப்படுவது இராணுவ அமைச்சரால் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்ட பிறகும் கூட, பாராஷர் இலண்டனுக்குச் சென்று வர அனுமதிக்கப்பட்டான். பாராஷரின் வெளிநாட்டுப் பயணம் சுமுகமாக முடிந்த பிறகுதான், சி.பி.ஐ. அவனைக் கைது செய்தது. பாராஷரின் வீட்டு முகவரியைக் கண்டுபிடிக்க முடியாததுதான் இத்தாமதத்திற்குக் காரணம் என மழுப்புகிறது சி.பி.ஐ. வழக்கு பதிவாகி ஒன்பது மாதம் கழித்த பிறகுதான் அபிஷேக் வர்மா கைது செய்யப்பட்டான்.

மது, மாது, விலை உயர்ந்த, நவீனமான பரிசுப் பொருட்கள் - இந்த இலஞ்சத்தின் மூலம்தான் பல இராணுவ உயர் அதிகாரிகளை ஆயுதத் தரகர்கள் விலைக்கு வாங்கியுள்ளனர்; கிட்டதட்ட 7,000 கோப்புகள் இரகசியமாகக் கடத்தப்பட்டுள்ளன. எனினும், இராணுவ உயர் அதிகாரிகள் தேசப் பாதுகாப்பைக் காரணம் காட்டி, தங்கள் விசாரணைக்கு ஒத்துழைக்க மறுப்பதாகவும்; தங்களின் விசாரணை பற்றிய தகவல் ஆயுதத் தரகர்களுக்கு முன் கூட்டியே தெரிந்து விடுவதாகவும் சி.பி.ஐ. பகிரங்கமாகவே குற்றஞ் சுமத்துகிறது.

இராணுவத்தின் உயர் மட்டத்தில் நடந்துவரும் இந்த உளவு வேலை, தேசத்தின் இறையாண்மைக்கும், தேசத்தின் ஒருமைப்பாட்டுக்கும் ஆபத்தானது என சி.பி.ஐ கூறுகிறது. ''தேசத்தின் ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் தீவிரவாதிகள்'' மீது தடா, பொடா போன்ற பாசிசச் சட்டங்கள் பாய்கின்றன. ஆனால், அதே குற்றத்தைச் செய்துள்ள இராணுவ அதிகாரிகள், ஆயுதத் தரகர்கள் மீதோ அரசு நிர்வாக இரகசியச் சட்டம் (Official Secret Act) என்ற உளுத்துப் போன சட்டம்தான் பாய்ந்திருக்கிறது.

●●●

**பி**ரான்சு நாட்டைச் சேர்ந்த தாலெஸ் என்ற ஆயுத விற்பனை நிறுவனத்திடமிருந்து ஏழு ''ஸ்கார்பீன்'' இரக நீர்மூழ்கிக் கப்பல்கள் வாங்கும் ஒப்பந்தமொன்று சமீபத்தில் கையெழுத்தாகி

www.padippakam.com

யுள்ளது. இந்த நீர்மூழ்கிக் கப்பலை வங்குவதற்கான பேச்சு வார்த்தைகள் தொடங்கிய பொழுதே மைய அரசின் கண்காணிப்பு கமிசனின் தலைவராக இருந்த என்.விட்டல், 7.5.2002 அன்று பாது காப்புத்துறைச் செயலருக்கு எழுதிய கடிதத்தில், இந்த பேரத்தில் இடைத் தரகர்கள் இருப்பதாகக் குற்றஞ்சுமத்தியதோடு, வெளிப்படையான டெண்டர் விடப்படவேண்டும் எனக் கோரியிருக்கிறார். நிதியமைச்சர் ப.சிதம்பரம் இந்த நீர்மூழ்கிக் கப்பலின் விலை அதிகம் என 5.1.05 அன்று இராணுவ அமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் கிடப்பில் போடப்பட்டிருந்த இந்த பேரம், காங்கிரசு கூட்டணி ஆட்சியில் பல்வேறு தடங்கல்களையும் தாண்டி கையெழுத்தாகியுள்ளது.

''18,000 கோடி ரூபாய் பெறுமான இந்த பேரத்தில் 4 சதவீத கமிசன் கைமாறியிருக்கிறது; கப்பற்படை இரகசியங்களைக் கடத்திய வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள அபிஷேக் வர்மாவிற்கும், தாலெஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியான ழான்-பால் பெர்ரியருக்கும் தொடர்பிருக்கிறது'' என அவுட் லுக் வார இதழ் பல கட்டுரைகளின் மூலம் அம்பலப்படுத்தியிருக்கிறது. இதற்கு ஆதாரமாக, கப்பற்படையைச் சேர்ந்த எட்டு உயர் அதிகாரிகளுக்கும் அபிஷேக் வர்மாவிற்கும் இடையேயான இரகசிய தொடர்பையும்; அபிஷேக் வர்மாவிற்கும், தாலெஸ் தலைமை நிர்வாக அதிகாரிக்கும் இடையே இப்பேரம் தொடர்பாக நடந்துள்ள மின்னஞ்சல் கடிதப் போக்குவரத்தையும் சுட்டிக் காட்டியுள்ளது.

இந்த பேரத்தின் பின்னுள்ள ஊழலை அம்பலப்படுத்தி வரும் ''அவுட்லுக்'' இதழுக்கு எதிராக, அபிஷேக் வர்மாவும், தாலெஸின் தலைமை நிர்வாக அதிகாரி ழான் பால் பெர்ரியரும் இணைந்து வழக்கு தொடுத்தனர். இந்த வழக்கை விசாரித்த தில்லி உயர் நீதி மன்றம், ''இந்தக் கட்டுரைகள் நம்பத் தகுந்ததாக உள்ளன'' எனக் கூறி, வழக்கை தள்ளுபடி செய்துவிட்டது. ஆனால், கப்பற்படையோ, அவுட்லுக் வெளியிட்டுள்ள ஆதாரக் கடிதங்கள் அனைத்தும் மோசடியாக ஜோடிக்கப்பட்டவை எனக் கூறி வருகிறது.

அதேசமயம், வெளிநாட்டிற்குத் தப்பி ஓடிவிட்ட ஆயுதத் தரகன் ரவிசங்கரன், ''இக்கடிதங்கள் உண்மையானவைதான்; ஆனால், இக்கடிதத்தில் குறிப்பிடப்படும் மற்றொரு ஆயுதத் தரகன் சுரேஷ் நந்தாவின் பெயரை மட்டும் அவுட்லுக் இதழ் மறைத்து விட்டிருப்பதாக''க் கூறியிருக்கிறான். மேலும், ''தாலெஸின் புதிய ஆயுதத் தரகன் அபிஷேக் வர்மாவிற்கும்; பழைய ஆயுதத் தரகன் சுரேஷ் நந்தாவிற்கும் இடையே நடக்கும் வர்த்தகப் போட்டியினாலும்; ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல் நிறுவனமான ஹெச்.டி.டபிள்யூ-விற்கும், தாலெஸிக்கும் இடையே நடக்கும் போட்டியினாலும் தான் ''ஸ்கார்பீன்'' நீர்மூழ்கி கப்பல் பேரம் அம்பலப்பட்டு விட்டதாக'', இதன் பின்னுள்ள இரகசியத்தையும் போட்டு உடைத்துள்ளான். கப்பற்படையின் போஃபர்ஸ் என அழைக்கப்படும் இந்த நீர்மூழ்கிக் கப்பல் பேரம் தொடர்பான உண்மைகள் ஆட்சி மாறினால்தான் முழுதாகத் தெரியவரும் போலும்!

> **இராணுவத்தில் நடக்கும் ஒவ்வொரு ஆயுத பேரத்திலும் இடைத்தரகர்களுக்கும் அதிகாரிகளுக்கும் கோடிக்கணக்கில் கமிசன் கிடைக்கிறது. அதனால் தான், ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளுள் பலரும் ஆயுதத் தரகு நிறுவனங்களுக்கு முதலாளி ஆகிவிடுகிறார்கள்.**

•••

இராணுவத்தில் நடக்கும் இலஞ்ச ஊழல்கள், அதிகார முறைகேடுகள்; அதன் மூலம் இராணுவ அதிகாரிகள் அடிக்கும் பல கோடி ரூபாய் கமிசனோடு ஒப்பிடும் பொழுது, அரசியல் வாதிகள் பெறும் கமிசன் சுண்டைக்காய் தான். போஃபர்ஸ் ஊழல், கார்கில் ஊழல் போன்ற மறைக்கவே முடியாத ஒன்றிரண்டு ஊழல்கள்தான் அம்பலமாகிறதே தவிர, மற்றவை ஊசி முனை அளவு கூட வெளியே தெரிவதில்லை. 1989-க்குப் பிறகு இராணுவத்தில் நடந்த ஆயுத பேரங்களைப் பற்றிய தலைமை கணக்கு அதிகாரியின் அறிக்கை வெளியிடப்படாமல் அரசாங்கம் முடக்கி வைத்திருப்பதில் இருந்தே இந்த உண்மையைப் புரிந்து கொள்ள முடியும்.

அம்பலமாகும் பெரிய ஊழல்கள் கூட இராணுவத்தில் ஏற்பட்டுள்ள கறை, அரசியல்வாதிகளின் குறுக்கீடு எனப் பூசி மெழுகப்படுகிறதே தவிர, மற்ற துறைகளைவிட, ஊழல் புழுத்து நாறும்துறை இராணுவம்தான் என அம்பலப்படுத்தப்படுவதில்லை.

இராணுவத்தில் நடக்கும் ஒவ்வொரு ஆயுத பேரத்திலும் இடைத் தரகர்களுக்கும் அதிகாரிகளுக்கும் கோடிக்கணக்கில் கமிசன் கிடைக்கிறது. அதனால்தான், ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளுள் பலரும் ஆயுதத் தரகு நிறுவனங்களுக்கு முதலாளி ஆகிவிடுகிறார்கள். பாரக் ஏவுகணை பேரத்தில் ஆர்.கே.ஜெயினுக்கு கமிசன் கொடுத்த ஆயுதத் தரகன் சுரேஷ் நந்தா, ஓய்வுபெற்ற கப்பற் படைத் தளபதி நந்தாவின் மகன்.

பல ஏழை நாடுகளில், இலஞ்ச - ஊழலில் திளைத்துப் போன இராணுவத் தளபதிகளைத்தான், ஏகாதிபத்தியங்கள் சர்வாதிகாரிகளாகத் திணிக்கின்றன. இந்தோனேஷியாவின் சுகர்டோ, சிலியின் பினோசெட், பெருவின் பிஜூமோரி, பனாமாவின் நோரிகோ, பாக்.இன் முஷாரப் எனப் பல நாடுகளை இதற்கு உதாரணம் காட்டலாம். இந்தியாவிலோ இராணுவ அதிகாரிகள் ஓய்வு பெற்ற பின் காங்கிரசு, பா.ஜ.க. மூலம் அரசியலில் ஒட்டிக் கொள்கிறார்கள். மாநில கவர்னர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

தீவிரவாதம், பாகிஸ்தான் என்ற பூச்சாண்டிகளைக் காட்டி, இராணுவத்தில் நடக்கும் எதையும் கேள்விக்குள்ளாக்கக் கூடாது என்ற கருத்து திட்டமிட்டே பரப்பப்படுகிறது. மன்மோகன் சிங்கை சமீபத்தில் சந்தித்த முப்படைத் தளபதிகள், ஊழல் குற்றச்சாட்டுக்களால் இராணுவத்தை நவீனப்படுத்துவது தடைபட்டுப் போவதாகப் புலம்பியுள்ளனர்.

இராணுவம் நடத்தும் படுகொலைகளில் இருந்து சிப்பாய்களைப் பாதுகாக்க ஆயுதப் படை சிறப்பு அதிகாரச் சட்டம் இருப்பது போல, ஊழல் குற்றச்சாட்டுகளில் இருந்து முற்றிலுமாக இராணுவ அதிகாரிகளைப் பாதுகாக்க ஒரு சிறப்புச் சட்டத்தைக் கேட்பார்கள் போலும். தேசப் பாதுகாப்பு என்ற பெயரில் நாட்டையே உறிஞ்சித் தின்னும் மிகப் பெரிய ஒட்டுண்ணியாக இராணுவம் வளர்ந்திருப்பதுதான், நாட்டையும் மக்களையும் அச்சுறுத்தும் மிகப் பெரிய அபாயம்!

• செல்வம்

www.padippakam.com

# பார்ப்பன பக்தியுடன் ஏகாதிபத்திய சேவை

## மறுகாலனியாக்கத்தின் கீழ் போலி கம்யூனிஸ்டுகளின் இழிந்த நிலை

''முதலில் நான் ஒரு பிராமணன்; ஒரு இந்து. பிறகுதான் கம்யூனிஸ்ட்'' - இப்படி பகிரங்கமாகப் பிரகடனம் செய்திருக்கிறார், மே.வங்க 'இடது முன்னணி' அரசின் போக்குவரத்து - விளையாட்டுத்துறை அமைச்சரான சுபாஷ் சக்ரவர்த்தி. இவர் சி.பி.எம். கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவர். நீண்ட காலமாகக் கட்சிப் பணியாற்றிவரும் அனுபவமிக்க தோழர் என்று சி.பி.எம். கட்சியினரால் குறிப்பிடப்படும் முக்கிய புள்ளி.

அவர் முதலில் பிராமணராம்; இந்துவாம்! பிறகுதான் கம்யூனிஸ்டாம்! ஒரு கம்யூனிஸ்ட் தலைவர் இப்படி வில்லங்கமாகப் பேசுகிறாரே என்று நீங்கள் முகத்தைச் சுழிக்கலாம். ஆனால், விஷயம் இதோடு முடிந்துவிடவில்லை. இந்த பிராமண 'கம்யூனிஸ்டு' பிர்பூமிலுள்ள தாரா பீடக் கோயிலுக்குச் சென்று பக்தியோடு வழிபட்டுள்ளார். பூசைத்தட்டில் பூசாரிக்குக் காணிக்கையாக ரூ. 501 போட்டுள்ளார். பல்வேறு பூசைகளுக்கு தலா ரூ.301 வீதம் ''மொய்'' வைத்துள்ளார். பூசை முடிந்து வெளியே வரும்போது பக்திப் பழமாகி ''ஜெய்தாரா, ஜெய்தாரா'' என்று மெய்யுருகிப் பாடியுள்ளார்.

சி.பி.எம். கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரான ஜோதிபாசு, ''சுபாஷ் சக்ரவர்த்திக்கு வயதாகி விட்டது. அதனால் மரண பயம் வந்து தாராமாதாவைப் பார்க்கச் சென்றுள்ளார்'' என்று கேலியாக இந்நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிட்டாரே தவிர, அவர் கோயிலுக்குச் சென்று வழிபட்டதைப் பற்றியோ, நான் ஒரு பார்ப்பான் என்று பகிரங்கமாக அறிவித்ததைப் பற்றியோ வாய் திறக்கவில்லை. சி.பி.எம். கட்சியின் மே.வங்க மாநிலச் செயலரான பிமன் போஸ், ''மார்க்சிஸ்டுகளும் இரத்தத்தாலும் சதையாலுமான மனிதப் பிறவிகள் தானே!'' என்று மகத்தானதொரு அறிவியல் கண்டுபிடிப்பை முன் வைத்து, சுபாஷின் செயலுக்கு நியாயம் கற்பிக்கக் கிளம்பினார். பின்னர், ''கட்சி ஊழியர்களின் சித்தாந்த விலகலானது, கம்யூனிசத்தை இழிவுபடுத்தும் எதிரிகளுக்கே சாதகமாகிப் போகும்'' என்று சுபாஷின் பெயரைக் குறிப்பிடாமல் பொத்தாம் பொதுவாக உபதேசித்தார். சி.பி.எம். கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரான பினாய்க் கோனார், சுபாஷ் விவகாரத்தை மாநிலக் கமிட்டியில் விவாதித்து, ஒழுங்கு நடவடிக்கை ஏதும் தேவையா என்று பரிசீலிப்போம் என்று கூறி, ஆளாளுக்கு இதுபற்றி பேசக் கூடாது என வாயடைத்தார்.

இப்படி இந்த விவகாரம் சூடேறிக் கொண்டிருந்த போதிலும், தான் தவறிழைத்துவிட்டதாகக் கூட திருவாளர் சுபாஷ் கருதவில்லை. ''நான் இந்து கோயிலுக்கு மட்டுமின்றி அனைத்து மத வழிபாட்டுத் தலங்களுக்கும் செல்கிறேன். மார்க்சிய தத்துவத்தை பலரும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை; இதனால்தான் சி.பி.எம். கட்சி மூன்று மாநிலங்களுக்கு வெளியே வளரவில்லை'' என்று ஒரே போடாகப் போட்டார். அதாவது, கட்சி ஊழியர்கள் பக்தியோடு வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்று பிரார்த்தனை செய்யாததால் தான் சி.பி.எம். கட்சி வளரவில்லை என்றார். இதுவும் போதாதென்று ஜோதிபாசுவை ''கலியுகக் கண்ணன்'' என்று புகழ்ந்து தள்ளினார்.

'பார்ப்பன மார்க்சிஸ்டு' சுபாஷ் சக்கரவர்த்தி.




சுபாஷின் உளறல்களால் நிலைமை விபரீதமாவதைக் கண்ட ஜோதிபாசு, ''சுபாஷுக்கு மனநிலை பிறழ்ந்து விட்டது (பைத்தியம் பிடித்துவிட்டது)'' என்று சாடினார். ஆனாலும் பூணூலிஸ்டு சுபாஷ் அசரவில்லை. ''மனநிலை பிறழ்ந்துவிட்ட ஒருவரை கம்யூனிஸ்ட் கட்சியில் எப்படி வைத்துக் கொள்ள முடியும்?'' என்று எதிர்வாதம் செய்தார். அதாவது, ''முடிந்தால் என்னை கட்சியிலிருந்து நீக்கிப் பார்!'' என்று பகிரங்கமாகச் சவால் விட்டார்.

அப்புறம் என்னதான் நடந்தது? சி.பி.எம். கட்சியின் மாநிலக் கமிட்டி கூட்டத்தில் சுபாஷை கட்சியிலிருந்து நீக்குவதாக அறிவிக்கப்பட்டதா? நடவடிக்கை எடுக்கப்பட்டதா? அதெல்லாம் ஒன்றும் நடக்கவில்லை. அவர் கோயிலுக்குப் போயிருக்கக் கூடாது; பூசை செய்திருக்கக் கூடாது என்று சொல்லி இந்த விவகாரத்தை கமுக்கமாக முடித்துவிட்டார்கள். பூணூலிஸ்டு சுபாஷும் கோயிலுக்குப் போனது தவறுதான் என்று 'சுயவிமர்சனம்' செய்து கொண்டு விட்டாராம்! அதுசரி; நான் முதலில் பார்ப்பான்; அப்புறம்தான் கம்யூனிஸ்டு என்று அறிவித்தாரே, அதுபற்றி என்ன விமர்சனம்? என்ன நடவடிக்கை? ஒன்றும் இல்லை. முடிந்தால் என்னை கட்சியை விட்டு நீக்கிப்பார் என்று கட்சியையே மிரட்டி சவால் விட்டாரே, அதற்கு என்ன நடவடிக்கை? அதற்கும் எந்த நடவடிக்கையுமில்லை. ஏன்?

தனது பேரனுக்கு பார்ப்பன சனாதன முறைப்படி பூணூல் கல்யாணம் நடத்தினார், சி.பி.எம். கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரான சோமநாத் சட்டர்ஜி. அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காத சி.பி.எம். கட்சி. இப்போது அவரை நாடாளுமன்ற அவைத் தலைவராக்கி கௌரவித்துள்ளது. எனவே, பார்ப்பனியத்தோடு சங்கமித்தால்தான் உயர்பதவி கிடைக்கும்; அதுதான் கட்சியில் முன்னேறுவதற்கான வழிமுறை என்பதைப் புரிந்து கொண்ட சுபாஷ் ஐயர், தைரியமாக ''முதலில் நான் ஒரு பார்ப்பான்'' என்று அறிவிக்கிறார்.

www.padippakam.com

கேரளத்தில் 1988-ஆம் ஆண்டில் நடந்த சி.பி.எம். கட்சியின் அகில இந்திய மாநாட்டில், அப்போதைய கட்சிப் பொதுச்செயலாளராக இருந்த ஈ.எம்.எஸ்.நம்பூதிரிபாடை கலியுகக் கண்ணனாக்கி ''கட்-அவுட்'' வைத்து அசத்தியது அக்கட்சி. பார்ப்பன அடிப்படையிலான இத்தகைய தனிநபர் வழிபாட்டை நம்பூதிரிபாடு கூட எதிர்க்கவில்லை. யார் மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவேதான் சுபாஷ் ஐயர், அதேவழியில் ஜோதிபாசுவை கலியுகக் கண்ணனாகச் சித்தரித்து துதிபாடுகிறார்.



மே.வங்க சி.பி.எம். கட்சியின் அதிகாரபூர்வ நாளேடான ''கணசக்தி''யும் தமிழகத்தின் தீக்கதிரும் ஜோதிடம், ராசிபலன் முதலானவற்றோடு நவராத்திரி - தீபாவளி - கார்த்திகை - பொங்கல் சிறப்பிதழ்களை வெளியிட்டு பார்ப்பனியத்தோடு கை கோர்த்து நிற்கிறது. சுபாஷ் ஐயரோ, ஒருபடி முன்னே சென்று கோயிலுக்குச் சென்று வழிபாடு நடத்தி ''முதலில் நான் ஒரு பார்ப்பான்'' என்கிறார்.

இந்நிலையில் சுபாஷ் மீது நடவடிக்கை எடுத்தால், கட்சியிலுள்ள 'பூணூலிஸ்டு - மார்க்சிஸ்டு'கள் கலகம் செய்வார்கள்; நீ மட்டும் யோக்கியமா என்று அம்பலப்படுத்தி விடுவார்கள் என்று கட்சித் தலைமைக்குத் தெரியும். சுபாஷ் ஐயருக்கும் தெரியும். எனவேதான் கட்சித் தலைமை இந்த விவகாரத்தைப் பூசி மெழுகுகிறது.

இந்தியாவில் மறுகாலனியாக்கமும் பார்ப்பனியமும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள். பார்ப்பன எதிர்ப்பையும் மறுகாலனிய எதிர்ப்பையும் தனித்தனியாகப் பிரித்துப் போராட முடியாது. பார்ப்பன எதிர்ப்பின்றி ஏகாதிபத்திய எதிர்ப்போ, ஜனநாயகப் புரட்சியோ சாத்தியமில்லை. ஏற்கெனவே மாநிலத்தைத் தொழில்மயமாக்குவது என்ற பெயரில் மறுகாலனியாக்கத்துடன் சமரசம் செய்து கொண்டு 'புரட்சி' செய்து வருகிறார், போலி கம்யூனிஸ்டு முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா. மத நல்லிணக்கம் என்ற பெயரில் பார்ப்பனியத்துடன் சமரசம் செய்து கொண்டுள்ள சி.பி.எம். கட்சியின் மே.வங்க அமைச்சரான சுபாஷ் ஐயர், ''முதலில் நான் ஒரு பார்ப்பான்'' என்று அறிவித்து 'புரட்சி' செய்கிறார். அடடா! மறுகாலனியாக்கமும் பார்ப்பனியமும் கை கோர்த்துக் கொண்டு நடத்தும் 'புரட்சி' எப்படி முன்னேறுகிறது பாருங்கள்!

• குமார்

# அதிகாரிகளின் பகற்கொள்ளைக்கு ஒப்பந்த ஊழியர்கள் பலிகடா

திருச்சியிலுள்ள பி.எஸ்.என்.எல். (BSNL) முதன்மைப் பொதுமேலாளர் (PGM) அலுவலக வளாகத்தின் டி-டேக்ஸ் (D-Tax) கட்டிடத்தில் நீண்டகாலமாகப் பணியாற்றி வந்த 5 ஒப்பந்த ஊழியர்கள் கடந்த 25.8.06 முதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி திடீரென வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். இதற்கான காரணத்தை விசாரித்தபோது, அதே கட்டிடத்தில் இருக்கும் ஸ்டோர்சில் பல இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் காணாமல் போய் விட்டதாகவும், அது தொடர்பாகவே இந்த ஒப்பந்த ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்தது. நிர்வாகத் தரப்பிலிருந்து எழுத்துப்பூர்வமாக உத்தரவு வழங்கப்படாமல், வெறும் வாய்வழி உத்தர்வு மூலமாகவே இந்த ஊழியர்களை பணிநீக்கம் செய்யுமாறு அதிகாரிகள் ஆணையிட்டுள்ளதாக ஒப்பந்ததாரர் (காண்டிராக்டர்) கூறுகிறார்.

இதில் ஆச்சரியம் என்னவென்றால் வேலை நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களில் ஒருவர் கூட, அந்த ஸ்டோர்சில் வேலை செய்யவில்லை. இந்த ஸ்டோர்ஸ், கோட்டப் பொறியாளர் (DE) மற்றும் உதவிப் பொறியாளரின் (AE) நேரடிக் கட்டுப்பாட்டில் இருப்பதாகும். அந்தக் கட்டிடச் சாவியும் அவர்களிடமே இருக்கும். மேலும், பி.எஸ்.என்.எல். அலுவலகங்கள் அனைத்திலும் நுழைவாயிலில் ஓய்வுபெற்ற இராணுவ வீரர்களின் பாதுகாப்பும், உள்ளே நுழையும் எவரையும் சோதனையிடுவதும் உள்ளது. காணாமல் போன பொருட்களும் சட்டைப் பையில் மறைத்து எடுத்துச் செல்லக்கூடிய சிறிய சாதனங்களும் அல்ல. பூட்டி வைக்கப்பட்டுள்ள ஸ்டோர்சிலிருந்து பல இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புடைய பொருட்கள், பாதுகாப்பை மீறி வெளியே போனது எப்படி? இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பிலிருக்கும் அதிகாரிகள் மீது எந்த நடவடிக்கையும் இல்லை. ஆனால், இதற்குத் தொடர்பே இல்லாத 5 தாழ்த்தப்பட்ட ஏழை ஒப்பந்த ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் திருடியதற்கான ஆதாரம் கிடைத்துவிட்டதாம்! அப்படியானால், அந்த ஆதாரங்களைப் போலீசிடம் கொடுத்து ஏன் புகார் கொடுக்கவில்லை? துறை சார்ந்த விசாரணை நடைமுறைகள் ஏன் பின்பற்றப்படவில்லை?

அதிகாரிகள் கூட்டுச் சேர்ந்து கொள்ளையடித்து விட்டு, அப்பாவி ஊழியர்கள் மீது பழிபோட்டு தப்பித்துக் கொள்வதென்பது தொலை தொடர்புத் துறையில் நீண்ட காலமாக நடந்து வருகிறது. ஒப்பந்த ஊழியர்களுக்காக சங்கம் கட்டி சந்தா வசூலிக்கும் சி.பி.எம். கட்சியின் தொழிற்சங்கவாதிகளோ, அதிகாரிகளின் கொள்ளையை அம்பலப்படுத்தவோ போராடவோ முன்வரவில்லை. வர்க்க ஒற்றுமை பற்றி உபதேசிக்கும் இச்சங்கம், பழிவாங்கப்பட்ட ஒப்பந்த ஊழியர்களுக்கு ஆதரவாக நிரந்தர ஊழியர்களைப் போராட அணிதிரட்டவுமில்லை. இவற்றை அம்பலப்படுத்தி பி.எஸ்.என்.எல். ஊழியர்களிடம் பிரச்சாரம் செய்து வருவதோடு, பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்காகப் போராடவும், அதிகார வர்க்கக் கொள்ளையையும் சதியையும் முறியடிக்கவும், புதிய சங்கத்தைக் கட்டியமைக்க புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி முனைப்பாகச் செயல்பட்டு வருகிறது.

– பு.ஜ. செய்தியாளர்கள், திருச்சி.

www.padippakam.com

# மணிப்பூர்: வீரத்தின் விளைநிலம்

**ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை எதிர்த்து மணிப்பூர் மாநில மக்கள் நடத்தி வரும் போராட்டம், இந்திய ஜனநாயகத்தின் போலித்தனத்தை மீண்டும் மீண்டும் நிரூபித்துக் காட்டி வருகிறது.**

நம் நாட்டு இளைஞர்களுக்கு ஐஸ்வர்யாராயைத் தெரிந்த அளவிற்கு ஐரோம் சானு ஷர்மிளாவைத் தெரியாது. ஷர்மிளா, வடகிழக்கு இந்தியாவில் உள்ள மணிப்பூர் மாநிலத்தைச் சேர்ந்த இளம் பெண். அம்மாநிலத்தில் இராணுவம் நடத்திவரும் அட்டூழியங்களுக்குச் சட்டபூர்வ அந்தஸ்தைக் கொடுக்கும் ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை முற்றிலுமாக நீக்க வேண்டும் எனக் கோரி ஆறு ஆண்டுகளாக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வருகிறார், அவர்.

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு, நவம்பர் 2, 2000 அன்று, மணிப்பூர் தலைநகர் இம்பாலுக்கு அருகில் உள்ள மாலோம் என்ற இடத்தில் பேருந்துக்காகக் காத்து நின்ற 10 அப்பாவிகளை இராணுவம் கண்மூடித்தனமாகச் சுட்டுக் கொன்றது. இப்படுகொலையை விசாரிக்க மாநில அரசு நியமித்த விசாரணைக் கமிசனை, இந்திய இராணுவம் ஆயுதப் படை சிறப்பு அதிகாரச் சட்டத்தைக் காட்டி முடக்கிப் போட்டது. இச்சட்டத்தின்படி, மைய அரசின் அமைதியின்றி, மணிப்பூரில் பணிபுரியும் சாதாரண சிப்பாயைக் கூட, எந்தவொரு நீதிமன்றமும் விசாரணைக்குக்கூட அழைக்க முடியாது. அந்தப் படுகொலைக்கு நீதி கோரி மணிப்பூர் மாநிலமெங்கும் போராட்டங்கள் வெடித்த பொழுது ஷர்மிளா, ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை மணிப்பூரில் இருந்து முற்றிலுமாக நீக்கக் கோரி, தனது உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார்.

ஷர்மிளாவின் கோரிக்கையைப் பரிசீலிக்க மறுத்த அரசு, ''தற்கொலைக்கு முயற்சி செய்ததாக''க் குற்றஞ்சுமத்தி, அவரைக் கைது செய்தது. சிறையில் வலுக்கட்டாயமாக உணவு கொடுக்க முயன்று தோற்றுப் போன அதிகார வர்க்கம், அவரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்று சிறை வைத்தது. அங்கு அவருக்கு மூக்கின் வழியே குழாய்கள் திணிக்கப்பட்டு, திரவ உணவு வழங்கப்பட்டது. கடந்த ஆறு ஆண்டுகளாக, அவர் மருத்துவமனைக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். ஒவ்வொரு நாளும் ஐந்து முறை அவருக்கு வலுக்கட்டாயமாகத் திரவ உணவு செலுத்தப்படுகிறது.

கடந்த ஆறு ஆண்டுகளில் ஆறு முறை மருத்துவமனைக் காவலில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டுள்ளார். ஆனால், விடுவிக்கப்பட்ட மறுநாளே, ''தற்கொலைக்கு முயன்றதாக''க் கூறி, மீண்டும் மருத்துவமனைக் காவலுக்குக் கொண்டு செல்லப்பட்டு, திரவ உணவு கொடுக்கும் அரசின் இரக்க நாடகம் தொடங்கிவிடும். இப்படித்தான் அவரின் போராட்டமும், அவரை உயிரோடு வைத்திருக்கும் அரசின் 'அக்கறையும்' தொடர்ந்து நடந்து வருகின்றன. ''என் கோரிக்கையைப் பற்றி முடிவு எடுக்காமல், என்னைச் சிறை வைப்பதில்தான் அரசு குறியாக இருக்கிறது'' என்கிறார், ஷர்மிளா.

மணிப்பூர் மாநிலத்தில் 1980-ஆம் ஆண்டு முதல் ஆயுதப் படை சிறப்பு அதிகாரச் சட்டம் அமலில் இருந்து வருகிறது. இச்சட்டத்தின்படி, ஒரு இடத்தில் ஐந்து பேர் கூடி நின்றாலே பயங்கரவாத நடவடிக்கையாகக் கருதப்படும். இராணுவம் - துணை இராணுவத்தைச் சேர்ந்த சாதாரண சிப்பாய்கூட, தனது மேலதிகாரியின் அனுமதியின்றி யாரையும் சுட்டுக் கொல்ல முடியும்; நீதிமன்றத்தின் ''வாரண்ட்'' இல்லாமலேயே, எந்த இடத்திலும்/வீட்டிலும் நுழைந்து தேடுதல் வேட்டை நடத்த முடியும்; சந்தேகப்படும் நபர்களின் சொத்துக்களைக் கைப்பற்ற முடியும்; அழிக்க முடியும்; இராணுவத்தால் கைது செய்யப்படுபவர்களை 24 மணி நேரத்திற்குள் நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது. மணிப்பூரில் கடந்த 26 ஆண்டுகளில், ஏறத்தாழ 26,000 பேர் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இச்சட்டம் கொடுத்திருக்கும் பாதுகாப்பால், இப்படுகொலைகளுக்காக ஒரு இராணுவ சிப்பாய்கூடத் தண்டிக்கப்படவில்லை.

மணிப்பூரில் இப்பாசிசச் சட்டம் அமலுக்கு வந்த நாளில் இருந்தே அதை நீக்கக் கோரும் போராட்டமும் தொடர்ந்து நடந்து வருகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, இம்பாலைச் சேர்ந்த தங்ஜம் மனோரமா தேவி என்ற இளம் பெண்ணைத் தீவிரவாதி என முத்திரை குத்தி, ''ராஷ்டிரிய ரைபிள்ஸ்'' என்ற துணை இராணுவப் படை, அவரது வீட்டில் இருந்து தூக்கிக்

**ஆயுதப் படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை நீக்கக் கோரி, டெல்லியில் தனது உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்ந்த ஐரோம் ஷர்மிளா கைது செய்யப்பட்டு, மருத்துவமனைக்குத் தூக்கிச் செல்லப்படுகிறார்.**



www.padippakam.com

கொண்டு போனது. விசாரணை என்ற பெயரில் அவரைப் பாலியல் பலாத்காரப்படுத்திய இராணுவக் கும்பல், அதன் பின் அவரைச் சுட்டுக் கொன்றது. இராணுவம் நடத்திய பாலியல் வன்புணர்ச்சி தெரியக் கூடாது என்பதற்காகவே, அவரது பெண் உறுப்பைச் சுட்டுச் சிதைத்திருந்தனர். இப்படுகொலையை அடுத்து, இப்பாசிச சட்டத்தை நீக்கக் கோரும் போராட்டம் என்றுமில்லாத உச்சத்தை அடைந்தது.

45 வயதிற்கு மேற்பட்ட தாய்மார்களும், மூதாட்டிகளும், ஜூலை 15, 2004 அன்று தங்கள் ஆடைகளைக் களைந்துவிட்டு, நிர்வாணமாக, "இந்திய இராணுவமே, எங்களையும் பாலியல் பலாத்காரப்படுத்து" என்ற பதாகையைப் பிடித்துக் கொண்டு, ராஷ்டிரிய ரைபிள்ஸின் தலைமையகம் முன் நடத்திய போராட்டம், இந்திய அரசின் கோர முகத்தை உலகெங்கும் அம்பலப்படுத்தியது; ஆகஸ்டு 15, 2004 - சுதந்திர தினத்தன்று, இச்சட்டத்தை நீக்கக் கோரி பேபம் சித்தரஞ்ஜன் என்ற இளைஞர் தீக்குளித்துத் தற்கொலை செய்து கொண்டார். இப்போராட்டத்தைத் தொடர்ந்து எடுத்துச் செல்ல "அபுன்பா லுப்" என்ற முன்னணி கட்டியமைக்கப்பட்டது.

இதனையடுத்து மணிப்பூருக்குப் பறந்துவந்த பிரதமர் மன்மோகன் சிங், இராணுவத்துக்கு எதிரான போராட்டத்தில் முன்னணியில் நின்ற தாய்மார்களைச் சந்தித்தார். இச்சட்டத்தை மறுபரிசீலனை செய்யக் கமிட்டியொன்றை அமைப்பதாக வாக்குறுதி கொடுத்தார். ஆனால், அவர் திரும்பிச் சென்ற மறுநிமிடமே, நிர்வாணப் போராட்டத்தில் கலந்து கொண்ட தாய்மார்கள் அனைவரும் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர். எனினும் அவர்களுள் ஒருவர் கூட - 73 வயதான மூதாட்டிகள்கூடப் பிணை கேட்டு விண்ணப்பிக்கவில்லை. இந்த அடக்குமுறைக்குப் பிறகும் போராட்டம் தொய்ந்து போகாமல் வீச்சாக நடந்து வந்ததால், மூன்று மாதங்கள்



**இந்திய இராணுவத்தால் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட தங்ஜம் மனோரமா.**

கழித்து, அத்தாய்மார்கள் அனைவரும் எவ்வித நிபந்தனையும் இன்றி விடுதலை செய்யப்பட்டனர். ஆயுதப் படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை மறுபரிசீலனை செய்ய ஜீவன் ரெட்டி கமிசன் அமைக்கப்பட்டது.

வடகிழக்கிந்திய மாநிலங்கள் முழுவதிலும் பல பொது விசாரணைகளை நடத்திய இவ்விசாரணைக் கமிசன் மைய அரசிற்கு அளித்துள்ள அறிக்கையில், "அடக்குமுறையின் சின்னமாக, வெறுக்கப்படும் பொருளாக, பாரபட்சமாக நடந்து கொள்வதற்கும், அடக்குமுறைக்கும் பயன்படும் கருவியாக இச்சட்டம் மாறிவிட்டது... வடகிழக்கிந்தியாவைச் சேர்ந்த பெரும்பான்மையான மக்கள் இராணுவம் வெளியேறத் தேவையில்லை என விரும்பினாலும், இச்சட்டத்தை முற்றிலுமாக நீக்கத்தான் வேண்டும்" எனக் குறிப்பிட்டுள்ளது.

"இந்தியா முழுவதும் நடைமுறைப்படுத்தக் கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ள சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்திலேயே, சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகளிலிருந்து இராணுவத்தினரைப் பாதுகாக்கக் கூடிய பிரிவுகள் இருக்கும் பொழுது, இன்னொரு சட்டம் தேவையற்ற ஒன்று. அதேசமயம், தெரிந்தே இராணுவத்தினர் தங்களின் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்கும் வகையில் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தில் திருத்தங்கள் செய்ய வேண்டும்" என்றும் இந்த அறிக்கை பரிந்துரைத்துள்ளது.

இந்த கமிட்டியின் அறிக்கை இராணுவத்தினரை "அம்போ" என்று கைவிட்டுவிடவில்லை. ஒரே உறையில் இரண்டு கத்திகள் தேவையற்ற ஒன்று என்று சுட்டிக் காட்டியிருக்கிறது. மேலும், இக்கமிட்டியின் அறிக்கையை ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயமும் அரசுக்குக் கிடையாது. எனினும், கடந்த ஒன்றரை ஆண்டுக்கு முன்பாக கொடுக்கப்பட்ட ஜீவன்ரெட்டி கமிசன் அறிக்கையை, பொது மக்கள் அறியும்படி வெளியிடக் கூட மறுத்து வருகிறது, மன்மோகன்சிங் அரசு.

இப்பொழுது, மணிப்பூர் மாநில மக்கள் இந்த அறிக்கையை வெளியிடக் கோரியும் போராடத் தொடங்கி விட்டனர். குறிப்பாக, ஐரோம் ஷர்மிளா, தன்னை மாநில அரசு சம்பிரதாயமாக விடுவித்த உடனேயே, அதிகார வர்க்கத்தின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு, டெல்லிக்கு வந்து, அங்கு தனது உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்ந்து, ஆளுங் கும்பலை அதிர்ச்சியடையச் செய்தார். அறிக்கையை வெளியிடாமல் வைத்திருக்கும் மன்மோகன் சிங், தனது அரசின் துரோகத்தனம் அம்பலமாவதைத் தடுக்க, ஷர்மிளாவைக் கைது செய்து, அகில இந்திய மருத்துவ விஞ்ஞானக் கழக மருத்துவமனையில் காவலில் வைத்து விட்டார்.

**இந்திய இராணுவத்தின் கொலைவெறி – காமவெறியை அம்பலப்படுத்தி, மணிப்பூர் தாய்மார்கள் இம்பாலில் உள்ள ராஷ்டிரிய ரைபிள்ஸின் தலைமையகம் முன் நடத்திய நிர்வாண ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்).**



ஆயுதம் ஏந்திப் போராடினால், அப்போராட்டத்தை வன்முறை - தீவிரவாதம் என முத்திரை குத்துவதோடு, போராளிகளைக் கொல்ல இராணுவத்தை ஏவி விடுகிறார்கள். அமைதியாக, சட்டபூர்வ வழியில் போராடினால், கைது செய்து சிறைக்குள் தள்ளி விடுகிறார்கள். உரிமைகளுக்காகப் போராடக் கூடாது; அடிமையாக அடங்கிக் கிடக்க வேண்டும் என்பதுதான் ஆட்சியாளர்களின் விருப்பம்.




மணிப்பூர் மாநிலத்தில் இருந்து முற்றிலுமாக ஆயுதப் படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை நீக்கக் கோரி நடந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம். (கோப்புப் படம்).

பாகிஸ்தானில் நேரடியான இராணுவ சர்வாதிகார ஆட்சி நடக்கிறது என்றால், வடகிழக்கிந்தியாவின் அசாமிலும், மணிப்பூரிலும், நாகலாந்திலும் மற்றும் ஜம்மு - காஷ்மீரிலும் மறைமுகமான வழியில் சட்டபூர்வ இராணுவ சர்வாதிகார ஆட்சிதான் நடக்கிறது. ஈராக்கை அமெரிக்கா ஆக்கிரமித்திருப்பது போல, இத்தேசிய இன மக்களை இந்தியா இராணுவம் ஆக்கிரமித்திருக்கிறது.

போலி கம்யூனிஸ்டுகள் கூட இந்த ஆயுத படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை நீக்க வேண்டும் எனக் கோருவதில்லை. சி.பி.எம். ஆளும் திரிபுரா மாநிலத்தில், ''தீவிரவாதிகளை'' ஒழிக்க இராணுவ பயங்கரவாதத்தைத் தான் ஏவிவிட்டுள்ளனர். போலி கம்யூனிஸ்டுகளின் ஒத்துழைப்புடனும் ஆதரவுடனும்தான் வடகிழக்கிந்தியாவில் இராணுவ சர்வாதிகார ஆட்சி நடந்து வருகிறது. பா.ஜ.க., காங்கிரசு போன்ற ஆளும் வர்க்கக் கட்சிகளைப் போலவே, போலி கம்யூனிஸ்டுகளும் இராணுவ சர்வாதிகார ஆட்சிக்கு எதிராகப் போராடுகிறவர்களைப் பிரிவினவாதிகள் என முத்திரை குத்துகிறார்கள். பாகிஸ்தான் சதி என அவதூறு செய்கிறார்கள்.

''எங்களின் போராட்டம், வெறும் ஒரு சட்டத்திற்கு எதிரான போராட்டம் அல்ல. கௌரவமாக வாழ்வதற்காக நாங்கள் போராடுகிறோம்'' என்கிறார்கள் மணிப்பூர் மாநில மக்கள். அமைதி வழியிலும் ஆயுதம் தாங்கியும் நடந்துவரும் சுயநிர்ணய உரிமைக்கான அப்போராட்டத்தை கைது, சித்திரவதை இராணுவ ஒடுக்குமுறைகளால் ஒழித்துக் கட்டிவிட முடியாது. ஷர்மிளா கூறுவது போல, ''இன்று இல்லாவிட்டால் நாளை, உண்மை வென்றே தீரும்!''

● செல்வம்

# ''கோக்-பெப்சியை விரட்டியடிப்போம்!''
## — தமிழ்நாடு வணிகர் சங்கப் பேரவை உறுதி

**த**மிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவையின் முடிவுப்படி, சென்னை - பெரம்பூர் வியாபாரிகள் நல சங்கத்தில் கடந்த 6.10.06 அன்று கோக்-பெப்சி எதிர்ப்பு நாள் கடைபிடிக்கப்பட்டது. பெரம்பூர் பாரதி சாலையில் உள்ள சங்க அலுவலகத்தின் முன்பாக, அன்று மாலை 6 மணியளவில் திரண்ட வணிகர்கள், ''கோக் - பெப்சியை விற்பனை செய்ய மாட்டோம்! கோக்-பெப்சியின் கொடிய விளைவுகளை மக்களிடம் பிரச்சாரம் செய்வோம்!'' என்று உறுதிமொழி எடுத்ததோடு, கோக்-பெப்சி உருவப் பொம்மைகளைத் தீயிட்டுக் கொளுத்தினர்.

அதைத் தொடர்ந்து இச்சங்கத்தின் சார்பில் ''கோக்-பெப்சியை விரட்டியடிப்போம்'' என்ற தலைப்பில் 8.10.06 அன்று பள்ளி மாணவ - மாணவியருக்கான பேச்சுப் போட்டி நடத்தப்பட்டது. பெரம்பூரிலுள்ள கலிகி ரங்கநாதன் மாண்ட்போர்ட் மேல்நிலைப் பள்ளியில், முதல் வகுப்பிலிருந்து 12-ஆம் வகுப்புவரை 3 பிரிவாக நடத்தப்பட்ட இந்தப் பேச்சுப் போட்டியில், பெரம்பூரைச் சுற்றியுள்ள 35 பகுதிகளிலிருந்து 850 மாணவ - மாணவியர் ஊக்கமுடன் பங்கேற்று கோக் - பெப்சியை விரட்டியடிக்க சூளுரைத்தனர். பெற்றோரும் ஆசிரியர்களும் திரளாகப் பங்கேற்ற இந்த நிகழ்ச்சியின் இறுதியில், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவைத் தலைவர் திரு.வெள்ளையன் அவர்கள் முன்னிலையில், வெற்றி பெற்ற மாணவ - மாணவியருக்கு ரொக்கப் பரிசுகளும் பங்கேற்ற அனைவருக்கும் சிறப்புப் பரிசுகளும் வழங்கப்பட்டன.



கொலைகார கோக் - பெப்சிக்கு எதிராக இளம் தலைமுறையினரிடம் விழிப்புணர்வையும் நாட்டுப்பற்றையும் ஊட்டும் வகையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சி, கோக் - பெப்சிக்கு எதிராகப் போராடி வரும் தமிழக மக்களுக்கு இன்னுமொரு உந்துசக்தியாக அமைந்துள்ளது. கோக் - பெப்சியின் அடியாட்களாக ஆட்சியாளர்கள் செயல்பட்டாலும், கோக் - பெப்சிக்கு எதிராகத் திரண்டு வரும் பொதுக் கருத்தும், அந்தக் கருத்திற்குச் செயல்வடிவம் தரவிருக்கும் மக்கள் போராட்டங்களும் காட்டுத் தீயாகப் பரவவே செய்யும் என்பதற்கான முன்னறிவிப்பாக இந்நிகழ்ச்சி அமைந்தது.

– பு.ஜ. செய்தியாளர்கள்.

## விவசாயக் கூட்டுறவுக் கடன் தள்ளுபடி:

# சலுகையா? மோசடியா?

ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் நாளிலேயே, விவசாய கூட்டுறவுக் கடன்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்வதாக உத்தரவு போட்டார் முதல்வர் கருணாநிதி. ஆனால், அது இன்னுமொரு வாய்ப்பந்தல் என்று அம்பலமாகிவிட்டது.

புதிய பயிர்க்கடன் வாங்கக் கூட்டுறவு வங்கிக்குச் சென்று கேட்டால், முறையாகக் கடனைத் திருப்பிச் செலுத்தி, வங்கியிடம் வரவு-செலவு வைத்துக் கொள்பவர்களுக்கு மட்டுமே புதிய கடன் வழங்கப்படும் என்று அரசு சுற்றறிக்கை (எண்: 69003) அனுப்பியுள்ளதாகக் கூறுகிறார்கள். கடன் தள்ளுபடி காரணமாக, வழக்கத்தைவிட மிகக் குறைவான நிதியையே வங்கித் தலைமை ஒதுக்கீடு செய்துள்ளதால், புதிதாகக் கடன் கொடுக்க சாத்தியமில்லை என்கிறார்கள். விவசாயிகள் ஏற்கெனவே வாங்கிய கடன்கள், அரசு அறிவிப்புக்குப் பிறகும் அவர்களது கணக்கில் வரவு வைக்கப்படவில்லை. கூட்டுறவு வங்கியிலிருந்து சான்றிதழ் பெற்று வந்தால்தான் இதர தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் வாங்க முடியும். ஆனால் கூட்டுறவு வங்கிகளோ, அரசாங்கத்திடமிருந்து தொகை வரவாகாமல், சான்றிதழ் தர இயலாது, என்று இழுத்தடிக்கின்றன.

மறுபுறம், விவசாயம் என்ற பெயரில் டிராக்டர் வாங்க, நிலத்தை அடமானம் வைத்து வேறு தொழில் தொடங்க எனக் கடன் வாங்கிய பணக்கார விவசாயிகளின் கடன்கள்தான் பெருமளவு தள்ளுபடியாகியுள்ளது. அவர்கள்தான் ஓரளவுக்குத் தவணையை முறையாகக் கட்டிக் கொண்டிருந்தார்கள். கடன் தள்ளுபடியால் ஆதாயமடைந்த அவர்களுக்குத்தான், அரசு சுற்றறிக்கை விதித்துள்ள நிபந்தனைப்படி புதிய கடன்களும் ஆதாயமும் கிடைக்கும்.



ஆனால், ரூ.5,000, ரூ.10,000 என பயிர்க்கடன் வாங்கி, உழவுக்கும் விதைப்புக்கும் பணமில்லாமல், வெளியில் கந்துவட்டிக்குக் கடன் வாங்கி விவசாயம் செய்து, விலை வீழ்ச்சியால் போண்டியாகி, கடனைக் கட்ட முடியாமலும் விவசாயம் செய்ய முடியாமலும் தத்தளிக்கும் விவசாயிகளுக்குக் கூட்டுறவு கடன் தள்ளுபடியால் எந்தப் பயனுமில்லை; புதிய கடன் வாங்கவும் வழியில்லை.

இவை ஒருபுறமிருக்க, குறுவை நெல் சாகுபடி முடிந்த பின்னரும் இன்னமும் பல இடங்களில் அரசு கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படவில்லை. 30,000 ஏக்கருக்கு மேல் திருச்சி மாவட்டத்தில் குறுவை நெல் சாகுபடி நடந்து அறுவடை முடிந்த பின்னரும் கூட, 10 இடங்களில்தான் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

இங்கு சம்பா நெல்லைப் போல, 17%-க்கு மிகாமல் ஈரப்பதம் இருந்தால் தான் குறுவை நெல் கொள்முதல் செய்யப்படும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் குறுவை நெல் மழையில் நனையாவிட்டாலும் 20 முதல் 24% வரை ஈரப்பதம் கொண்டதாக இருக்கும். இதனால் எந்த விவசாயியும் அறுவை செய்த நெல்லை அரசு கொள்முதல் நிலையங்களில் விற்க முடிவதில்லை. வேறுவழியின்றி, தனியார் மண்டிகளில் அடிமாட்டு விலைக்கு நெல்லை விற்க வேண்டிய கட்டாயத்திற்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளார்கள். தனியார் வியாபாரிகளிடம் அற்ப விலைக்கு விவசாயிகள் குறுவை நெல்லை விற்று முடித்துவிட்ட பிறகு, 11.10.06 அன்று 19% வரை ஈரப்பதம் உள்ள நெல் கொள்முதல் செய்யப்படும் என்று அரசு அறிவிக்கிறது. செத்தவன் கையில் வெத்திலை வைத்த கதையாக இந்த அறிவிப்பால் சிறு விவசாயிகளுக்கு எந்தப் பயனுமில்லை.

வங்கிக் கடன் தரமுடியாது; அரசு கொள்முதல் நிலையங்களில் நெல்லை வாங்க முடியாது; இது உலக வங்கி நிபந்தனை என்று நேரடியாகவே கழுத்தில் கத்தியைச் செருகினார் 'புரட்சித் தலைவி அம்மா'. இன்று, அதே கொள்கையை ஜனரஞ்சகக் கவர்ச்சித் திட்டங்களுடன் நயவஞ்சகமாகச் செய்கிறது, தி.மு.க. அரசு. சிறு விவசாயிகளை விவசாயத்தைவிட்டே விரட்டும் இச்சதியை அம்பலப்படுத்தியும், நேரடிக் கொள்முதல் நிலையங்களைப் பரவலாகத் திறந்து குவிண்டால் ரூ. 800 என குறுவை நெல்லைக் கொள்முதல் செய்யக் கோரியும், புதிய பயிர்க்கடன் வழங்க நிபந்தனை விதிப்பதை ரத்து செய்யக் கோரியும், சிறு விவசாயிகளுக்கு முன்னுரிமை அளித்து கடன் வழங்கக் கோரியும் இலால்குடி வட்ட வி.வி.மு. விரிவாகப் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டது. அதன் தொடர்ச்சியாக 28.9.06 அன்று இலால்குடி வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக விவசாயிகளை அணிதிரட்டி விண்ணதிரும் முழக்கங்களுடன் வி.வி.மு. ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. தோழர் பிச்சை தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், முன்னணித் தோழர்கள் கண்டன உரையாற்ற, தோழர் இரவி சிறப்புரையாற்றினார். உலக வங்கி கைக்கூலி ஆட்சியாளர்களின் மோசடிகளை அம்பலப்படுத்தியும், விவசாயிகளை விவசாயத்திலிருந்தே விரட்டியடிக்கும் மறுகாலனியாக்கக் கொள்கைகளுக்கு எதிராகவும் நடந்த இந்த ஆர்ப்பாட்டம், விவசாயிகளுக்குப் புதிய பார்வையையும் புதிய நம்பிக்கையையும் அளித்துள்ளது.

**– விவசாயிகள் விடுதலை முன்னணி, இலால்குடி வட்டம்.**

www.padippakam.com

# தனியார்மயம் என்பது பகற்கொள்ளைதான்!

## பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார்மயமாக்குவதில் ஊழலும், மோசடிகளும் புழுத்து நாறுவதை தலைமைக் கணக்கு அதிகாரியின் அறிக்கை அம்பலப்படுத்திக் காட்டி விட்டது.

**பொ**துத்துறையைச் சூறையாடுவதற்கென்றே உருவாக்கப்பட்டிருப்பதுதான் தனியார்மயமாக்கம்; தரகுப் பெருமுதலாளிகள் - பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களின் கொள்ளைக்காக நாட்டின் பொதுச் சொத்தைக் கூறுபோட்டு அடிமாட்டு விலைக்குத் தாரைவார்ப்பதுதான் தனியார்மயமாக்கம். இந்த உண்மையை நாட்டுப் பற்றாளர்களும் புரட்சிகர-ஜனநாயக சக்திகளும் சொன்னால், அவர்கள் நாட்டின் முன்னேற்றத்தைத் தடுக்கும் பழமைவாதிகள் - மக்கள் விரோதிகள் என்று முத்திரை குத்தப்படுகிறார்கள்; தனியார்மயத்தை எதிர்த்துப் போராடும் தொழிலாளர்கள் ஒடுக்கப்படுகிறார்கள். ஆனால், இப்போது இந்திய அரசின் தணிக்கை கட்டுப்பாட்டு அதிகாரியே, தனியார்மயம் என்றால் பொதுச் சொத்தைச் சூறையாடுவதுதான் என்று தனது அறிக்கையில் நிரூபித்துள்ளார்.

கடந்த ஆகஸ்ட் இறுதியில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தணிக்கை கட்டுப்பாட்டு அதிகாரி (CAG)யின் அறிக்கையானது, 1999 முதல் 2003-ஆம் ஆண்டு வரை 9 அரசுத்துறை நிறுவனங்களின் பங்குகள் தனியாருக்கு விற்கப்பட்ட விவகாரத்தைத் தணிக்கை செய்து, அதில் நடந்துள்ள மோசடிகள், சதிகள், ஊழல், தில்லுமுல்லுகளை வெளிக் கொணர்ந்துள்ளது. இந்தக் காலத்தில் பதவியிலிருந்த பா.ஜ.க. கூட்டணி ஆட்சியாளர்கள் விதிமுறைகளையும் எச்சரிக்கைகளையும் மீறி அவசர அவசரமாக பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்ற முறைகேடுகளையும், தரகுப் பெருமுதலாளிகளும் பன்னாட்டு நிறுவனங்களும் கோடிகோடியாய் ஆதாயமடைந்துள்ளதையும், நாட்டுக்குப் பேரிழப்பு ஏற்பட்டுள்ளதையும் இந்த அறிக்கை புட்டுப் புட்டு வைத்துள்ளது. இந்த அறிக்கையை முழுமையாக வெளியிடப் பக்கங்கள் போதாது என்பதால், சுருக்கமாக வகைமாதிரிக்கு ஒரு சில மோசடிகளை மட்டும் பார்ப்போம்.

• அரசுத்துறை நிறுவனமான மாடர்ன் ஃபுட்ஸ், நல்ல இலாபத்தில் இயங்கி வந்த மிகப் பெரிய ரொட்டி தயாரிப்பு நிறுவனமாகும். 2000-ஆவது ஆண்டில் பா.ஜ.க. ஆட்சியில் இந்த நிறுவனம், பன்னாட்டு ஏகபோக கம்பெனியான யுனி லீவருக்கு விற்கப்பட்டது. இந்நிறுவனத்தின் மையமான சொத்துக்களை மதிப்பீடு செய்வதில் பல தில்லுமுல்லு - மோசடிகள் நடந்துள்ளன. குறிப்பாக, இந்நிறுவனத்துக்குச் சொந்தமான டெல்லி, மும்பை, சென்னை, பெங்களூர், கொல்கத்தாவிலுள்ள நகர்ப்புற நிலங்கள் குறைமதிப்பீடு செய்யப்பட்டு, அடிமாட்டு விலைக்கு விற்கப்பட்டுள்ளன. இவற்றை வீட்டுமனைகளாக்கி விற்று யுனிலீவர் நிறுவனம் கோடி கோடியாய் ஆதாயமடைந்துள்ளது. ஊழியர்களை வேலை நீக்கமோ, ஆட்குறைப்போ செய்யக் கூடாது என்ற விதிமுறைகளை மீறி மாடர்ன் ஃபுட்ஸ்-ஐக் கைப்பற்றிய யுனிலீவர் நிறுவனம், பெரும் எண்ணிக்கையில் ஊழியர்களை வேலை நீக்கம் செய்துள்ளது. மாடர்ன் ஃபுட்ஸ் நிறுவனத்தைக் கைப்பற்றிய பிறகு, விற்பனைக்குப் பிந்திய இழப்புகளை ஈடு செய்ய 17.48 கோடி ரூபாய் தரவேண்டும் என்று யுனிலீவர் நிறுவனம் கோரியதை எவ்விதப் பரிசீலனையும் இன்றி பா.ஜ.க. அரசு ஏற்றுக் கொண்டது.

**தனியார்மயமாக்கலில் நடந்துள்ள ஊழல் மோசடிகளை அம்பலப்படுத்தியுள்ள தலைமை கணக்கு அதிகாரி வீ.என். கௌல்.**



இதில், ரூ.12.64 கோடியை அந்நிறுவனத்துக்கு பா.ஜ.க. அரசு செலுத்தி விட்டது. எஞ்சிய தொகையை எப்போது செலுத்துவது என்பது பற்றி பரிசீலனையில் உள்ளது.

• அலுமினிய உற்பத்தியில் ஈடுபட்டு வந்த அரசுத்துறை நிறுவனமான "பால்கோ"வின் பங்குகள் ஸ்டெர்லைட் என்ற தரகுப் பெருமுதலாளித்துவ நிறுவனத்துக்கு 2001-ஆம் ஆண்டில் விற்கப்பட்டன. பால்கோவின் மையமான சொத்துக்களை குறைமதிப்பீடு செய்து அவசர அவசரமாக பா.ஜ.க. கூட்டணி ஆட்சி விற்பனை செய்துள்ளது. பால்கோவுக்குச் சொந்தமான நிலங்களும் வீட்டுமனைகளும் மதிப்பீடு செய்வதிலிருந்தே நீக்கப்பட்டு, குத்துமதிப்பாக விற்கப்பட்டுள்ளன. விற்பனைக்குப் பிந்திய இழப்பீடுகளை ஈடுசெய்ய ரூ. 16.72 கோடி தரவேண்டும் என்று ஸ்டெர்லைட் நிறுவனம் கோரியதை பா.ஜ.க.. அரசு ஏற்றுக் கொண்டு பரிசீலிப்பதாக அறிவித்தது.

• இந்துஸ்தான் டெலி பிரிண்டர்ஸ் நிறுவனத்தின் பங்குகள் இமாச்சல் ஃப்யூச்சரிஸ்டிக்ஸ் என்ற நிறுவனத்துக்கு 2001-ஆம் ஆண்டில் தாரை வார்க்கப்பட்டது. தொலைதொடர்புத் துறைக்கு அவசியமான சி.டாட் ஸ்விட்சுகளைத் தயாரித்துவரும் முக்கிய நிறுவனமான இந்துஸ்தான் டெலி பிரிண்டர்ஸ், விற்கப்படும்வரை நல்ல இலாபத்தை ஈட்டி வந்த அரசுத்துறை நிறுவனமாகும். இமாச்சல் ஃப்யூச்சர்ஸ் நிறுவனம் மட்டுமே அதன் பங்குகளை வாங்க முன் வந்தது. வேறு போட்டியாளர்களே இல்லாதபோதிலும், விதிமுறைகளை மீறி அந்த நிறுவனத்திடமே அற்ப விலைக்கு பங்குகள் விற்கப்பட்டன. ரூ. 55 கோடிக்கு பங்குகள் விற்கப்பட்ட பிறகு, விற்பனைக்குப் பிந்திய இழப்பீடாக அந்நிறுவனம் ரூ. 56.49 கோடி தரக் கோரியது. இதை பரிசீலிப்பதாக பா.ஜ.க. கூட்டணி அரசு ஏற்றுக் கொண்டது. அதாவது, பங்கு விற்பனை மூலம் அரசுக்குக் கிடைக்கும் வருவாய் ரூ. 55 கோடி. விற்பனைக்குப் பிந்திய இழப்பீட்டுக்காக இமாச்சல் ப்யூச்சர்ஸ் நிறுவ


படிப்பகம்

www.padippakam.com

னத்துக்கு அரசு தரப்போவது ரூ. 56.49 கோடி. தனியார்மயத்தால் அரசுக்கு கிடைக்கும் வருவாய் அனைத்தும் இப்படி மீண்டும் தனியார் முதலாளிகளால் பறித்துக் கொள்ளப்படுவதோடு, கூடுதலாக ரூ. 1.5 கோடியை இழந்து அரசு நட்டப்படவுள்ளது என்று அறிக்கை குற்றம் சாட்டியுள்ளது. இதுதவிர சென்னையிலுள்ள இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவன நிலத்தின் மதிப்பு மிகமிகக் குறைவாக மதிப்பிடப்பட்டுத் தாரை வார்க்கப்பட்டுள்ளது. சென்னை சார் பதிவாளர் அலுவலக விதிகளுக்கு எதிராக, வேண்டுமென்றே நிலத்தின் மதிப்பு மிக அற்பமாகக் குறிப்பிடப்பட்டு அவசரமாக விற்கப்பட்டுள்ளது.

• அனைத்துலகத் தொலைதொடர்புக்கும், இணையதள சேவைக்கும் ஒரே ஏகபோக அரசுத்துறை நிறுவனமாக இருந்த விதேஷ் சஞ்சார் நிகாம் லிமிடெட் (வி.எஸ்.என்.எல்)டின் பங்குகள் தரகுப் பெருமுதலாளியான டாடா நிறுவனத்துக்கு 2002-ஆம் ஆண்டில் விற்கப்பட்டன. வெளிநாடுகளுக்கான தொலைபேசி சேவை மூலம் இலாபகரமாக இயங்கி வந்த இந்த நிறுவனம், டாடாவின் ஆதாயத்துக்காகவே தனியார்மயமாக்கப்பட்டது. பங்குகளை விற்பதற்கு முதல் நாளன்று வி.எஸ்.என்.எல். நிறுவனம், வருவாய்த் துறைக்கு எதிரான வரிவருவாய் வழக்கின் மூலம் ரூ.1400 கோடி ஆதாயமடைந்திருந்தது. இந்தத் தகவலை பங்கு விற்பனை அமைச்சகம் பங்குகளை வாங்குவோருக்குத் தெரிவித்து, சற்று தாமதித்து விற்பனை செய்திருந்தால் இன்னும் அதிக விலைக்கு பங்குகளை விற்றிருக்க முடியும். வரிவருவாய் வழக்கின் மூலம் கிடைத்த இந்த ஆதாயத் தொகை வி.எஸ்.என்.எல். நிறுவனத்தின் சொத்து மதிப்பில் சேர்க்கப்படாமல் அவசர அவசரமாக பங்குகள் விற்கப்பட்டுள்ளன.

அதாவது, வி.எஸ்.என்.எல். பங்கு விற்பனை மூலம் அரசுக்குக் கிடைத்த தொகை ரூ. 1439.25 கோடி. பங்கு விற்பனையின் போது, வி.எஸ்.என்.எல்.-இன் சொத்து மதிப்பில் சேர்க்கப்படாத, வரி வருவாய் வழக்கில் கிடைத்த ஆதாயத் தொகை ரூ.1400 கோடி. ஆக, வி.எஸ்.என்.எல். பங்கு விற்பனை மூலம் அரசுக்குக் கிடைத்த நிகர வருவாய் வெறும் 39.25 கோடி மட்டுமே. இந்த மோசடியை தணிக்கை கட்டுப்பாட்டு அதிகாரியின் அறிக்கை பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளது.



பா.ஜ.க. ஆட்சியில் தனியார்மயமாக்கல் துறையின் அமைச்சராக இருந்த அருண்ஷோரி.

இதுதவிர, வி.எஸ்.என்.எல். நிறுவனத்துக்குச் சொந்தமான 1230 ஏக்கர் நிலத்தில் 773 ஏக்கர் உபரி நிலம் என்றும் அதற்குத் தனியாக விலை நிர்ணயம் செய்து சொத்து மதிப்பில் சேர்த்து, அதன்பிறகு பங்குகளை விற்க வேண்டும் என்றும் தொலைதொடர்பு அமைச்சகம் வி.எஸ்.என்.எல். பங்குகளை விற்பதற்கு 10 நாட்கள் முன்னதாகவே பங்கு விற்பனை அமைச்சகத்திடம் பரிந்துரைத்தது. ஆனால், பா.ஜ.க. அரசின் பங்கு விற்பனை அமைச்சராக இருந்த அருண்ஷோரி, இந்த உபரி நிலத்துக்கு சல்லிக்காசு கூடப் பெறாமல் டாடாவுக்குத் தாரை வார்த்துள்ளார். இந்த உபரி நிலத்தின் மீது டாடா உரிமை கொண்டாட அனுமதிப்பது முறைகேடானது என்றும் பங்கு விற்பனை முடிந்து நான்கு ஆண்டுகளுக்கு மேலாகியும் இந்த உபரி நிலத்தின் மூலம் எவ்வித வருவாயும் அரசுக்குக் கிடைக்காமல் போயுள்ளது என்றும் குற்றம் சாட்டியுள்ளது தணிக்கை கட்டுப்பாட்டு அதிகாரி சமர்ப்பித்துள்ள அறிக்கை.

• அரசுத்துறை நிறுவனமான பாரதீப் பாஸ்பேட்ஸ்-இன் பங்குகள் 2002-ஆம் ஆண்டில் ரூ. 151.70-கோடிக்கு ஜுவாரி மாரோக் பாஸ்பேட் என்ற தரகு முதலாளித்துவ நிறுவனத்துக்கு விற்கப்பட்டன. விற்பனைக்குப் பிந்திய இழப்பீடாக அந்த நிறுவனம் ரூ. 151.55 கோடி கோரியுள்ளது. இதை ஏற்றுக் கொண்ட பா.ஜ.க. அரசு, பரிசீலிப்பதாகக் கூறியுள்ளது தனியார்மயமாக்கலால் அரசுக்குக் கிடைத்த வருவாய் அனைத்தும் இப்படி மீண்டும் பங்குகளை வாங்கிய முதலாளிகளுக்கே திருப்பிக் கொடுப்பது பேரிழப்பாகும் என்று சாடுகிறது தணிக்கை கட்டுப்பாட்டு அதிகாரியின் அறிக்கை.

• இவை எல்லாவற்றையும் விட அரசுத்துறை நிறுவனமான இந்துஸ்தான் துத்தநாக தொழிற்சாலையின் பங்குகளை விற்றதில், வெளிப்படையாகவே மோசடிகளும் குறையாடல்களும் நடந்துள்ளன. துத்தநாக தொழிற்சாலை 2002-ஆம் ஆண்டில் ஸ்டெர்லைட் நிறுவனத்துக்கு விற்கப்பட்டது. தொடக்கத்திலேயே பேரத்தில் முறைகேடுகள் நடந்துள்ளதாகப் புகார்கள் எழுந்ததும், தணிக்கை கட்டுப்பாட்டு அதிகாரிகள் விசாரணையில் இறங்கி அடுக்கடுக்காக பல மோசடிகள் நடந்துள்ளதை அம்பலப்படுத்தினர். துத்தநாக நிறுவனத்தின் சொத்துக்களைப் பற்றி மிகக் குறைவாக மதிப்பீடு செய்த அரசின் ஆலோசக நிறுவனமான "பரிபாஸ் ஈக்விடீஸ் லிமிடெட்", விற்பனை முடிந்த மறுநிமிடமே மூடப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டது. ஸ்டெர்லைட் முதலாளிகளும் பா.ஜ.க.

தேசிய அலுமினிய நிறுவனத்தின் 10 சதவீதப் பங்குகளைத் தனியாருக்கு விற்பதை எதிர்த்து புவனேசுவர் நகரில் நடந்த எதிர்க்கட்சியினரின் ஆர்ப்பாட்டம்.



www.padippakam.com



நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் பங்குகளைத் தனியாருக்கு விற்க முடிவு எடுக்கப்பட்டதை எதிர்த்து நடந்த தொழிலாளர்கள் கூட்டமைப்பின் உண்ணாவிரதப் போராட்டம். (கோப்புப் படம்).

ஆட்சியாளர்களும் பேர ஏற்பாட்டுக்காக உருவாக்கிய பினாமி நிறுவனம்தான் இது என்று நிரூபணமானது. மேலும், இந்தப் பேரம் பற்றியோ, துத்தநாக நிறுவனத்தின் சொத்து மதிப்பீடு பற்றிய அறிக்கைகளோ, ஆவணங்களோ நிதியமைச்சகத்திடம் இல்லை. அத்தனையும் திட்டமிட்டே பா.ஜ.க. ஆட்சியாளர்களால் அழிக்கப்பட்டுவிட்டன.

இவைதவிர, கம்ப்யூட்டர் மெயின்டனன்ஸ் கார்ப்பரேஷன், இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் 19 பெரும் ஓட்டல்களை விற்ற விவகாரம் என அடுக்கடுக்காக அரசுத்துறை நிறுவனங்கள் அடிமாட்டு விலைக்கு விற்கப்பட்டதையும், அதில் நடந்துள்ள மோசடிகளையும் பட்டியல் போட்டுக் காட்டியுள்ளது தணிக்கை கட்டுப்பாட்டு அதிகாரியின் அறிக்கை.

மோசடிகளையும் சூறையாடல்களையும் பற்றிப் பட்டியலிட்டுள்ள போதிலும், இதில் சம்பந்தப்பட்டுள்ள குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கவோ, கொள்ளையடித்த சொத்துக்களைப் பறிமுதல் செய்யவோ தணிக்கை கட்டுப்பாடு அதிகாரிகளுக்கு அதிகாரம் கிடையாது. அரசாங்கத்தின் குறைகளைச் சுட்டிக் காட்டி பரிந்துரைகளைக் கூறுவதுதான் இந்த அமைப்பின் பணி. முதலாளித்துவ அரசியலமைப்பு முறைக்கே உரித்தான, பரஸ்பர சோதித்தலும் அதிகார சமநிலையும் என்ற ஏற்பாட்டின்படி, அதிகாரவர்க்கம் - அரசாங்கத்தினிடையே ஜனநாயகம், சிறந்த நிர்வாகம் என்ற கொள்கையை செயல்படுத்துவதன் பேரில் உருவாக்கப்பட்டுள்ளது தணிக்கை கட்டுப்பாடு அதிகாரிகள் என்ற அமைப்பு.

எனவேதான், தணிக்கை கட்டுப்பாடு அதிகாரியின் அறிக்கை எனும் பல் பிடுங்கப்பட்ட பாம்பு சீறுவதைப் பார்த்து, முந்தைய பா.ஜ.க. ஆட்சியாளர்களும் தரகுப் பெருமுதலாளிகளும் கைகொட்டிச்சிரித்து ஏளனம் செய்கின்றனர். முதலாளிகள் பொதுச் சொத்தைச்சூறையாடுவதற்கென்றே உருவாக்கப்பட்ட பங்கு விற்பனைத் துறையின் முன்னாள் பா.ஜ.க. அமைச்சரான அருண்ஷோரி, ''இந்த அறிக்கையானது குறுகிய பார்வை கொண்டது; நடைமுறைக்கு ஒவ்வாத பரிந்துரைகளைக் கூறுகிறது; இப்படி முட்டுக்கட்டைகள் போட்டால் பங்கு விற்பனை எனும் அரசின் கொள்கையைச் செயல்படுத்தவே முடியாமல் போய்விடும்'' என்று மிரட்டுகிறார். அதாவது, தனியார்மயமாக்கம் என்பது அரசின் கொள்கை; தனியார்மயம் என்றால் பொதுச் சொத்தைச் சூறையாடுவது; சூறையாடுவதற்கும் கொள்ளையடிப்பதற்கும் விதிமுறைகளும் ஒழுங்கு-கட்டுப்பாடுகளும் போட முடியுமா? அப்படிப் போட்டால் அரசின் கொள்கையை எப்படிச் செயல்படுத்த முடியும் என்பதுதான் 'தேசபக்த' பா.ஜ.க.வின் 'அறிவுஜீவி' அருண்ஷோரி எழுப்பும் கேள்வி.

அரசாங்கத்தின் பொதுச்சொத்தை சுருட்டிக் கொண்டால், முன்பெல்லாம் அதற்குப் பெயர் ஊழல். இப்போது அதற்குப் பெயர் தனியார்மயம். இதுதான் அரசின் கொள்கை. முதலாளிகள் கொள்ளையடிக்க ஏற்பாடு செய்வதுதான் அரசின் கொள்கையா என்று நீங்கள் சந்தேகப்படலாம். சந்தேகமே வேண்டாம்; இதுதான் அரசின் கொள்கை என்கிறது உச்சநீதி மன்றம். அரபிக் கடலில் உள்ள 20,000 கோடி ரூபாய் மதிப்புள்ள பன்னா, முக்தா எனும் இரு எண்ணெய் வயல்களை வெறும் 12 கோடி ரூபாய்க்கு ரிலையன்ஸ் - என்ரான் கூட்டணிக் கம்பெனிகளுக்குத் தாரை வார்த்துக் கொடுத்ததற்கு எதிராக நடந்த வழக்கில், இது அரசின் கொள்கை என்று தீர்ப்பளித்து வழக்கைத் தள்ளுபடி செய்தது, உச்சநீதி மன்றம்.

தனியார்மயமாக்கம் என்பது இலஞ்சமயமாக்கம்தான் என்று நோபல் பரிசு பெற்ற பொருளாதார ஆய்வாளரான ஜோசப் ஸ்டிக்லிட்ஸ் தனது ''உலகமயமாக்கமும் அதன் அதிருப்திகளும்'' நூலில் குறிப்பிடுகிறார். நரசிம்மராவ் - மன்மோகன் சிங் ஆட்சியில் தனியார்மயத்தைத் தொடங்கி வைத்து முதலாளிகளின் கொள்ளைக்கு சேவை செய்து இலஞ்சமயமாகிய காங்கிரசுக் கட்சி, கோடீசுவர கட்சியாகியது. இரண்டாம் கட்ட சீர்திருத்தம் என்ற பெயரில் தனியார்மயத்தைத் தீவிரப்படுத்தி, இலஞ்ச ஊழலில் பா.ஜ.க. ஊதிப் பெருத்தது. தனியார்மயமாக்கலால் பல்லாயிரம் கோடிகள் ஏப்பம் விடப்பட்டுள்ள போதிலும், நாடாளுமன்றத்திலோ அதற்கு வெளியிலோ இவ்விரு கட்சிகளும் வாய் திறக்கவில்லை.

இப்போது பா.ஜ.க.வுக்குப் போட்டியாக, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், பாரத மிகுமின் நிறுவனம், தேசிய அலுமினிய நிறுவனம். ஆகிய அரசுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்க முயற்சித்து வரும் காங்கிரசு கூட்டணி அரசு, இவையெல்லாவற்றையும் விஞ்சும் வகையில் முதலாளிகள் சூறையாடுவதற்காகவே சிறப்புப் பொருளாதார மண்டலங்களை வேகமாக நிறுவி வருகிறது. இந்நிலையில் தணிக்கை கட்டுப்பாட்டு அதிகாரியின் அறிக்கை மீது நடவடிக்கை எடுக்கக் கோருவதாலோ அல்லது போலி கம்யூனிஸ்டுகள் கோருவது போல மையப் புலனாய்வுத் துறை மூலம் உயர்மட்ட விசாரணை நடத்துவதாலோ தனியார்மயம் என்னும் பகற்கொள்ளையைத் தடுத்து நிறுத்திடமுடியாது. தனியார்மயம் - தாராள்மயம் - உலகமயம் எனும் மறுகாலனியாக்கம்தான் அரசின் கொள்கையாக உள்ள நிலையில், பொதுச் சொத்தைச் சூறையாடி, தொழிலாளர்களின் வேலையைப் பறித்து, விவசாயிகளைத் தற்கொலைச் சாவுக்குத் தள்ளியுள்ள மறுகாலனியாக்கத்துக்கும், அதைத் தீவிரமாகச் செயல்படுத்தி வரும் கைக்கூலி ஆட்சியாளர்களுக்கும் எதிராக நாட்டு மக்கள் ஐக்கியப்பட்டுப் போராடி, உழைக்கும் மக்களுக்கான அரசை நிறுவுவதைத் தவிர இனி வேறென்ன வழி இருக்கிறது?

• அன்பு


படிப்பகம்

www.padippakam.com

# ஓங்கட்டும் பகத்சிங்கின் புகழ்! ஒழியட்டும் மறுகாலனியாதிக்கம்!

## - தியாகத் தோழர் **பகத்சிங்**-கின் நூற்றாண்டு பிறந்தநாளில் புரட்சிகர அமைப்புகளின் சூளுரை!

**கா**ல் நூற்றாண்டு காலமே வாழ்ந்த ஒரு இளைஞனின் நினைவு, நூறாண்டுகளுக்குப் பின்னரும் நாட்டு மக்களால் போற்றப்படுகிறது என்றால் அந்தப் புரட்சியாளர்தான் பகத்சிங்! ஏகாதிபத்திய எதிர்ப்புச் சிங்கம் - தியாகத் தோழர் பகத்சிங்கின் நூறாம் ஆண்டு பிறந்த நாளை செப்.28 அன்று தமிழகமெங்கும் ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு ஆகிய புரட்சிகர அமைப்புகள் தாங்கள் செயல்படும் பகுதிகளில், அம்மாவீரனின் நினைவை நெஞ்சிலேந்தி வீரவணக்கம் செலுத்தியதோடு, மறுகாலனியாதிக்கத்தை வீழ்த்தி நாட்டை விடுதலை செய்ய உறுதியேற்று ஆர்ப்பாட்டம் - அரங்கக்கூட்டம் - கவியரங்கம், கலைநிகழ்ச்சிகள் நடத்தின. நாட்டு விடுதலையின் மீது மாளாக் காதல் கொண்டு, காலனியாதிக்கவாதிகளைக் கதிகலங்க வைத்த போராளி பகத்சிங்கின் உருவப்படம் கொண்ட துண்டுப் பிரசுரங்கள் - சுவரொட்டிகள் மூலம் தோழர் பகத்சிங்கின் மாவீரத்தையும் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வையும் மக்களின் நெஞ்சங்களில் விதைத்தன.

போராட்டமே வாழ்க்கையாகக் கொண்ட போராளி பகத்சிங்கின் நூறாவது பிறந்தநாளில், அரசியல் ஆர்ப்பாட்டத்தின் மூலம் விருதுநகர் மாவட்ட பு.ஜ.தொ.மு. அத்தியாகத் தோழருக்கு வீரவணக்கம் செலுத்தியது. ''ஆகஸ்டு - 15 போலி சுதந்திரத்தைத் திரைகிழிப்போம்! நாடு மீண்டும் காலனியாவதை முறியடிப்போம்!'' என்ற முழக்கத்துடன் செப். 28 அன்று மாலை விருதுநகர் தேசபந்து மைதானத்தில் பு.ஜ.தொ.மு. தோழர் ராஜு தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் வி.வி.மு. தோழர்கள் அகிலன், சிறீரங்கன் ஆகியோர் காந்தி - காங்கிரசின் துரோகத்தையும், பகத்சிங்கின் வீரத்தையும், போலி சுதந்திரத்தின் பின்னணியையும், இன்று நாடு மீண்டும் காலனியாக்கப்பட்டு வரும் சூழலில் விடுதலைப் போருக்கு அணிதிரள வேண்டிய அவசியத்தையும் விளக்கி உரையாற்றினர்.

ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளி பகத்சிங்கின் நூறாவது பிறந்தநாளையொட்டி, கோவில்பட்டி, சிவகாசி, சாத்தூர், அருப்புக்கோட்டை, காரியாபட்டி ஆகிய பகுதிகளில் பகத்சிங் உருவப்படத்துடன் மறுகாலனியாதிக்கத்தை முறியடிக்க அறைகூவி பு.ஜ.தொ.மு., வி.வி.மு. ஆகிய அமைப்புகளின் சார்பில் விரிவாக சுவரொட்டிப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. ஓட்டுக் கட்சிகளும் போலி கம்யூனிஸ்டுகளும் பகத்சிங்கை ஓரங்கட்டி வைத்துவிட்டு, உள்ளாட்சி தேர்தலில் பொறுக்கித் தின்ன போட்டி போட்டுக் கொண்டிருந்த தருணத்தில், பகத்சிங்கின் உண்மையான வாரிசுகள் நக்சல்பாரி புரட்சிகர அமைப்புகள்தான் என்பதை மீண்டும் நிரூபிப்பதாக இது அமைந்திருந்தது.

செப். 28 அன்று சென்னை, திருச்சி, தஞ்சை, கோவில்பட்டி, ஒசூர் ஆகிய பகுதிகளில் நடந்த அரங்கக்கூட்டம் - கவியரங்க நிகழ்ச்சிகளில், பகத்சிங்கின் போர்க்குணம், மதச்சார்பின்மை, விஞ்ஞான சோசலிசத்தின் மீது ஆழ்ந்த நம்பிக்கை, நாட்டுப்பற்று ஆகியவைதான் அவரது அடையாளம் என்பதையும், காந்தி - காங்கிரசின் துரோகத்தைத் திரைகிழித்தும் முன்னணித் தோழர்கள் சிறப்புரையாற்றினர். காலனியாதிக்கத்தைவிட கொடிய மறுகாலனியாதிக்கம் நம்மை அடிமைப்படுத்திவரும் இன்றைய சூழலில், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களை போர்க்குணத்தோடு முன்னெடுத்துச் செல்வதுதான், போராளி பகத்சிங்கிற்கு நாம் செலுத்தும் உண்மையான வீரவணக்கமாக இருக்க முடியும் என்பதை இந்நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டின. மாணவர்களும் இளைஞர்களும் உழைக்கும் மக்களும் திரளாகப் பங்கேற்ற இக்கூட்டங்கள் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத் தீயை மூட்டுவதாக அமைந்தன.

தருமபுரி மாவட்டம் பென்னாகரத்தில், செப். 29 அன்று பகத்சிங்புரத்தில் கவியரங்கம், கருத்தரங்கம், கலைநிகழ்ச்சிகளோடு பகத்சிங்கின் நூற்றாண்டு பிறந்தநாள் நிகழ்ச்சிகள் நடந்தன. பஞ்சாப் என்றதுமே பகத்சிங் நினைவுக்கு வருவதைப் போல, தருமபுரி என்றாலே நக்சல்பாரி புரட்சியாளர்கள்தான் நினைவுக்கு வருகிறார்கள் என்ற முன்னுரையோடு கவியரங்கத்திற்குத் தலைமை தாங்கிய ம.க.இ.க. தோழர் துரை. சண்முகம், மறுகாலனியாக்கத்தின் கொடிய விளைவுகளையும் நாம் பகத்சிங் வழியில் போராட வேண்டிய அவசியத்தையும் தனது கனல் மணக்கும் கவிதையில் குறிப்பிட்டார். இக்கவியரங்கமும் அதைத் தொடர்ந்து நடைபெற்ற கருத்தரங்கமும் தென்னகத்தில் கிளர்ந்தெழுந்த முதல் சுதந்திரப் போராட்டத்தின் வீரமரபை உயர்த்திப் பிடித்து, மீண்டும் ஒரு விடுதலைப் போருக்கு அறைகூவுவதாக அமைந்தன. மற்றவர்கள் பொறாமைப்படும் அளவுக்கு தனது வீரத்தையும் மரணத்தையும் அமைத்துக் கொண்ட அந்த பகத்சிங் இன்னும் சாகவில்லை; தியாகம் என்றும் மடிவதில்லை என்று தொடங்கும் புரட்சிகரப் பாடலுடன் ம.க.இ.க. மையக் கலைக்குழு நடத்திய கலைநிகழ்ச்சியின் உணர்ச்சிப் பெருக்கால், நாங்கள் பகத்சிங்கின் உண்மையான வாரிசுகள் என்ற பெருமிதத்துடன் பார்வையாளர்களின் நெஞ்சங்கள் விம்மித் தணிந்தன.

உடுமலையில், 23.10.06 அன்று நடந்த அரங்கக் கூட்டத்தில் பகத்சிங் வழியில் போராட சூளுரைத்த இளஞ்சிறுவர்களின் உரையும் ம.க.இ.க. தோழர் மணிவண்ணன் ஆற்றிய சிறப்புரையும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்ட உணர்வூட்டுவதாகவும், காந்தி-காங்கிரசின் துரோகத்தைத் திரைகிழித்துக் காட்டுவதாகவும் அமைந்தன.

ஏகாதிபத்திய எதிர்ப்பு எனும் புரட்சிகர அரசியலை பகத்சிங்கிடமிருந்து நீக்கிவிட்டு, அப்போராளியைப் பூசையறைப் படமாக மாற்றிவிட முயலும் ஓட்டுப் பொறுக்கி துரோகிகளின் எத்தணிப்புகளை முறியடித்து, பகத்சிங்கின் உண்மையான வாரிசுகள் நக்சல்பாரி புரட்சிகர அமைப்பினர்தான் என்பதை இந்நிகழ்ச்சிகள் நிரூபித்துக் காட்டின.

*-பு.ஜ. செய்தியாளர்கள்*



www.padippakam.com

## அடிக்கட்டுமானத் துறையில் தனியார்மயம்:

# பொதுச்சொத்தைக் கொள்ளையடிக்க ஒரு குறுக்குவழி

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி குறித்த செய்திகள் அனைத்திலும் அடிக்கட்டுமானத் துறை என்ற வார்த்தை அடிக்கடி தென்படுவதைக் காணலாம். "அடிக்கட்டுமானத்துறை வளர்ச்சி அடையாமல், இந்தியப் பொருளாதாரம் துரித வளர்ச்சி காண்பது சாத்தியம் அல்ல" என நாடாளுமன்றத்திலேயே நிதியமைச்சர் ப.சிதம்பரம் பேசியிருக்கிறார்.

நெடுஞ்சாலைகள் போடுவது; மின்சார நிலையங்கள் அமைப்பது; கனிமச் சுரங்கங்களை நிர்மாணிப்பது; போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவது போன்ற அடிக்கட்டுமானத் தொழில்களை 1991-க்கு முன்புவரை மத்திய - மாநில அரசுகள்தான் செயல்படுத்தி, நிர்வகித்து வந்தன. தாராளமயத்திற்குப் பின், அடிக்கட்டுமானத் தொழில்களிலும் தனியார் முதலாளிகள் நுழையத் தொடங்கிவிட்டனர்.

பெங்களூர் - மைசூர் இடையே விரைவு நெடுஞ்சாலையை (Express Highway) அமைத்து வரும் "நைஸ்" என்ற தனியார் நிறுவனத்திற்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கில் தீர்ப்பளித்த உச்சநீதி மன்றம், "எதையுமே கொடுக்காமல், சமூகம் இந்நிறுவனத்திடமிருந்து பயன் அடையப் போவதாக"க் குறிப்பிட்டுள்ளது. அடிக்கட்டுமானத் துறையில் தனியார் முதலாளிகள் நுழைவதை ஆளுங்கும்பல் எந்தளவிற்கு மண்டியிட்டு வரவேற்கிறது என்பதை இத் தீர்ப்புப் புட்டு வைக்கிறது.

"நைஸ்" நிறுவனத்திற்கு ஆதரவாகத் தரப்பட்ட உச்சநீதி மன்றத் தீர்ப்பின் படி பார்த்தால், அடிக்கட்டுமானத் தொழில்களில் நுழையும் தனியார் நிறுவனங்கள் எவ்விதக் கைமாறும் எதிர்பாராமல், சமூகத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபடுவதாகச் சொல்ல முடியுமா? உண்மையில், "நைஸ்" போன்ற இந்தத் தனியார் நிறுவனங்கள், தங்களின் சொந்தக் கைக் காசை மூலதனமாகப் போட்டுத்தான் தொழில்களை நடத்தி வருகின்றனவா? என்ற கேள்விகளைக் கேட்க முடியும். இதற்கான விடையை, அடிக்கட்டுமானத் துறையில் நுழைந்துள்ள நிறுவனங்களின் நடத்தையில் இருந்து பரிசீலிப்பதுதான் நேர்மையானதாக இருக்க முடியும்.

பத்தாண்டுகளுக்கு முன்பு, அமெரிக்க நிறுவனமான என்ரான் மகாராஷ்டிராவில் 3,000 கோடி ரூபாய் முதலீட்டில் மின்நிலையம் அமைத்ததை தனியார்மயத்தின் சாதனையாக ஆளுங்கும்பல் பீற்றிக் கொண்டது. ஆனால், என்ரான் மின்சாரம் தயாரித்து விற்கத் தொடங்கிய ஓரிரு ஆண்டுகளிலேயே, மகாராஷ்டிர மாநில மின்வாரியம் போண்டியாகிவிடும் அபாயம் எழுந்ததால், மகாராஷ்டிர மாநில அரசு என்ரானிடம் இருந்து மின்சாரம் வாங்குவதைக் கைகழுவியது. என்ரான் நிறுவனம் இழுத்து மூடப்பட்ட பொழுது, அத் தனியார் நிறுவனம், பொதுத்துறை வங்கிகள் - முதலீட்டு நிறுவனங்களிடமிருந்து வாங்கியிருந்த 3,600 கோடி ரூபாய் கடனைத் திருப்பிச் செலுத்தாமல், நாமம் போட்டது அம்பலமானது. அடிக்கட்டுமானத் துறையில் நுழையும் தனியார் நிறுவனங்கள் இப்படிப்பட்ட மோசடித்தனத்திலும், நாணயமற்ற வர்த்தக பேரத்திலும் ஈடுபடுவது என்ரானோடு முடிந்துவிடவில்லை.

இந்தியாவின் மிகவும் பிரபலமான தரகு முதலாளித்துவ நிறுவனங்களுள் "எஸ்.குமார்ஸ்" நிறுவனமும் ஒன்று. ஜவுளி, டயர் உற்பத்தி, தகவல் தொழில்நுட்பம், நிதிச் சேவை, மின்சார உற்பத்தி எனப் பல்வேறு விதமான தொழில்களை எஸ்.குமார்ஸ் நிறுவனம் நடத்தி வருகிறது.

இத்தொழில்கள் ஒருபுறமிருக்க, ம.பி. மாநிலத்தின் கர்கோன் மாவட்டத்திலுள்ள மண்ட்லேஷ்வர் என்ற ஊருக்கு அருகே, நர்மதை ஆற்றின் குறுக்கே அணையொன்றைக் கட்டி, (நர்மதை ஆற்றின் குறுக்கே கட்டத் திட்டமிடப்பட்டுள்ள 30 பெரிய அணைகளுள் இதுவும் ஒன்று) அதிலிருந்து நீர் மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திலும் எஸ்.குமார்ஸ் குழுமம் இறங்கியிருக்கிறது.

**மகேஷ்வர் அணைக்கட்டுத் திட்டம் உள்ளிட்டு நர்மதை ஆற்றின் மீது கட்டப்பட்டு வரும் ஆறு பெரிய அணைகளால் பாதிக்கப்பட்ட மக்கள், ம.பி. தலைநகர் போபாலில் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலம்.**





**அரசு நிலம் - ஏழை விவசாயிகளின் நிலங்களை ஆக்கிரமித்து அமைக்கப்படும் பெங்களூர் - மைசூர் விரைவு நெடுஞ்சாலை.**

''மகேஷ்வர் திட்டம்'' என அழைக்கப்படும் இந்தத் திட்டத்திற்கான ஒப்புதல் 1994 - ஆம் ஆண்டே மைய அரசால் எஸ்.குமார்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு விட்டது. 1997-ஆம் ஆண்டிலேயே இத்திட்டத்தைத் தொடங்குவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டு விட்டாலும், இன்றும் கூட அணைக்கட்டு கட்டும் பணிகூட முழுமையாக நிறைவடையவில்லை. நர்மதை பாதுகாப்பு இயக்கத்தினர் நடத்தும் போராட்டங்களால்தான் மகேஷ்வர் திட்டம் தடைப்பட்டு நிற்பதாகக் குற்றஞ் சுமத்துகிறது எஸ்.குமார்ஸ் நிறுவனம்.

மகேஷ்வர் அணைக்கட்டும், நீர் மின்சாரத் திட்டமும் முழுமையாக நிறைவடையும்பொழுது, இப்பகுதியிலுள்ள 81 கிராமங்கள் முழுமையாகத் தண்ணீருக்குள் மூழ்கிவிடும். விவசாயிகள், மீனவர்கள், படகு ஓட்டுபவர்கள், மணல் அள்ளும் கூலித் தொழிலாளிகள் - என ஏறத்தாழ ஒரு இலட்சம் உழைக்கும் மக்கள், தாங்கள் வாழ்ந்த கிராமங்களில் இருந்து இடம் பெயர வேண்டும்.

மகேஷ்வர் திட்டத்தால் இடம் பெயர வேண்டிய அனைவருக்கும் மறுவாழ்வு அளிக்கும் திட்டத்தை - திட்டத்தைத்தான் - 1998-க்குள் எஸ்.குமார்ஸ் நிறுவனம் அளித்து விடவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் தான், அணைக்கட்டைக் கட்டுவதற்கான ஒப்புதல் மைய அரசால் 1994-ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. ஆனால், கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளில், பாதிக்கப்படும் மக்களின் மறுவாழ்விற்கான திட்டத்தைக் கூட எஸ்.குமார்ஸ் தயாரித்திருக்கவில்லை என்பதுதான் கேவலமான உண்மை.

பாதிக்கப்படப் போகும் மக்களின் மறுவாழ்வு குறித்து 1998-இல் ஆய்வு நடத்திய ம.பி. அரசும்; 2000-இல் ஆய்வு செய்த ஜெர்மன் நாட்டின் சமூக வளர்ச்சி அமைச்சகமும் இந்த உண்மையை ஒப்புக் கொண்டுள்ளன. மறுவாழ்வுக்கான திட்டத்தை 1998-க்குள் தயாரித்து அளிக்க வேண்டும் என்ற காலக் கெடுநிலை 2001-ஆம் ஆண்டு வரை நீட்டித்து, மைய அரசு சலுகை வழங்கியது. எனினும், 2006 வரையில் கூட மறுவாழ்வுக்கான திட்டத்தை எஸ்.குமார்ஸ் நிறுவனம் தயாரித்துக் கொடுக்கவில்லை. இதனால்தான், எஸ்.குமார்ஸோடு கூட்டுச் சேர்ந்திருந்த அமெரிக்காவையும், ஜெர்மனியையும் சேர்ந்த மூன்று பன்னாட்டு நிறுவனங்கள், இத்திட்டத்தில் இருந்து விலகிக் கொண்டு விட்டன.

பீற்றிக் கொள்ளப்படும் இந்தத் தனியார் அணைக்கட்டு - நீர் மின்சாரத் திட்டம் தடைப்பட்டு நிற்பதற்கு, எஸ்.குமார்ஸ் குழுமம் மறுவாழ்வு திட்டத்தை 2006 வரை தயாரிக்கவில்லை என்பதுகூட முழுமையான, உண்மையான காரணம் கிடையாது. மகேஷ்வர் திட்டத்தைத் தொடங்குவதற்காக, 1998-ஆம் ஆண்டு எஸ்.குமார்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட 330 கோடி ரூபாய் அரசுக் கடனை, இந்த நிறுவனம் ஏப்பம் விட்டுவிட்டது; அதனால்தான் இந்தத் திட்டம் படுத்துக் கிடக்கிறது என்பதுதான் உண்மை. எஸ்.குமார்ஸ் குழுமம், தனது திருட்டுத்தனத்தை மூடி மறைப்பதற்காகவே, நர்மதை பாதுகாப்பு இயக்கத்தினர் மீது வீண்பழி சுமத்துகிறது. எஸ்.குமார்ஸின் இந்த மோசடிக்கு மைய-மாநில அரசுகள் துணையாக நிற்கின்றன.

மத்தியப்பிரதேச அரசு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு, மூன்று கோடி ரூபாய் வரைதான் (தொழில் தொடங்க) கடன் கொடுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த விதி அப்பட்டமாக மீறப்பட்டு, அத்தொழில் வளர்ச்சி நிறுவனம் எஸ்.குமார்ஸ் குழுமத்துக்கு ஒரே தவணையில் 380 கோடி ரூபாய் வரை கடனாக வழங்கியது. இதற்காகவே, எஸ்.குமார்ஸ் நிறுவனத்தோடும், மகேஷ்வர் திட்டத்தோடும் தொடர்புடையவை என்ற பெயரில் 42 பெயர்ப் பலகை நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன.

இந்த 380 கோடி ரூபாயும், அரசிடமிருந்த தொழிலாளர்களின் ஓய்வூதிய சேமிப்பு, சேமநல நிதிபிடித்தம், அரசு ஊழியர்களுக்குத் தரப்பட வேண்டிய ஓய்வூதியத் தொகை, கூட்டுறவு வங்கிகளில் உள்ள மக்களின் சேமிப்பு ஆகியவற்றில் இருந்து பெறப்பட்டு, எஸ்.குமார்ஸ் நிறுவனத்திற்கு மடைமாற்றப்பட்டது.

இந்தக் கடன் வட்டியும், முதலுமாகச் சேர்ந்து இன்று 800 கோடி ரூபாயாக வளர்ந்துவிட்டது. ஆனால், மகேஷ்வர் திட்டமோ இன்னும் காகிதத் திட்டமாகத்தான் இருக்கிறது.

ஐந்தாண்டுகளுக்கு முன்பு, இம்மோசடியைப் பற்றி விசாரித்த, மத்தியப் பிரதேச மாநில அரசின் பொருளாதாரக் குற்றப்பிரிவு, எஸ்.குமார்ஸ் நிறுவனம், அதனுடன் 'தொடர்புடைய' 42 நிறுவனங்கள் மற்றும் அரசு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் முன்னாள் மேலாண்மை இயக்குநர் - அதிகாரிகள் மீது சதி செய்தல், ஏமாற்றுதல், மோசடி செய்தல் ஆகிய பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்தது. மேலும் இந்தத் திட்டம் தொடர்புடைய, அந்நிறுவனத்தின் சொத்துக்கள் அனைத்தும் இந்தக் கடனுக்கு ஈடாகப் பறிமுதல் செய்யப்பட்டன.

எஸ்.குமார்ஸ் நிறுவனத்திற்கு எதிராக எடுக்கப்பட்ட இந்தச் சட்டபூர்வ நடவடிக்கைகள் இன்று பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டிவிடும் கதையாக முடிந்துவிட்டது. ம.பி. அரசால் கைப்பற்றப்பட்ட எஸ்.குமார்ஸ் குழுமத்தின் சொத்துக்கள் அந்நிறுவனத்திடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டிருப்பதோடு, அந்நிறுவனம் அரசு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு உடனடியாகச் செலுத்த வேண்டிய 103 கோடி ரூபாய் கடன் நிலுவைத் தொகையில் 30 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும், இக்கடனுக்கான வட்டி 14 சதவீதத்தில் இருந்து 8 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருப்பதோடு, எஸ்.குமார்ஸ் குழுமம் இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக மைய-மாநில அரசுகளின் பொதுத் துறை நிறுவனங்களிடமிருந்து மேலும் கடன் வாங்கிக் கொள்ளவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

www.padippakam.com

இந்தத் திடீர் சலுகைகளால் திக்கு முக்காடிப் போன எஸ்.குமார்ஸ் குழுமம், ''இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியும், எல்.ஐ.சி. நிறுவனமும் 90 கோடி ரூபாய் அளவிற்கும்; பாரத மிகுமின் நிறுவனம் 70 கோடி ரூபாய் அளவிற்கும் மகேஷ்வர் திட்டப் பங்குகளை வாங்கிக் கொள்ள வேண்டும்; இந்தியத் தொழில் முதலீட்டு நிறுவனத்திற்கு எஸ்.குமார்ஸ் குழுமம் தரவேண்டிய 19.5 கோடி ரூபாய் கடனைப் பங்குகளாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்'' எனக் கோரியுள்ளது:

மேலும், கிராமப்புற மின்மயமாக்க நிறுவனத்திடமிருந்து 250 கோடி ரூபாயும்; வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து 259 கோடி ரூபாயும்; மின்சார முதலீட்டு நிறுவனத்திடமிருந்து 700 கோடி ரூபாயும் கடன் பெற முயன்று வருகிறது. இவை ஒருபுறமிருக்க, பங்குச் சந்தைகளின் மூலம் பொதுமக்களிடமிருந்து 700 கோடி ரூபாய் திரட்டவும் எஸ்.குமார்ஸ் குழுமம் முயன்று வருகிறது.

கூட்டுறவு வங்கியிலோ / பொதுத் துறை வங்கியிலோ கடன் வாங்கிய விவசாயி எதிர்பாராதவிதமாகக் கடனைக் கட்டத் தவறினால், அவருக்கு மீண்டும் கடன் கொடுப்பது உடனடியாக மறுக்கப்படுகிறது. கடனைக் கட்டத் தவறும் விவசாயிகளின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுகின்றன ஒரு சாதாரண விவசாயிக்குப் பொருந்தும் இந்த விதியும், ஜப்தி நடவடிக்கைகளும் தரகு முதலாளி எஸ்.குமார்ஸ் நிறுவனத்திற்குப் பொருந்தாமல் போவதை அரசின், அதிகார வர்க்கத்தின் பாரபட்சமான நடவடிக்கை என்று மட்டும் சுருக்கிப் பார்க்க முடியாது. இதுதான் தனியார்மயம் - தாராளமயத்தின் விதி; அரசின் முதலீட்டுக் கொள்கை. இந்தக் கொள்கையின் காரணமாகத்தான் ஒரு காகிதத் திட்டத்தைக் காட்டி ஏற்கெனவே 380 கோடி ரூபாய் கடனை வாங்கி ஏப்பம்விட்ட எஸ்.குமார்ஸ் நிறுவனத்திற்கு, மீண்டும் 1,200 கோடி ரூபாய்க்கும் மேலாகக் கடன் கொடுக்க சலுகைகள் காட்டப்படுகின்றன.

எஸ்.குமார்ஸ் குழுமம் மகேஷ்வர் அணைக்கட்டைக் கட்டி முடித்து, மின்சாரத்தை உற்பத்தி செய்தால், அது இன்னொரு பகற் கொள்ளையாக இருக்கும். ம.பி. மாநில மின்சார வாரியம் 1 கிலோவாட் நீர்மின்சாரத்தை 0.25 பைசாவுக்குத் தயாரித்து வழங்குகிறது. ஆனால், எஸ்.குமார்ஸ் தயாரிக்கும் மின்சாரத்தை, 1 கிலோவாட்டிற்கு ரூ. 3.50-லிருந்து ரூ. 4.00 வரை விலை கொடுத்து ம.பி. மாநில மின்சார வாரியம் வாங்க வேண்டியிருக்கும்; ஏனென்றால், எஸ்.குமார்ஸ் நிறுவனத்திற்கு ஆண்டொன்றுக்கு 16 சதவீதம் முதல் 32 சதவீதம் வரை இலாபம் கிடைக்கும்படி ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. என்ரான் நிறுவனம் மகாராஷ்டிர மாநில மின்வாரியத்தைப் போண்டியாக்கியதைப் போல, எஸ்.குமார்ஸ் ம.பி. மாநில மின்வாரியத்தை மொட்டையடிக்கும் நிலை எதிர்காலத்தில் வரக்கூடும்.

**1,600 கோடி ரூபாய் பெறுமான பெங்களூர் - மைசூர் விரைவு நெடுஞ்சாலைத் திட்டம் நிறைவு பெறும் முன்பே, ''நைஸ்'' நிறுவனம் பெங்களூருக்கு அருகேயுள்ள நிலங்களைத் தகவல் - தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு விற்பதன் மூலம் 700 கோடி ரூபாய் வருமானம் ஈட்டிவிடும்.**

•••

பெங்களூர் - மைசூர் இடையே விரைவு நெடுஞ்சாலையை அமைத்துவரும் ''நைஸ்'' நிறுவனம், எஸ்.குமார்ஸைப் போல நிதி மோசடியில் ஈடுபடவில்லையென்றாலும், மிகப்பெரிய நில மோசடியை அரசின் - நீதிமன்றத்தின் ஆதரவோடு நடத்திவருவது அம்பலமாகியுள்ளது.

பெங்களூர் - மைசூர் இடையே 111 கி.மீ தொலைவுக்கு விரைவு நெடுஞ்சாலை அமைக்கவும்; பெங்களூரில் இருந்து 21 கி.மீ. தொலைவில் உள்ள பிதாதி கிராமத்தின் அருகே நவீனமான, ஐந்து நட்சத்திரப் புறநகரை அமைக்கவும் நைஸ் நிறுவனத்திற்கு, தொடக்கத்தில் 18,313 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. இது பின்னர் எவ்விதக் கணக்கீடும், ஆய்வும் இன்றி 21,000 ஏக்கராகவும்; இறுதியாக 29,258 ஏக்கராகவும் உயர்த்தப்பட்டது.

கர்நாடக மாநிலப் பொதுப்பணித் துறையில் தலைமைப் பொறியாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற சோமசேகர் ரெட்டி என்பவர், ''பெங்களூர் - மைசூர் இடையே விரைவு நெடுஞ்சாலை அமைக்க 6,999 ஏக்கர் நிலம் போதுமானது; ரியல் எஸ்டேட் வியாபார நோக்கத்தில்தான் நைஸ் நிறுவனத்திற்குத் தேவையான அளவிற்கும் அதிகமாக நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது'' எனக் குறிப்பிட்டு, கர்நாடக உயர்நீதி மன்றத்தில் வழக்கொன்று போட்டார்.

இந்த வழக்கு விசாரணையில் நைஸ் நிறுவனத்திற்கு ஆதரவாக நின்ற கர்நாடக மாநில அரசு, ''சோமசேகர் ரெட்டி பழைய முறைப்படி நில அளவீடு செய்திருக்கிறார். அவருக்கு நவீன நில அளவீடு பற்றித் தெரியாது'' என வாதாடி, இந்த நிலத் திருட்டை நியாயப்படுத்தியது.

சோமசேகர் ரெட்டியின் வழக்கை விசாரித்த கர்நாடக உயர்நீதி மன்றமும்; இவ்வழக்கின் மேல்முறையீட்டை விசாரித்த உச்சநீதி மன்றமும், நவீன நில அளவீடின் படி, 111 கி.மீ. தொலைவுள்ள விரைவு நெடுஞ்சாலை அமைப்பதற்கு எவ்வளவு ஏக்கர் நிலம் தேவைப்படும் என்ற அடிப்படையான கேள்வியைக் கூட எழுப்பாமல், நைஸ் நிறுவனத்திற்கு எதிரான வழக்கைத் தள்ளுபடி செய்தன.

இத்திட்டத்தின்படி, பெங்களூரில் இருந்து 21 கி.மீ. தொலைவில் உள்ள பிதாதி கிராமத்தில் இருந்துதான் நைஸ் நிறுவனத்திற்கு நிலம் ஒதுக்கப்பட வேண்டும். ஆனால், இந்த விதி அப்பட்டமாக மீறப்பட்டு, பெங்களூர் நகருக்கு அருகேயும் நிலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

பெங்களூர் நகருக்கு அருகே ஒரு ஏக்கர் நிலம் சுமார் 2 கோடி ரூபாய்க்கு விலை போகிறது. ஆனால், நைஸ் நிறுவனத்திற்கோ, விவசாயிகளிடமிருந்து பிடுங்கப்பட்ட நிலங்கள் அடிமாட்டு விலைக்கு விற்கப்பட்டுள்ளன. இதனால், 1,600 கோடி ரூபாய் பெறுமான பெங்களூர் - மைசூர் விரைவு நெடுஞ்சாலைத் திட்டம் நிறைவு பெறும் முன்பே, நைஸ் நிறுவனம் பெங்களூருக்கு அருகேயுள்ள நிலங்களைத் தகவல் - தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு விற்பதன் மூலம் 700 கோடி ரூபாய் வருமானம் ஈட்டிவிடும் என முதலாளித்துவ பத்திரிகைகளே குறிப்பிடுகின்றன.

என்ரான், எஸ்.குமார்ஸ், நைஸ் ஆகிய உதாரணங்கள், அடிக்கட்டுமானத் துறையில் தனியார் நுழைவது என்பது பொதுச் சொத்தை, மக்களின் சேமிப்பை, நாட்டின் மூலவளங்களைத் தனியார் முதலாளிகள் சட்டபூர்வமாகக் கொள்ளையடிப்பதற்கான எளிய வழி என்பதை நிரூபித்து விட்டன. இந்தப் பகற் கொள்ளையின் மூலம் அவர்களின் பணப்பெட்டி வீங்குவதைத்தான், இந்தியப் பொருளாதாரத்தின் முன்னேற்றம் என ப.சிதம்பரம் வகையறாக்கள் கூறி வருகிறார்கள்!

• ரஹீம்

www.padippakam.com

## "பொறுக்கித் தின்ன போட்டிபோடும் உள்ளாட்சித் தேர்தலைப் புறக்கணிப்போம்! மக்கள் சர்வாதிகார மன்றங்களை நிறுவப் போராடுவோம்!"

*— புரட்சிகர அமைப்புகளின் அரசியல் பிரச்சாரம்*

ஏறத்தாழ 4 இலட்சம் பேர் பொறுக்கித் தின்ன போட்டி போட்ட உள்ளாட்சித் தேர்தலையும், அதிகாரமில்லாத உள்ளாட்சி அமைப்புகளால் ஒன்றும் செய்ய முடியாது என்பதையும், அதிகாரத்தில் மக்கள் பங்கேற்பதாகக் காட்டி ஏய்க்கும் மோசடிகளையும் அம்பலப்படுத்தி ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் "பொறுக்கித் தின்ன போட்டி போடும் உள்ளாட்சித் தேர்தலைப் புறக்கணிப்போம்!" என்ற மைய முழக்கத்துடன் தமிழகமெங்கும் தாங்கள் செயல்படும் பகுதிகளில் வீச்சாக அரசியல் பிரச்சார இயக்கத்தை நடத்தின.

உள்ளாட்சித் தேர்தல்கள் நீண்டகாலமாகவே நடப்பவை தான் என்றாலும், இன்றைய மறுகாலனிய சூழலில் இவை புதிய பரிமாணத்தைப் பெற்று வருகின்றன. தனியார்மய - தாராளமயக் கொள்கைகளின் விளைவாக விவசாயம் மற்றும் சிறுதொழில்களின் அழிவு; ஆறுகள், ஏரிகள், காடுகள், மலைகள், கனிவளங்கள் உள்ளிட்ட இயற்கை மூலாதாரங்கள் அனைத்தையும் பன்னாட்டு நிறுவனங்களும் தரகுப் பெருமுதலாளிகளும் வெறிகொண்டு ஆக்கிரமித்து வருவதும், இவற்றுக்கு எதிராக மக்கள் எதுவும் செய்ய இயலாத சூழ்நிலையில், இந்த நாடாளுமன்ற அரசியலமைப்பு முறையில் மக்கள் நம்பிக்கை இழந்து விடாமலிருக்க, ஆளும் வர்க்கங்கள் திட்டமிட்டு இயங்கி, இந்த அரசியலமைப்பில் தாங்களும் பங்கேற்பதாக மக்களைக் கருதச் செய்கின்றன. அதிகாரப் பரவல், உள்ளாட்சித் தேர்தல்களில் மகளிருக்கான இடஒதுக்கீடு, தலித்துகளுக்கான இட ஒதுக்கீடு, மகளிர் சுயஉதவிக் குழுக்களைப் பரவலாக்குதல் போன்றவை தீவிரமாகப் பிரச்சாரம் செய்யப்பட்டு, செயல்படுத்தப்படுகின்றன. உலக வங்கி, பன்னாட்டு நிதி நிறுவனங்கள், தரகுப் பெருமுதலாளிகள் மற்றும் இவர்களது எடுபிடிகளான தன்னார்வக் குழுக்கள், உள்ளூராட்சிகள் மீதான தமது செல்வாக்கையும் ஆதிக்கத்தையும் அதிகரித்து வருகின்றன. ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு தெருவிலும் இந்த ஆளும் வர்க்க அரசியலுக்கான ஏஜெண்டுகளை உருவாக்குகின்றன. இத்தகைய நபர்கள் புரட்சிக்கு எதிரான அரசியல்படையாகவும் ஆள்காட்டிகளாகவும் அடிமட்டத்திலேயே உருவாக்கப்படுகிறார்கள்.

இந்த அரசியல் ரீதியான அபாயம்தான் உள்ளாட்சித் தேர்தல் தோற்றுவிக்கும் மிக முக்கியமான அபாயம். எனவே, தற்போதைய உள்ளாட்சித் தேர்தல் என்பது பழைய வகைப்பட்ட உள்ளாட்சித் தேர்தல் அல்ல. இது, மறுகாலனிய சூழலில் ஏகாதிபத்திய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ள வீரிய ஒட்டுரக உள்ளாட்சித் தேர்தல்; சாதிவெறியும் பொறுக்கி அரசியலும் கைகோர்த்துக் கொண்டு, ஊர்ச் சொத்தைக் கொள்ளையிட சட்டபூர்வ ஏற்பாடு செய்துதரும் தேர்தல்.

அயோக்கியத்தனமான இம்மோசடித் தேர்தலைத் தோலுரித்து, மறுகாலனியாக்கத்திற்கு எதிராகப் போராட அறைகூவியழைத்து, பல்லாயிரக்கணக்கில் துண்டுப் பிரசுரம் வெளியிட்டு மக்களிடம் தேர்தல் புறக்கணிப்பு அரசியல் பிரச்சாரத்தோடு, தொடர்ச்சியாக தெருமுனைக் கூட்டங்களையும் இப்புரட்சிகர அமைப்புகள் நடத்தின. முழக்கப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், தட்டிகள், வீடுவீடாகப் பிரச்சாரம் - எனப் பல வடிவங்களில் நடந்த இப்பிரச்சார இயக்கத்தை உற்சாகத்தோடு உழைக்கும் மக்கள் வரவேற்று ஆதரித்தனர். விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய் நல்லூர் வட்டார வி.வி.மு. 8.10.06 அன்று நாள் முழுவதும் பத்துக்கும் மேற்பட்ட கிராமங்களில் சைக்கிள் பிரச்சாரப் பேரணியோடு தெருமுனைக் கூட்டங்களை நடத்தியது.

இவ்வமைப்பினர், உலகவங்கி ஆசிபெற்ற "கோவிந்தா" என்ற வேட்பாளர் "கன்னக்கோல்" மற்றும் "அல்வா" சின்னத்தில் நிற்பதாகச் சித்தரித்து, ஐந்தாண்டுகள் கொள்ளையடிக்க அனுமதிக்குமாறு கோரி அவர் அள்ளி வீசும் வாக்குறுதிகளைப் பட்டியலிட்டு நையாண்டி பாணியில் வெளியிட்ட துண்டுப் பிரசுரம் பெருத்த வரவேற்பைப் பெற்றது. சிதம்பரத்தில் நடராசர் கோவிலில் தேவாரம் பாடத் தடை விதித்து தீண்டாமையை நிலைநிறுத்தி வரும் தீட்சத பார்ப்பனர்கள் உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடுவதையும், அவர்களை ஆதரிக்கும் ஓட்டுக் கட்சிகளையும் அம்பலப்படுத்தி வெளியிடப்பட்ட பிரசுரமும் பெருத்த வரவேற்பைப் பெற்றன. திருச்சியில், கல்லூரிகளின் வாயிலருகே நடந்த தெருமுனைக் கூட்டங்களை போலீசு தடுக்க முற்பட்ட போது, மாணவர்களே வெகுண்டெழுந்து தேர்தல் புறக்கணிப்பு அரசியல் பிரச்சாரம் தொடர ஆதரவாக நின்றனர். திருவரங்கத்தில் ஆட்டோ ஓட்டுநர் பாதுகாப்புச் சங்கத்தின் சார்பில் நடந்த தெருமுனைக் கூட்டங்களும் ம.க.இ.க. மையக் கலைக்குழுவினர் நடத்திய வீதிநாடகம் - புரட்சிகரப் பாடல்களும் மக்களிடம் உற்சாகமான வரவேற்பைப் பெற்றன.

உடுமலையில் தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சார சுவரொட்டி ஒட்டிய தோழர்களை இழுத்துச் சென்ற போலீசு, அவர்களது பெற்றோரை அழைத்து மிரட்டியது. இன்னும் பல பகுதிகளில் சுவரொட்டிகளைப் போலீசார் கிழித்தெறிந்ததோடு, புரட்சிகர அமைப்புகளால் பொது இடங்களில் வைக்கப்பட்டிருந்த தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சார தட்டிகளைத் திருடிச் சென்றனர். பல பகுதிகளில் போலீசு, தெருமுனைக் கூட்டம் நடத்தக் கூட அனுமதி மறுத்து 'ஜனநாயகக் கடமை'யாற்றியது. இச்சட்டவிரோத அச்சுறுத்தல்களைத் துச்சமாக மதித்து, உள்ளாட்சித் தேர்தல் புறக்கணிப்பு அரசியல் பிரச்சாரத்தை தமக்கே உரித்தான வீரியத்தோடு இப்புரட்சிகர அமைப்புகள் நடத்தியுள்ளன. பண பலம், குண்டர்பலம், சாதிய பலத்தோடு ஓட்டுப் பொறுக்கிகள் நடத்திய ஆரவாரப் பிரச்சாரத்துடன் ஒப்பிடும்போது இது மிகக் குறைவானதுதான் என்றாலும், மறுகாலனியாக்கத்துக்கு எதிரான இப்புரட்சிகர அரசியல் பிரச்சாரம் மக்களிடம் ஏற்படுத்தியுள்ள தாக்கம் மிக உயர்வானது.

*-பு.ஜ. செய்தியாளர்கள்.*



திருவெண்ணெய்நல்லூரில்...



www.padippakam.com

சட்டங்கள், ஆணையங்கள், நடுவர்மன்றங்கள், திட்டங்கள்...

# அரசு தோட்டத்தில் விளைந்து கிடக்கும் ஏட்டுச் சுரைக்காய்கள்

**இந்தியாவின் மத்திய, மாநில ஆட்சியாளர்கள் அடுக்கடுக்கான பல சமூக நீதிச் சலுகைகளும், சமூக நலத் திட்டங்களும், மக்கள் உரிமைச் சட்டங்களும் கொண்டு வந்து நிறைவேற்றுவதாகக் கூறிக் கொள்கிறார்கள். ஆனால், இவையெல்லாம் எதனால் கொண்டு வரப்படுகின்றன, இவை எந்த அளவு நிறைவேற்றப்படுகின்றன, இவற்றால் என்னென்ன பயன்கள் விளைந்திருக்கின்றன என்று அலசும் தொடரின் இரண்டாம் பகுதி.**

### அரசு அமைப்பின் இரகசியமும் தகவல் அறியும் உரிமையும்

இந்தியா ஒரு ஜனநாயகக் குடியரசு என்று கூறிக் கொள்வதற்கான ஆதாரமாகத் திரும்பத் திரும்பச் சுட்டிக் காட்டப்படுவது, ''இந்த நாட்டுக் குடிமக்களின் எழுத்துரிமையும் பேச்சுரிமையும் அரசியல் சட்டத்தால் உறுதிப்படுத்தப் பட்டிருக்கிறது. எழுத்துரிமையும் பேச்சுரிமையும் அடிப்படை உரிமைகள் என்று அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன.''

பழைய அரச பரம்பரைக் கதை அமைப்புகளில் நாம் கண்டிருக்கிறோம். அதாவது, அரசக் குடும்பங்களில் இரட்டைக் குழந்தைகள் பிறந்து, ஒன்றினால் அரச பரம்பரைக்குக் கேடு விளையும் என்று அரசகுரு சொல்ல, அக்குழந்தையைக் கொன்று விடும்படி அரசன் உத்திரவு போடுவான். தற்செயலான காரணத்தால் தப்பிப் பிழைக்கும் அந்தக் குழந்தை காட்டிலே வளர்ந்து பெரியவனாகி, நாட்டுக்குத் திரும்பி சூழ்ச்சிக்காரர்களுக்கு எதிராகப் போராடி ''புரட்சி'' செய்யும். அந்தக் கதை அமைப்பில் வருவதைப் போல எழுத்துரிமை - பேச்சுரிமையுடன் சேர்ந்தே பிறப்பதுதான் தகவல் அறியும் உரிமை.

இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தின் 19(1) (அ) பிரிவு, இந்தியக் குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் பேச்சுரிமையையும் எழுத்துரிமையையும், அதாவது கருத்தறியச் செய்யும் உரிமையையும் உறுதிப்படுத்துவதாகக் கூறுகிறது. ஆனால், இந்தியக் குடிமக்களின் தகவல் அறியும் உரிமையைப் பற்றி எதுவுமே கூறாது மௌனம் சாதிக்கிறது. தகவல் அறியும் உரிமையின்றிப் பேச்சுரிமையும் எழுத்துரிமையும் ஊனப்பிறவியாகவே இருக்கும். அதேசமயம், ஆங்கிலேயக் காலனி ஆட்சிக் காலத்தில் அந்நிய ஆதிக்க ஆட்சியைப் பாதுகாத்துக் கொள்வதற்காக 1923-இல் கொண்டு வரப்பட்ட அரசு நிர்வாக இரகசியச் சட்டம் அப்படியே பாதுகாத்துப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

பேச்சுரிமை மற்றும் எழுத்துரிமையோடு பிரிக்க முடியாதபடி ஒட்டியிருப்பதுதான் தகவல் அறியும் உரிமை என்பதை உச்சநீதி மன்றம் பல ஆண்டுகளாகப் பல்வேறு தீர்ப்புகளில் சொல்லியிருக்கிறது. 1972 நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்களில் இந்திராகாந்தி செய்த அதிகார முறை கேடுகளை எதிர்த்து வழக்குப் போட்ட ராஜ்நாராயணன், பிரதமரின் பாதுகாப்புக் குறித்த ஆவணங்களைத் தரும்படி கோரினார். ''பிரதமரின் பாதுகாப்பு'' என்ற பெயரில் அரசு எந்திரத்தைக் கேடாகப் பயன்படுத்தித் தேர்தலில் இந்திராகாந்தி வெற்றி பெற்றார் என்பதுதான் வழக்கு. பிரதமரின் பாதுகாப்பு குறித்த தகவலைத் தரமுடியாது; அது தனக்குரிய தனிச்சிறப்பான உரிமையென்று அரசு கூறிவிட்டது. ஆனால், ''பொது ஊழியர்கள் பொதுப்பணிகள் ஆற்றும் போது, அவர்களின் ஒவ்வொரு நடவடிக்கை குறித்தும் அறிந்து கொள்வதற்கு இந்த நாட்டு மக்களுக்கு உரிமை உண்டு. பொதுப் பாதுகாப்பு சம்பந்தப்படாத எந்தவொரு விவகாரம் குறித்தும் அறிந்து கொள்ளும் உரிமை என்பது பேச்சுரிமை, எழுத்துரிமையிலிருந்து பெறப்படுகிறது'' என்று 1975-இல் மேற்படி வழக்கின்போது உச்சநீதி மன்றம் தீர்ப்புச் சொன்னது.

பின்னர் 1982 மற்றும் 1995-இல் இரு வேறு வழக்குகளின் மீது தீர்ப்புகள் சொன்ன போதும், ''தகவல் அறியும் உரிமையை உள்ளடக்கியதுதான் பேச்சுரிமையும் எழுத்துரிமையும்'' என்று உச்சநீதி மன்றம் கூறியது. ஆனால், ஒவ்வொருமுறை இலஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள் செய்து அம்பலப்படும் போதும் அரசு நிர்வாக இரகசியச் சட்டத்தின் பின்னே ஒளிந்து கொண்டு, நாட்டின் நலன் கருதி, பாதுகாப்புக் கருதித் தகவல்கள் தரமுடியாது என்று ஆட்சியாளர்களும் அதிகார வர்க்கமும் தப்பித்துக் கொண்டு வருவதுண்டு. குறிப்பாக, இராணுவம், துணை இராணுவம், போலீசின் ஏராளமான அராஜகக் கொடுஞ்செயல்கள், ஆட்சியாளர்கள் மற்றும் அதிகார வர்க்கத்தின் பல்வேறு ஆயுதபேர ஊழல்கள் பற்றிய புகார்கள் வரும்போதெல்லாம் நாட்டின் பாதுகாப்பு இரகசியங்கள் என்று கூறித் தகவல் அறியும் உரிமை முற்றாகப் பறிக்கப்பட்டது.

இதனால், எதிர்த்தரப்பு அரசியல்வாதிகளும், பத்திரிகையாளர்களும், அரசியல் விமர்சகர்களும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் இயற்ற வேண்டும் என்று பல ஆண்டுகளாக வலியுறுத்தி வந்தனர். ஆனால், ஆட்சியாளர்கள் யாரானாலும் இந்தக் கோரிக்கையைக் கண்டுகொள்ளவே இல்லை. 1990-களில் தனியார்மயம், தாராளமயம், உலகமயமாக்கம் என்ற புதிய பொருளாதாரக் கொள்கை புகுத்தப்பட்ட பிறகு, ஏற்கெனவே இந்திய அரசு கடைப்பிடித்து வரும் நிர்வாக இரகசியங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் நடைமுறை பன்னாட்டுத் தொழில் கழகங்களின் மூலதன நலன்களுக்குத் தடையாக இருப்பதைக் கண்டார்கள். ஆகவே, அந்த அந்நிய ஏகபோகங்கள் திறந்த அரசு நிர்வாகத்தையும், அதன் ஒரு பகுதியாக தகவல் அறியும் உரிமையையும் கோரினார்கள்.

எனவேதான் முற்போக்கு, ஜனநாயக அமைப்புகளைவிட அதிக ஆர்வத்தோடு தகவல் அறியும் சட்டம் இயற்றுவதற்கான இயக்கத்தை, ஏகாதிபத்திய நிதி உதவி பெறும் தொண்டு நிறுவனங்கள் நடத்தின. இவற்றின் விளைவாக 2002-ஆம் ஆண்டு தகவல் சுதந்திரச் சட்டம் ஒன்றை பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். அரசு ஒரு குறைப்பிரசவமாகப் பெற்றெடுத்தது. ஆனால், இச்சட்டமும் மத்திய அரசிதழில் வெளியிடப்படவில்லை.

www.padippakam.com

அதன் போதாமையை உணர்ந்த ஏகாதிபத்திய பன்னாட்டுத் தொழில் கழகங்களின் முன்முயற்சியினால், சோனியா காந்தியைத் தலைவராகக் கொண்ட தேசிய ஆலோசனைக் குழு வேறொரு தகவல் அறியும் சட்டத்தைக் கொண்டு வரும்படி நிர்பந்தித்து, 2005, மே மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.



''கிரஹக் சக்தி'' என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை விளக்கி பெங்களூர் நகரில் நடத்திய தெரு நாடகம்.

மேலோட்டமான முதல் நோக்கில், தகவல் அறியும் சட்டம் என்பது பிரமிக்கத்தக்கவாறான ஜனநாயக உரிமை போலவே தெரிகிறது. மத்திய, மாநில அரசுகள், உள்ளூராட்சி அமைப்புகள், இன்னும் அரசாங்கத்தால் அமைக்கப்பட்டு ஓரளவு நிதி உதவி பெற்று இயக்கப்படும் அரசு சாரா நிறுவனங்கள் உட்பட எல்லா அமைப்புகள் - அதிகாரிகளிடமும் இருந்து தேவையான தகவலைப் பெறும் உரிமையை ஒவ்வொரு குடிமக்களுக்கும் இச்சட்டம் வழங்குகிறது. தனியார் நிறுவனங்களிடமிருந்து கூட அரசாங்கத்தின் மூலம் தகவல் பெறும் உரிமையும் வழங்கப்பட்டுள்ளது. நாட்டின் பாதுகாப்பு இரகசியங்கள், அமைச்சரவையின் பரிசீலனையில் உள்ள விவகாரங்கள் தவிர, எல்லா விஷயங்களிலும் தகவல்களைக் கேட்டுப் பெற முடியும்.

சட்டம் நிறைவேற்றப்பட்ட 120 நாட்களில், தேர்தல் ஆணையத்துக்கு நிகரானத் தன்னதிகாரம் கொண்ட மத்திய, மாநில அளவிலான தகவல் ஆணையம் நிறுவப்படும்; தகவல் அறியும் உரிமை மறுக்கப்படும் ஒவ்வொரு வழக்கையும் ஒரு நடுவர் மன்றம் போல விசாரித்து நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் இந்த ஆணையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. சட்டம் நிறைவேற்றப்பட்ட நூறு நாட்களுக்குள் ஒவ்வொரு அலுவலகமும் பொது மக்களுக்கான தகவல் தரும் அதிகாரிகளை நியமித்து விடவேண்டும்.

எந்தவொரு நபரும் தகவல் அதிகாரிகளிடம் மனுப்போட்டு 30 நாட்களுக்குள் வேண்டியதைப் பெறலாம். தொடர்பு முகவரி தவிர வேறு எந்த விவரமும் தரத் தேவையில்லை. வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்பவரிடம் எந்தக் கட்டணமும் வசூலிக்கப்படமாட்டாது. மற்றவரிடம் குறைந்த அளவு கட்டணம் வசூலிக்கப்படும். குறிப்பிட்ட காலத்திற்குள், அதாவது தகவல் கோரி விண்ணப்பிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் முடிவு தெரிவிக்கப்படாவிட்டால் தகவல் அதிகாரிகள் மீது அபராதத் தண்டனையாக நாளொன்றுக்கு ரூ. 250 விதிக்கப்படும். அதிகபட்சம் 25,000 ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும். இதுதவிர, வேண்டுமென்றே தகவல் தர மறுக்கும் அதிகாரிகள் மீது துறைவாரியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சரி; தகவல் அறியும் உரிமையை வைத்துக் கொண்டு ஏழை - எளிய மக்கள் என்ன செய்ய முடியும் என்று பலரும் எண்ணக் கூடும்.

மஜுஹூம் நடாஃப் என்னும் ''ரிக்ஷா'' தொழிலாளி, இந்திரா வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் ஒரு வீடு பெறுவதற்கு முயன்ற போது அதிகாரிகளால் பந்தாடப்பட்டிருக்கிறார். எந்த அதிகாரியால் தனக்குரிய வாய்ப்பு மறுக்கப்பட்டது என்பதை அறியும் முயற்சியாக தகவல் அறியும் சட்டத்தின் கீழ், அவர் மனுப் போட்டதும் அரசமரியாதையுடன் வரவேற்றுக் கடன் வழங்கி, மனுவைத் திரும்பப் பெறும்படி நிர்பந்திக்கப்பட்டார். நன்னு என்ற கிழக்கு தில்லியில் வாழும் தினக் கூலித் தொழிலாளி தொலைந்துபோன தனது குடும்ப அட்டைக்கு நகல் அட்டை தரும்படி நடையாய் நடந்து, இறுதியில் தன்னை இப்படி இழுத்தடிக்கும் அதிகாரி பற்றிய விவரத்தைக் கேட்டு, தகவல் அறியும் சட்டத்தின் கீழ் மனு போட்டார். உடனடியாக சம்பந்தப்பட்ட அலுவலகத்துக்கு வரவழைத்து தேநீர் உபசரணையோடு, மனுவை விலக்கிக் கொள்ளும்படிக் கோரி, குடும்ப அட்டையும் வழங்கப்பட்டது.

ஆனால், இதெல்லாம் தகவல் அறியும் சட்டத்தின் விளைவுகள் - பாதிப்புகள் குறித்து முழுமையாக விழித்துக் கொள்ளும் முன்பு அதிகார வர்க்கம், அதிலும் கீழ்நிலை அதிகாரிகள் துவக்க நிலைப் பதற்றத்தின் காரணமாக நிகழ்ந்தது. ஆனால், விரைவிலேயே விழித்துக் கொண்ட அதிகார வர்க்கமும், ஆட்சியாளர்களும் தகவல் அறியும் முயற்சிகளுக்குக் கடுமையான எதிர்ப்புக் காட்டத் தொடங்கிவிட்டனர். தகவல் அறியும் உரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்ட சில மாதங்களிலேயே, தமிழ்நாட்டில் மட்டும் நூற்றுக்கும் மேற்பட்ட வழக்குகளில், குறிப்பிட்ட காலத்திற்குள் தர மறுத்துவிட்ட அதிகாரிகள் மீது மாநிலத் தகவல் ஆணையம் 'நோட்டீசு' கொடுத்திருக்கிறது. இப்படி நாடு முழுவதும் பல ஆயிரம் வழக்குகள் குவிந்திருக்கின்றன.

''கோப்புக்களில் உள்ள பதிவுகள், ஆவணங்கள், குறிப்பாணைகள், மின்-அஞ்சல்கள், கருத்துக்கள், ஆலோசனைகள்...'' ஆகிய அனைத்தும் அடங்கிய தகவல்

**தகவல் அறியும் உரிமைச் சட்ட அமலாக்கத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழாக் கருத்தரங்கில் பாதுகாப்பு ஏற்பாடுகள் என்ற பெயரில் கருத்தரங்குக்கு வந்த அழைப்பாளர்கள் அனைவரும் தடவித்தடவிச் சோதனை செய்யப்பட்டார்கள். முகம் துடைக்கும் காகிதங்கள் கூட பறிமுதல் செய்யப்பட்டன. கைக்குட்டைகள் கூட அரங்கிற்குள் அனுமதிக்கப்படவில்லை.**


படிப்பகம்

www.padippakam.com

களை அறியும், கேட்டுப் பெறும் உரிமை 12(எஃப்) பிரிவு இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. முக்கியமாக, அரசுக் கோப்புகளில் உள்ள ''கோப்புக் குறிப்புகளை''க் கேட்டு அறியும் உரிமையை இச்சட்டம் உள்ளடக்கி இருக்கிறது. இந்தக் கோப்புக் குறிப்புகள் மட்டும்தான், எந்தவொரு நிர்வாகச் செயல்பாட்டிலும், குறிப்பானதொரு முடிவை என்ன காரணத்திற்காக, யார் எடுத்தார்கள், மற்றவர்கள் அதன் மீது என்ன கருத்துக்கள், ஆலோசனைகள் கூறினார்கள் என்பதைத் தெளிவாக அறிய தரமுடியும்.



**தகவல் அறியும் சட்டத்தில் அதிகார வர்க்கத்திற்குச் சாதகமாகத் திருத்தங்கள் கொண்டு வர முயன்றதை எதிர்த்துப் போராட்டம் நடத்திய சந்தீப் பாண்டே என்பவரைச் சந்தித்து உரையாற்றும் முன்னாள் பிரதமர் வி.பி.சிங்.**

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் இந்தக் கோப்புக் குறிப்புகளை யாருக்கும் தரக்கூடாது என்பதில் அரசுத் தலைவர், முப்படைத் தளபதிகள், உச்சநீதி மன்றம், மைய அலுவலர் சேர்க்கை ஆணையம், மற்றும் பல்வேறு அமைச்சகங்கள் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. இதை ஏற்று, தகவல் அறியும் உரிமைச் சட்டத்துக்கு ஒரு திருத்தம் கொண்டு வந்து கோப்புக் குறிப்புகளைக் கோருவதற்குத் தடைவிதிப்பதென்று மைய அரசு முடிவு செய்து நாடாளுமன்றத்தில் அத்திருத்தத்தை நிறைவேற்றுவதற்கான நாளும் குறித்தது.

தகவல் அறியும் உரிமையிலிருந்து கோப்புக் குறிப்புகளை விலக்கி வைப்பது என்பது த.அ. சட்டத்தையே நீர்த்துப் போகச்செய்வது; முடக்கி வைப்பது ஆகும். எடுத்துக்காட்டாக பின்வரும் முறைகேடுகள் நடந்திருப்பது கோப்புக் குறிப்புகளில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டன. டெல்லி குடிநீர் வாரியத்திற்கான குடிநீர் மற்றும் வடிகால் திட்டத்துக்கான ஆய்வு, உலக வங்கியின் தலையீடு காரணமாக ''பிரைவேர் அவுஸ் கூப்பர்ஸ்'' என்று நிறுவனத்துக்கு முறைகேடாக ஒதுக்கப்பட்டது. பிரதமர் மன்மோகன் சிங்கின் வலதுகரமும், சீடரும், திட்டக் கமிசன் துணைத் தலைவருமான மாண்டேக் சிங் அலுவாலியாவின் மகன், திட்ட ஆலோசகர் பதவியில் நேர்காணலோ, விளம்பரமோ, போட்டியோ இல்லாமல் நியமிக்கப்பட்டார். டெல்லி உயர் நீதி மன்றத்தில் டெல்லி வளர்ச்சிக் குழுமம் அளித்த வாக்குறுதிக்கு மாறாக, கிழக்கு டெல்லியில் ஒதுக்குவதாக இருந்த மனைகள் குற்றக் கும்பலுக்குத் தாரை வார்க்கப்பட்டன. இதுபோன்ற முறைகேடுகள் எப்படி யாரால் நடக்கின்றன என்பது கோப்புக் குறிப்புகளில் இருந்து மட்டுமே தெரியவருகின்றன.

அதனால்தான், 2006 ஜனவரியில் முதன்முதலாக கோப்புக் குறிப்புகளைத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தரும்படி மத்திய தகவல் ஆணையம் உத்தரவிட்டபிறகு, எல்லா வழக்குகளிலும் கோப்புக் குறிப்புகளை தரமுடியாது என்று சம்பந்தப்பட்ட அமைச்சரகங்கள் மறுத்து வருவதோடு, தமது இணைய தளத்திலும், தமது முடிவை பிரசுரித்துள்ளன. இதையே சட்டத்திருத்தமாகக் கொண்டு வரும் முடிவை, பல தன்னார்வக் குழுக்களின் போராட்டங்களுக்குப் பிறகு, ஏகாதிபத்தியக் கைக்கூலி மன்மோகன் சிங் அரசு இப்போதைக்குக் கைவிட்டுள்ளது. ஆனால், துறைவாரியாக அதை அமலாக்கி வருகிறது.

இந்த இலட்சணத்தில் தகவல் அறியும் உரிமை சட்ட அமலாக்கத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழா கருத்தரங்கை மூன்று நாட்கள் டெல்லியில் கொண்டாடியிருக்கிறது. இதன் மூலம் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு தகவல் அறியும் உரிமை சட்டம் கொண்டு வந்து தனது ஜனநாயக மாட்சியைப் பீற்றிக் கொள்ள எத்தணித்தது. ஆனால் அதன் போலித்தனம் இந்த நிறைவு விழாவின் போதே அம்பலப்பட்டுப் போனது. நிறைவுக் கருத்தரங்கில் உரையாற்ற மன்மோகன் வந்தார். பாதுகாப்பு ஏற்பாடுகள் என்ற பெயரில் கருத்தரங்குக்கு வந்த அழைப்பாளர்கள் அனைவரும் தடவித்தடவிச் சோதனை செய்யப்பட்டார்கள். முகம் துடைக்கும் காகிதங்கள் கூட பறிமுதல் செய்யப்பட்டன. கைக்குட்டைகள் கூட அரங்கிற்குள் அனுமதிக்கப்படவில்லை; ''டோக்கன்''கள் வழங்கி அரங்கிற்கு வெளியிலேயே கைக்குட்டைகள் வைக்கப்பட்டன. கைக்குட்டையோ, முகம் துடைக்கும் தாளோ முழக்கங்கள் எழுதி ஆர்ப்பாட்டம் நடத்தி விடுவார்கள் என்று ஆட்சியாளர்கள் அஞ்சியிருக்கிறார்கள். முதல்நாள் அப்துல் கலாமின் உரைக்குப் பிறகு தகவல் அறியும் உரிமைச் சட்டம் நீர்த்துப் போகும்படி, சட்டத்திருத்தம் கொண்டு வருவதற்கு எதிராக அமைதியான ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அதன் எதிரொலியாகத்தான் இந்தப் ''பாதுகாப்புக் கெடுபிடி.'' காற்றில் இலை அசைந்தால் கூட ஆளும் வர்க்கங்கள் - ஆட்சியாளர்கள் நடுநடுங்குவார்கள் என்பது மீண்டும் மீண்டும் நிரூபணம் ஆகிறது!

(தொடரும்)

**தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோப்புக் குறிப்புகளை யாருக்கும் தரக்கூடாது என்பதில் அரசுத் தலைவர், முப்படைத் தளபதிகள், உச்சநீதி மன்றம், மைய அலுவலர் சேர்க்கை ஆணையம் மற்றும் பல்வேறு அமைச்சகங்கள் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.**

• அக்டோபர் இதழ் படித்தேன். அப்பப்பா! எவ்வளவு அருமையான விஷயங்கள். என்னுடைய நண்பர்களிடம் சிறப்புப் பொருளாதார மண்டலம் பற்றிய அட்டைப்படக் கட்டுரையையும் இன்றைய அரசியல் நிலைமையையும் பற்றி விளக்கி அவர்களிடம் 7 பிரதிகளை விற்பனை செய்தேன். புரட்சிகர அரசியலைப் பிரச்சாரம் செய்த மனநிறைவு எனக்கு ஏற்பட்டது. உழைக்கும் மக்களுக்கு அவசியமான உண்மைச் செய்திகளைத் தொடர்ந்து அளித்துவரும் பு.ஜ.வுக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்!

– எஸ்.சிவா, உசிலம்பட்டி.

• சிறப்புப் பொருளாதார மண்டலம் பற்றிய கட்டுரையும் விவசாயிகளின் போராட்டம் பற்றிய செய்தியும் மறுகாலனிய சுருக்கு இறுகி வருவதை உணர்த்துகிறது. நெருங்கிவிட்ட பேரபாயத்தை விளக்கிய அட்டைப்படக் கட்டுரை சிறப்பு.

– ஜீவா, ஜெயங்கொண்டம்.

• சிறப்புப் பொருளாதார மண்டலம் பற்றியும், இணையதள வர்த்தக சூதாட்டம் பற்றியும் வெளியான பு.ஜ. கட்டுரைகள் விவசாயிகளிடமும் வியாபாரிகளிடமும் பிரச்சாரத்துக்குப் பெரிதும் உதவின. விவசாயிகளை அணிதிரட்டிப் போராடாமல், மறுகாலனியாக்கத்தை வீழ்த்த முடியாது என்பதை பு.ஜ. இதழ் எடுப்பாக உணர்த்தியுள்ளது.

– வி.வி.மு., உசிலை வட்டம்.

• நாங்கள் குடியிருக்கும் பகுதியில், 30 பேர் கொண்ட மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ஆளும் கட்சிகள் லஞ்சம் கொடுத்து, உள்ளாட்சித் தேர்தலில் ஓட்டுப் போடச் செய்தன. நுண்கடன் எனும் கந்துவட்டியால் அடிமையாகிப் போகும் இக்குழுக்கள் சுதந்திரமாக வாக்களிக்கும் உரிமையையும் இழந்து நிற்கிறார்கள். பு.ஜ.வில் வெளியான கட்டுரை தன்னார்வக் குழுக்களின் சதியை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது.

– இராணி, ஓசூர்.

• சுய உதவிக் குழுக்களின் மூலம் நடக்கும் கந்துவட்டிக் கொள்ளையை பு.ஜ. மூலம் அறிந்த வாசகர்கள், இப்படித்தான் தங்கள் பகுதியில் நடக்கிறது என்று தங்கள் அனுபவத்தை விளக்கினார்கள். ஒரு புதிய வாசகர், ''வீடு வீடாக வந்து நீங்கள் பு.ஜ. இதழை விற்பனை செய்தபோது வேண்டாம் என்று அலட்சியப்படுத்தினேன்; பின்னர், தற்செயலாக இதழைப் படித்தபோது நான் மிகப் பெரிய தவறு செய்து விட்டதை உணர முடிந்தது'' என்று மனந்திறந்து குறிப்பிட்டார். ஓசூர் பகுதியில் சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கான ஆக்கிரமிப்புகள் நடந்துவரும் வேளையில், இதையொட்டி பு.ஜ.வில் வெளிவந்துள்ள கட்டுரை பிரச்சாரத்துக்கு உதவியாக அமைந்துள்ளது.

– வாசகர் வட்டம், ஓசூர்.




## வாசகர் கடிதம்

• மறுகாலனிய பயங்கரவாதத்தைத் தீவிரமாக்கும் நோக்கில், அரசு பயங்கரவாதத்தை நிரந்தரமாக்கும் ஏற்பாடுதான் ஆளும் கும்பலின், ''ஐயா! பயங்கரவாதம்'' என்ற பீதியூட்டும் ஒப்பாரி என்பதைத் தோலுரித்துக் காட்டியது சிறப்பு. புதிய பொருளாதாரக் கொள்கையால் தலைப்பாகைக்கு ஆபத்து என்றால், சிறப்புப் பொருளாதார மண்டலத்தால் தலைக்கே ஆபத்து என்பதை அட்டைப் படக் கட்டுரை மூலம் உணர முடிகிறது. பார்ப்பன பாசிசமும் ஏகாதிபத்திய கைக்கூலித்தனமும்தான் இந்துவெறி எட்டப்பர்களின் தேசபக்தி என்பதற்கு வந்தேமாதரம் பஜனையே சான்று கூறப் போதுமானது.

– இரா. மணிகண்டன், சூசுவாடி.

• சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் அபாயத்தை விளக்கும் வகையில் அட்டைப்படம் எடுப்பாக அமைந்துள்ளது. அட்டைப்படக் கட்டுரையை, நாட்டையும் மக்களையும் சிறப்புப் பொருளாதார மண்டலம் எவ்வாறு பாதிக்கும் என்பதை விரிவாக விளக்கும் வகையில் தொடர் கட்டுரையாக எழுதியிருக்கலாம். வந்தே மாதரம் பாடலின் வரலாற்றையும் எட்டப்பர்களின் தேசபக்த பஜனையையும் அம்பலப்படுத்திய கட்டுரை சிறப்பாக அமைந்துள்ளது. 14.10.06 அன்று நடந்த வாசகர் வட்டக் கூட்டத்தில், வழக்குரைஞர் இராமலிங்கம் அவர்கள், தகவல் அறியும் உரிமைச் சட்டம் பற்றி சிறப்புரையாற்றினார். இந்தச் சட்டம் இன்னுமொரு காகிதச் சட்டம்தான் என்பதையும், தகவல் தருவதும் மறுப்பதும் சம்பந்தப்பட்ட துறையின் விருப்பப்படிதான் இருக்கும் என்பதையும், இதற்கெதிராக எந்த நீதிமன்றத்திலும் முறையிட முடியாது என்பதையும் வாசகர்களுக்கு உணர்த்துவதாக அவரது விளக்கவுரை அமைந்தது.

– வாசகர் வட்டம், தஞ்சை.

• வந்தே மாதரம் பாடலின் பின்னே மறைந்துள்ள இந்துவெறியையும் கைக்கூலித்தனத்தையும் திரைகிழித்துக் காட்டியது, இளந்தலைமுறையினருக்குப் பெரிதும் பயனளிப்பதாக அமைந்தது. தன்னார்வக் குழுக்களின் கந்துவட்டிக் கொள்ளை பற்றி இதுவரை யாரும் வெளிக்கொணராத உண்மைகளை பு.ஜ. மட்டுமே காட்டியுள்ளது.

– வாசகர்வட்டம், திருச்சி.

## 22 – ஆம் ஆண்டில் புதிய ஜனநாயகம்

அன்பார்ந்த வாசகத் தோழர்களே,

இந்த இதழிலிருந்து புதிய ஜனநாயகம் 22-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

கடந்த 21 ஆண்டுகளில் நாட்டின் அரசியல் - பொருளாதார அரங்கிலும் அரசியல் போக்குகளிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பகுத்தாய்ந்து, ஆளும் வர்க்க அரசியலையும் சந்தர்ப்பவாதிகளின் சதிராட்டங்களையும் தோலுரித்து, புரட்சிகர மாற்று வழியை - மக்கள்திரள் வழியை முன்வைத்து புதிய ஜனநாயகம் சளையாமல் போராடி வந்துள்ளது. வெறும் கருத்துப் பிரச்சாரம் என்பதாக அல்லாமல், புரட்சிகர அமைப்பாளனாக உருவெடுத்திருக்கிறது. வாசகர்களும், வெறுமனே வாசகர்களாக இல்லாமல் புரட்சிக்காகச் செயல்படும் நிலைக்கு உயர்ந்திருக்கிறார்கள்.

இந்தப் புரட்சிகர பயணத்தைச் சாத்தியப்படுத்திய வாசகத் தோழர்களுக்கும் முகவர்கள் - விற்பனையாளர்களுக்கும் எமது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். புதிய ஜனநாயகத்தின் புரட்சிகர அரசியலைப் புதிய வாசகர்களிடம் கொண்டு சென்று விற்பனையை மேலும் விரிவுபடுத்துவீர்கள் என்று நம்புகிறோம். நாடு மீண்டும் காலனியாக்கப்படுவதற்கு எதிராகவும், இந்துவெறி பார்ப்பன பாசிசத்துக்கு எதிராகவும் பரந்துபட்ட மக்களிடம் அரசியல் விழிப்புணர்வூட்டும் மகத்தான கடமையை நிறைவேற்ற உங்களது உறுதியான ஆதரவுடன் 22-ஆம் ஆண்டில் எமது பயணத்தைத் தொடர்கிறோம்.

வாசகத் தோழர்கள் அனைவருக்கும் எமது நவம்பர் புரட்சிநாள் வாழ்த்துக்கள்!

*– ஆசிரியர் குழு.*

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHILPRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85 Regn. No: TN/CC(S)Dn/190/06-08 WPP No: TN/PMG/CCR/WPP-562/06-08

# உங்களின் இரக்கம் உண்மையானதா?


ஜார்கண்டு மாநிலத்தின் தன்பாத் மாவட்டத்திலுள்ள பாத்திஹ் நிலக்கரிச் சுரங்கத்தில் செப்.6-ந் தேதி முன்னிர வில் திடீரென்று ஏற்பட்ட தீ விபத்தில், தரை மட்டத்தில் இருந்து 500 மீட்டருக் குக் கீழே நிலக்கரியை வெட்டி எடுக்கச் சென்றிருந்த 50 தொழிலாளர்கள் பரிதா பகரமாக இறந்து போனார்கள். இரண்டு நாட்கள் கழித்துதான் அவர்களது உடல் கள் மீட்கப்பட்டன. அவர்கள் தலையில் அணிந்திருந்த சுரங்க விளக்கில் போடப் பட்டிருந்த எண்ணை வைத்துதான், இறந்து போன தொழிலாளர்களை அடையாளம் காண முடிந்தது. அந்தள விற்கு அவர்களின் உடல்கள் வெந்து கருகிப் போயிருந்தன.

நான்கு மாதங்களுக்கு முன்பு அரி யானா மாநிலத்தில் பிரின்ஸ் சந்தர் என்ற ஆறு வயதுச் சிறுவன் 60 அடி பள்ளத் திற்குள் விழுந்து உயிருக்குப் போராடி யதைப் பத்திரிகைகள் பரப்பரப்பான தலைப்புச் செய்தியாக வெளியிட்டன. இச்சிறுவன் உயிர் பிழைப்பதற்காக பலர் வேண்டிக் கொண்டதை தொலைக்காட்சிகள் திரும்பத் திரும்ப ஒளிபரப்பின. நாட்டில் கருணை செத் துப் போய்விடவில்லை எனப் பத்திரி கைகள் எழுதின. ஆனால், 500 மீட்டர் ஆழத்தில் மாட்டிக் கொண்ட நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களுக்காக, அவர்க ளின் உறவினர்களைத் தவிர, வேறு யாரும் கண்ணீர் விட்டதாகத் தெரிய வில்லை. அச்சிறுவனின் உயிரைவிட, இத்தொழிலாளர்களின் உயிர் எந்தவிதத் தில் குறைந்து போய்விட்டது?

அதிகார வர்க்கம் 50 தொழிலாளர் கள் செத்துப் போனதை ''விபத்து'' என் கிறது. ஆனால், பாத்திஹ் சுரங்கத் தொழிலாளர்களோ இதனைப் படு கொலை என்கிறார்கள். இந்த நிலக்கரிச் சுரங்கம் மிகவும் அபாயகரமான சுரங்கம் என அரசாலேயே வகை பிரிக்கப்பட் டுள்ளது. எனினும், இச்சுரங்கத்தில் உள்ள மின்சாரக் கம்பிகளை மாற்றியே 30 ஆண்டுகள் ஆகிவிட்டது என்றால், சுரங்கத்தில் இறங்கும் தொழிலாளியின் உயிருக்கு என்ன பாதுகாப்பு கிடைத்தி ருக்கும்?



கதறியழும் உறவினர்கள்



சுரங்கத்தில் இருந்து வெளியே எடுக்கப்படும் தொழிலாளர்களின் சடலங்கள்

இந்த 'விபத்து' நடந்த அதே சமயத்தில், வேலை வாய்ப்பில்லாத 30 ஏழை இளைஞர்கள் மேற்கு வங்க மாநிலத்தில் கைவிடப்பட்ட ஒரு நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து நிலக்கரியை எடுத்து வருவதற் காகச் சுரங்கத்தினுள் இறங்கியிருக்கிறார்கள். அப் பொழுது சுரங்கத்தினுள் ஏற்பட்ட திடீர் வெள்ளத் தில் மாட்டிக் கொண்ட இவர்களைக் காப்பாற்ற அதி கார வர்க்கம் பெரிய முயற்சி எதுவும் செய்ய வில்லை. மாறாக, இந்த இளைஞர்கள் நிலக்கரி யைத் திருடுவதற்காகச் சட்ட விரோதமாக சுரங்கத் தினுள் இறங்கியதாகத் திருட்டுப் பட்டம் கட்டித் தங்களின் பொறுப்பைத் தட்டிக் கழித்தார்கள். இப்ப டிப்பட்ட கல் நெஞ்சுக்காரர்கள் ஏழைகள் மீதும், தொழிலாளர்கள் மீதும் காட்டும் இரக்கம் உண்மை யானதாக இருக்க முடியுமா?

அதிகார வர்க்கத்தை விடுங்கள். தொலைக்காட் சித் தொடரைப் பார்த்து கண்ணீர் உகுக்கும் உங்க ளில் எத்தனை பேர், சுரங்கத் தொழிலாளர்கள் செத் துப் போனதற்கு அனுதாபப்பட்டிருப்பீர்கள்? நிழ லைப் பார்த்து அனுதாபப்படும் நீங்கள், நிஜத்தைப் பார்த்து மரக்கட்டை போல் இருக்கின்றீர்கள் என் றால், உங்களின் இரக்க குணம் உண்மையானதாக இருக்க முடியுமா?

''நாங்கள் ஒவ்வொரு நாளும் சுரங்கத்தினுள் இறங்கும்பொழுதும், உயிரோடு மீண்டு வருவோமா என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது'' என்கி றார்கள் பாத்திஹ் சுரங்கத் தொழிலாளர்கள். அவர் கள் தினந்தோறும் உயிரைப் பணயம் வைக்கவில் லையென்றால், நாட்டிற்கு நிலக்கரி கிடைக்காது; நிலக்கரி இல்லையென்றால், மின்சாரம் இருக்காது; தொலைக்காட்சிப் பெட்டியும் இருக்காது; கண்ணீர் வடிக்கும் தேவையும் உங்களுக்கு இருக்காது! •